# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 286 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 23, திங்கள் 08.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


08 SEP 2014

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



முத்தரப்புத் தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்கா

பக்கம் 18



## சைவப் பெருவிழா

உலக சைவத் திருச்சபையின் மாபெரும் சைவப் பெருவிழா 2014 நேற்று நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் இலங்கை வாழ் சைவத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான இறுவட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

22 ஆம் பக்கம் பார்க்க

# இறைமையை தமிழர்கள் கையளிக்கவே இல்லை

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை. சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.8
தமிழ் மக்கள், தமிழர்களின் இறைமையை எந்த ஒரு அரசுக்கோ, ஆட்சிக்கோ கையளிக்கவில்லை. மக்கள் எப்பொழுது ஒரு அரசுக்குத் தமது இறைமையை வழங்கச் சம்மதிக்கிறார்களோ அப்பொழுதுதான் அந்த அரசு இறைமையுள்ள அரசாகமாறும்–இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை.சேனாதிராசா.

"இறைமை மக்கள் பிறப்புரிமை. அது எப்பொழுதும் மக்களிடமே இருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கையின் எந்தவொரு அரசியலமைப்புக்கோ, ஆட்சிக்கோ தங்கள் சம்மதத்தைக் கொடுத்திருக்கவில்லை" என்று 1977 ஆம் ஆண்டே ரயல் அட் பார் சிறப்பு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு வவுனியாவில் நடைபெற்றது. நேற்றுக் காலை கட்சியின் பேராளர் மாநாடு இடம்பெற்றது. அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தை புதிதாக ஏற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தனது தலைமையுரையை நிகழ்த்தினார். மிக நீண்ட உரையாக அது அமைந்திருந்தது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்புக்கு மட்டுமல்ல குழப்பம்; தமிழ் மக்களுக்கும்தான் குழப்பம்

### வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டதன் ஊடாக என்கிறார் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், செப். 08
வடக்கு மாகாணசபை நிறுவப்பட்டதன் ஊடாக கொழும்பு அரசுக்கு எவ்வாறானதொரு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதோ, அவ்வாறானதொரு குழப்ப நிலை தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டின், இறுதி அமர்வு நேற்று மாலை இடம்பெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் இருக்கும் இராணுவம் புல் தின்றுகொண்டிருக்கவில்லை

### மக்கள் அதனை உணர வேண்டும் என்கிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், செப்.8
இராணுவத்தினர் வடக்கில் புல் தின்று கொண்டிருக்கவில்லை என்பதை எங்கள் மக்கள் உணர வேண்டும் என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர், இங்கு நிலை கொண்டுள்ள இராணுவம் தொடர்பான

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் மாநாடு இந்த ஆண்டு வேண்டும்

யாழ்ப்பாணம், செப்.8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாடு இந்த ஆண்டுக்குள் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

"தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகவும் விடிவுக்காகவும், அதன் தன்னாட்சிக்காகவும் நாம், போராடுவோம் என்ற தீர்மானத்தை இந்த மாநாட்டில் அறிவிப்போம்.

தமிழ் மக்களின், நீதி எங்கே கிடைக்கப் போகிறது என்ற ஏக்கமும், ஆதங்கமும் நெஞ்சைப் பிளக்கிறது. இதனால் இந்துமா சமுத்திரத்தில் பிராந்தி

19 ஆம் பக்கம் பார்க்க



காலக் கெடுவுக்கு பணிய மாட்டோம்

பக்கம் 3

## சுகாதார சீர்கேடு; மூடப்பட்டது உணவகம்

யாழ்ப்பாணம், செப்.8
சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த மற்றொரு உணவகத்துக்கும் 'சீல்' வைத்து மூடியது யாழ்ப்பாணம் நீதிமன்றம்.

காங்கேசன்துறை வீதியில் இயங்கி வந்த ஒரு உணவகம் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியதன் காரணமாகச் சில வாரங்களுக்கு முன்னர் சீல் வைத்து மூடியது யாழ். நீதிமன்று. அங்கு உரிய திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டது.

இந்தநிலையில் யாழ்.நகரில் மாநகர சபை எல்லைக்குட்பட்ட மற்றொரு உணவகமும் சுகாதாரச் சீர்கேடாக இயங்கியமை உட்பட 4 குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் யாழ்.நீதிமன்றால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வந்தார் ஜப்பான் பிரதமர்

கொழும்பு, செப்.8
ஒருநாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு விசேட விமானம் மூலம் ஜப்பானியப் பிரதமர் ஷின்ஷோ அபே மற்றும் அவரது பாரியார் அக்கி அபே நேற்று மதியம் ஒரு மணியளவில் இலங்கை வந்தனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்த ஜப்பானியப் பிரதமரை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேரில் சென்று வரவேற்று அழைத்துச் சென்றார். பின்னர் அவர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் வரவேற்று அலரி மாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் விசேட கலந்துரையாடலில் அவர் ஈடுபட்டார். ஜப்பானியப் பிரதமர் ஒருவர் 24 வருடங்களின் பின்னர் இலங்கை வந்துள்ளார். (ற)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்












தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டில் நேற்றுக்காலை இடம்பெற்ற நிகழ்வுகளின் படத் தொகுப்பு. (ற-421)



# நுவரெலிய பெண்ணுக்கு எபோலா தாக்கமில்லை



கொழும்பு, செப்.8

நுவரெலியா ரிகிலகஸ்கட வைத்தியசாலையில் கடந்த மாதம் 15 ஆம் திகதி உயிரிழந்த பெண் எபோலா வைரஸ் தாக்கத்துக்கு இலக்காகவில்லை என்று சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்த பெண்ணின் இரத்த மாதிரிகளை பரிசோதனை செய்த இந்தியாவின் ஆய்வு கூடத்தினர் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பாலித மஹீபால தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தின் புட்டர்பத்தி உள்ளிட்ட பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்ட குழுவின் அங்கத்தவரான குறித்த பெண், கடும் காய்ச்சல் காரணமாக ரிகிலகஸ்கட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தததை அடுத்து எபோலா வைரஸ் தாக்கத்துக்கு அவர் ஆளாகியிருக்க கூடும் என சந்தேகிக்கப்பட்டது. அதையடுத்த அவரது குருதி மாதிரிகள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. (ற)

# அவசரமாகக் கூடுகின்றது மனித உரிமை ஆணைக்குழு

## வன்முறைகள் அதிகரித்ததை அடுத்து

கொழும்பு, செப்.8

ஊவா மாகாணசபைத் தேர்தலில் இடம்பெறும் விதிமுறை மீறல் மற்றும் வன்முறைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அவசர கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மொனராகலையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது ஊவா தேர்தலில் இடம் பெறும் பெருமளவிலான தேர்தல் விதிமுறைமீறல்கள், வன்முறைகள், இயற்கை வளங்களுக் கான அச்சுறுத்தல்கள் என்பன குறித்து ஆராயப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் மனித உரிமைகள் ஆணைக் குழுவினர், தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் மாகாணத் தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர். (ற)

# வெளிநாட்டு படைகளுக்கு இலங்கையில் பயிற்சிகள்

## அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, செப்.8

வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புச் சேவைத் தளபதிகளுக்குத் தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்குவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்தப் பயிற்சிகள் கொடுப்பனவு மற்றும் இலவசம் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், சீனா, இந்தியா, மலேசியா, நேபாளம், பாகிஸ்தான், ருவண்டா, செனகல், சிங்கப்பூர், சூடான், வியட்நாம், துருக்கி ஆகிய நாடுகளின் இராணுவத்தினருக்கு இலவச பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றும், இந்தோனேசியா, மாலைதீவு, ஓமான், போன்ற நாடுகளின் இராணுவத்தினருக்கு கொடுப்பனவு அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சேமலாபநிதியை வழங்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு

கொழும்பு, செப்.8

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 36,000 ஊழியர்களுக்கு இதுவரையிலும் அவர்களுக்குச் சேரவேண்டியுள்ள ஊழியர் சேமலாபநிதித் தொகைகள் செலுத்தப்படாதிருப்பதால் அது தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு "மெண்டமுஸ்" கட்டளையொன்றை (கட்டாயச் செயற்பாடொன்றுக்கான நீதிமன்ற அனுமதி) விடுக்குமாறு அகில இலங்கை வாகனச் சேவை ஊழியர்களின் சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது. இந்த மனுவைக் கவனத்துக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி உபாலி அபேரத்ன பிரதிவாதிகளுக்கு நீதிமன்றக் கட்டளைகளை விடுத்துள்ளார்.

அதற்கமைய தொழில் ஆணையாளர் நாயகம், உதவி ஆணையாளர் நாயகம் (மக்கள் தொடர்பாடல்) தொழில் ஆணையாளர் (ஊழியர் சேமலாப நிதி), இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் மற்றும் நிதி முகாமையாளர் என்போர் ஒக்ரோபர் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் தோற்ற வேண்டியுள்ளது.

**இன்றளவில் ஊழியர் சேம லாப நிதித் தொகை 4,500 மில்லியன் ரூபாவாகும். ஊழியர் சேமலாபநிதி வழங்கப்படாமை தொடர்பில் போக்குவரத்துச் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொழில் ஆணையாளர்களுக்கு சட்ட அதிகாரம் உள்ளது**

இன்றளவில் ஊழியர் சேம லாப நிதித் தொகை 4,500 மில்லியன் ரூபா என்பதோடு ஊழியர் சேமலாபநிதி வழங்கப்படாமை சம்பந்தமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொழில் ஆணையாளர்களுக்கு சட்ட அதிகாரம் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ற)

# நீண்ட நேரம் தொலைபேசியில் பேசியவரை அடித்த அண்ணன்கள்

தென்மராட்சி, செப்.8

நீண்ட நேரம் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த சகோதரியை அண்ணன்கள் தாக்கிய சம்பவம் ஒன்று நேற்றுக் கொடிகாமத்தில் நடந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்கான யுவதி தற்போது சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காப்புறுதி நிறுவனமொன்றில் பணியாற்றும் யுவதி வாடிக்கையாளர் ஒருவருடன் நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருந்தார் என்றும் அதனால் சந்தேகம் கொண்ட அண்ணன்கள் தன்னைத் தாக்கினர் என்றும் அந்த யுவதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

உங்கள் திருமண சேவை இன்ப மனம்
உங்கள் மொபைல் Phone இலிருந்து 077 438 0900 இற்கு Miss Coll கொடுங்கள்.
'மேலதிக தகவலுக்கு, எங்கள் அலுவலகர் தொடர்புகொள்ளுவார்கள், எங்களுக்கு உங்களின் புகைப்படம் யாதகக்குறிப்பு என்பனவற்றை அனுப்பவும்.
உலகளாவிய ரீதியில் இணையத்தினுடாக தமிழ் உள்ளங்களை இணைக்கும் எங்களின் உன்னத சேவையினைப் பெற்று, உறவுகளுக்கு சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்
5 Wyman Rd, Nallur, Jaffna Sri Lanka.
Wyman @ real Matrimony.com.
021 492 3864, 021 492 3738, 021 492 3739
116B Dutch Rd, Chavakachcheri, Jaffna Sri Lanka.
Chava @ real Matrimony.com.
011 434 6128, 011 434 6130, 011 434 4229 (61729)(45.6.3)
மிஸ் கோல் செய்து 077 438 0900 வரன் தேடுங்கள்
(உங்களுடைய பெயர், பிறந்த திகதி SMS இல் அனுப்பவும்)

பக்கங்கள்: இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 23 திங்கள் (08.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 286

# தமிழரசுக் கட்சியின் காலக்கெடு பணிவதற்கு தயாரில்லை அரசு

## இருதரப்பு பேச்சுக்கும் இடமில்லை; தெரிவுக்குழுவே தீர்வுக்கு வழி; காலங்கடத்துவதே கூட்டமைப்பின் குறி என்கிறார் அமைச்சர் நிமல்

கொழும்பு, செப்ரெம்பர் 8

**தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசுக்கு டிசம்பர் 31 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி, அக்காலப்பகுதிக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் ஜனவரி முதல் தமிழர் தாயகமெங்கும் அறவழிப் போராட்டம் தொடரும் என பகிரங்கமாக அறிவித்துள்ள நிலை யில், தமிழரசுக் கட்சியின் மேற்படி அறிவிப்பைக் கண்டு அஞ்சப்போவதில்லை என்றும், தீர்வு விடயத்தில் அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடி பணியப் போவதில்லை எனவும் அரசு நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்தது.**

அதேவேளை, பிரச்சினைகளை இழுத்தடிப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருதரப்பு பேச்சை கோருகின்றது என்றும், அரசியல்தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு பொறிமுறையையே அரசு உறுதியாக நம்புவதாகவும் அதற்கு அப்பாலான வழிமுறையில் பயணிப்பதற்கு அரசு தயாரில்லை எனவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் சபை முதல்வருமான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இடித்துரைத்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில், அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பிரபா கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டனர்.

ஆரம்பத்தில் ஊவாமாகாணசபைத் தேர்தலையொட்டி அரசு முன்னெடுக்கும் பிரசார நடவடிக்கைகள், ஆளுந் தரப்புக்கான வெற்றிவாய்ப்பு நிலைவரம் உட்பட தேர்தல் சம்பந்தமாக மூவரும் விளக்கமளித்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டர் திருடியவர் வசமாக மாட்டினார்

யாழ்ப்பாணம், செப். 8

கீரிமலையில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தைத் திருடிச் சென்று சமையலறையில் மறைத்து வைத்திருந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கீரிமலை கரகம்புலம் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்தே குறித்த மோட்டர் திருடப்பட்டது. வித்தகபுரம் கீரிமலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே திருடியுள்ளார். அதனைக் கடதாசியால் சுற்றி சந்தேகநபர் தனது சமையலறை

(22ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவிலிருந்து குதிரைகளை ஏற்றிச்செல்ல அனுமதிக்கக் கூடாது

### நெடுந்தீவு பிரதேச செயலரிடம் வலியுறுத்தப்படவுள்ளது

யாழ்ப்பாணம், செப்.8

நெடுந்தீவில் இருந்து குதிரைகளை வெளியிடங்களுக்கு ஏற்றிச் செல்வதை எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கக் கூடாது என்று வடக்கு மாகாண விவசாயம், கால்நடை அபிவிருத்தி, சுற்றுச்சூழல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. விந்தன் கனகரத்தினம் ஆகியோர் நெடுந்தீவு பிரதேச செயலரிடம் வலியுறுத்தவுள்ளனர்.

நெடுந்தீவுக் குதிரைகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லும் செயற்பாட்டுக்கு நெடுந்தீவு மக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்திடம் இந்தச் செயல்களை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளனர். அதையடுத்து அவர் வடக்கு மாகாண விவசாய அமைச்சருடன் இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார். அத்துடன் அமைச்சருடன் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை நெடுந்தீவுக்குச் சென்று பொது மக்களையும் பிரதேச செயலரையும் சந்திக்கவுள்ளார்.

அந்தச் சந்திப்பின்போது வர

(22ஆம் பக்கம் பார்க்க)

## குழு மோதலில் ஐந்து பேர் காயம்

தென்மராட்சி, செப். 8

மிருசுவில் விடத்தற்பளைப் பகுதியில் நடந்த குழு மோதல் ஒன்றில் அதே இடத்தைச் சேர்ந்த ஐந்து பேர் காயடைந்துள்ளனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு.

(22ஆம் பக்கம் பார்க்க)

## கடை கதவு உடைத்து பொருள்கள் திருட்டு

### மந்திகையில் சம்பவம்

வடமராட்சி, செப். 8

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மருந்து விற்பனை நிலையம் ஒன்றின் கதவுகள் உடைக் கப்பட்டு அங்கிருந்த பல லட்சம் பெறுமதியான பால்மா வகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை

(22ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத செயற்பாட்டை கட்டுப்படுத்த விசேட குழு

### முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப்.8

கடந்த முதலாம் திகதி முதல் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத செயல்கள் குறித்து மக்கள் தகவல் வழங்குமிடத்து அது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்று தெரிவித்துள்ளார் முல்லைத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## பணியாளரது வரவுப் பதிவேட்டை பேணவேண்டியது கட்டாயமாகும்

### அறிவுறுத்துகின்றார் வடக்கு மாகாண பிரதி தொழில் ஆணையாளர்

யாழ்ப்பாணம், செப். 8

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான வரவுப் பதிவேட்டை ஒவ்வொரு தொழில் தருநர்களும் பேண வேண்டியது கட்டாயமாகும். அது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை தொழில் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன்.

தொழில் சட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.வர்த்தக சங்கத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டாவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"யாழ். மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாளர்களது வரவுப் பதிவேட்டைத் தினமும் பேண வேண்

(22ஆம் பக்கம் பார்க்க)

இன்றிலிருந்து அதிரடியான ஐரோப்பிய வாரம்....
இது வெறும் வாய்ச்சவடால் அல்ல
வென்றுவந்த விசாக்களை ஆய்வுசெய்யலாம்
சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி
100% விசா உறுதிப்பாட்டுடன் விசா ஆலோசனை
4 பேருக்கு
11.09.2014 வரை மட்டும்
(நிபந்தனைகள்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021221 9016, 021 568 9090
(51837)(10)

## மகளைக் கடத்துவோம் என மிரட்டி தாயிடம் கப்பம் கேட்டோர் சிக்கினர்

யாழ்ப்பாணம், செப்.8

பருத்தித்துறைப் பகுதியில் பாடசாலை மாணவியான மகளைக் கடத்துவோம் என்று தாயை மிரட்டி கப்பம்பெற்ற 5 பேரை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து இரு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

18 வயதுடைய குறித்த மாணவியின் தாயைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட இனந்தெரியாதவர்கள், எமக்குப் பணம் கப்பமாகத் தர வேண்டும். இல்லாவிட்டால் மகளைக் கடத்துவோம் என்று மிரட்டியுள்ளனர். இவ்வாறு தாயை மிரட்டி மூன்று தடவைகளில் 75 ஆயிரம் ரூபா வரை அவர்கள் கப்பமாகப் பெற்றுள்ளனர்.

இந்தநிலையில், அதேபாணியில் நேற்றுமுன்தினமும் அவர்கள் கப்பம் பெற முயன்றுள்ளனர். தாம் பருத்தித்துறை நகரப் பகுதியில் நிற்பதாகவும், பணத்தைக் கொண்டு வந்து தருமாறும் அவர்கள் கூறியுள்ளனர். இது குறித்து உடனடியாகப் பொலிஸாருக்கு முறையிடப்பட்டது:

அதையடுத்து தாயை குறித்த இடத்துக்கு அனுப்பிவிட்டு பொலிஸார் சிவிலுடையில் மறைந்திருந்தனர். சந்தேக நபர்கள் இருவர் மோட்டார் சைக்கிளிலும், மூவர் பஸ்ஸிலும் வந்து அங்கு கூடியுள்ளனர். அப்போது பொலிஸார் அதிரடியாக அவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் உடுப்பிட்டி, வதிரி, கலிகை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 22, 24, 27, 29, மற்றும் 30 வயதுடையவர்கள் என்று தெரிவித்தனர். குறித்த ஐவரும் நேற்று பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ.கே.நடராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ற-109)

## ஓட்டோவில் கஞ்சா விற்ற நபர் கைது

யாழ்ப்பாணம், செப்.8

ஓட்டோவில் கஞ்சா விற்பனை செய்தார் என்று கூறப்படும் ஒருவர் ஓட்டோவில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவரிடம் இருந்து 100 ரூபா மற்றும் 50 ரூபா தாள்கள் கொண்ட 45 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இளவாலைப் பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இளவாலைப் பகுதியைச் சேர்ந்த, 22 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரது ஓட்டோவும்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாதாந்த பௌர்ணமி அரங்கம் இன்று

சாவகச்சேரி, செப்.8

சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி உப பணிமனையும் தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நினைவு நிதியமும் இணைந்து நடத்தும் மாதாந்த பௌர்ணமி அரங்கம் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தையா கனகம்மா நினைவு நிதிய காப்பாளர் க.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு 2014 டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்காக நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் வளவாளராக இரா செல்வவடிவேல் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார். சகல மாணவர்களையும் கலந்து பயன்பெறுமாறு நிதியத்தின் காப்பாளர் தெரிவித்துள்ளார். (வ-131)




GATEWAY CfICT

உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரை.....

விடுமுறை நாட்களைப் பயனுடையதாக்குங்கள்

DIPLOMA IN COMPUTER STUDIES/
INTERNATIONAL COMPUTER DRIVING LICENSE (ICDL)

ICDL International Computer Driving Licence
e-Citizen

*Ideal course for a beginner who is seeking knowledge in computing that would help him/her in day-to-day work. The course is also an ideal foundation to enter the world of Information & Communication Technology.*

*This course prepares you for the ICDL qualification which is recognised in any part of the world. On successful completion of the course, you would qualify for the ICDL certificate awarded by the ECDL foundation and the Diploma awarded by Gateway.*

GATEWAY

*Centre for Information & Communication Technolgy*

*337, Kasthuriyar Road, Jaffna. (E) gatewayjfn@sltnet.lk, (P) 021 567 5555*

Branches: *#1, New Market Building, Chavakacheri. 021 567 8444* | *#55, Point Pedro Road, Nelliady. 021 567 7606* | *Karadippokku Junction, A9 Road, Kilinochchi. 021 567 4433*

**வேலை ஆள்கள் தேவை**

மாட்டுப் பண்ணை ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்/ பெண் தேவை.
தொடர்பு: 075 264 2824 (51818) (45.3)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

பூநகரி மட்டுவில் நாடு-சங்குப்பிட்டி பிரதான வீதியில் வாடியடி சந்திக்கு மிக அண்மையில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் வைத்திய சாலைக்கு நேர் எதிராக வீடு, கிணற்றுடன் அமைந்துள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
077 124 7425, 077 677 1048,
021 227 0410 (47268)(7.6)



**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்**


இருப்பகற்றல் மற்றும்
மலிவு விற்பனையை முன்னிட்டு
ஜெயசாயி இல் விற்பனை செய்யும் அனைத்து
பொருள்களும் குறித்த விலையில் இருந்து
அரைவாசி விலைக்குப் பெற்றுக்
கொள்வதுடன் 6, 7, 8 ஆகிய தினங்களில்
3000/= ரூபாவிற்கு மேல் கொள்வனவு
செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களும்
பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

6, 7, 8 மட்டும்

114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(51760)(7.6)



**மணப்பந்தல் விற்பனைக்குண்டு**



50 அடி சீலிங் பந்தல் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 412 1647 (49764) (4.3.6)



29 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள் (கிழமை நாள் மட்டும்)

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 14-09-2014
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 15-09-2014
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 விசாகம் 3ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமற்ற கிரகபாவம் 23½ உடைய அரச உயர் பதவியிலுள்ள மணமகனுக்கு வங்கி, ஆசிரிய மற்றும் அரச தொழில் புரியும் மணமகள் தேவை.
தொடர்பு: 077 037 7249 (51815) (45.3)

**மணமகள் தேவை**

இந்து குடும்பம், 1981 அவிட்டம் 3 ஆம் பாதம் 37½ கிரகபாவம், 12 இல் செவ்வாய் தச்சுத்தொழில் புரியும் மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் தேவை.
தொடர்பு: 077 802 1191 (51753) (4.6.3)

**A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான**

| | |
|---|---|
| Diploma in Information Technology | DiTec |
| Diploma in Office Automation | DOA |
| Diploma in Pc Applications | DPCA |
| Adv. Dip. in Hardware & Networking | ADHN |
| Dip. in Video Production & Multimedia | DVPM |
| Dip.in Web Designing & Development | DWD |
| Dip. in Computerized Accounting | DCA |

Tally, JAVA, AutoCAD

75% OFF



DMI COMPUTER EDUCATION

யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து
Spoken English
Veta Fluency Diploma

முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்விக்கு

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I - 08/ 09 /2014 9.30 am
பிரிவு ii - 10/ 09 /2014 9.30 am

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0775 | No.130, K.K.S. வீதி, (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970 |

# 2015 ஆம் ஆண்டுக்கான 'பட்ஜெட்' குறித்த கலந்துரையாடல்




வலி.வடக்கு, செப்.8

2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பான வடமாகாண அமைச்சின் அமைச்சர்கள், அதிகாரிகளுடனான கலந்துரையாடலும் முன்மொழிவுகள் குறித்த விளக்கங்களும் யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் பகல் 11 மணியளவில் இடம்பெற்றது

திறைசேரியின் செயலாளர் பி.ஜெயசுந்தர, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், வட மாகாண சபை அமைச்சர்களான கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் உட்பட மற்றும் பலர் மங்கல விளக்கை ஏற்றி வைத்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் திறைசேரியின் செயலாளர் பி.ஜெயசுந்தர, வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் திறைசேரியின் பிரதிச் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(வ-86)

# திருடிய மோட்டார் சைக்கிளை கைவிட்டுத் தப்பிய திருடர்கள்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி.செப்.8

கிளிநொச்சி திருநகரில் வீட்டு முற்றத்தில் நின்ற மோட்டார் சைக்கிளை கடந்த 5 ஆம் திகதி இரவு திருடிச் சென்ற திருடர்கள் வீதியால் சென்றவர்களைக் கண்டு மோட்டார் சைக்கிளை வீதியில் விட்டுத் தப்பியோடியுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி திருநகரிலுள்ள வீட்டுவளவு ஒன்றுக்குள் நேற்று முன்தினம் இரவு உள் நுழைந்த திருடர்கள் வீட்டிலுள்ளவர்கள் நித்திரைக்குச் சென்றவுடன் உ.இராதாகிருஷ்ணன் என்பவரின் மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றுள்ளார்கள். மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்று 500 மீற்றரளவு தூரத்தில் வைத்து இயக்க முற்பட்ட வேளை வீதியால் வெளிச்சத்துடன் பயணிகள் வருவதை அவதானித்த திருடர்கள் மோட்டார் சைக்கிளை அங்கு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள். மோட்டார் சைக்கிள் சொந்தக்காரர்கள் அதிகாலை பார்த்த போது வீட்டில் மோட்டார் சைக்கிள் இல்லாதமையால் தேடிவிட்டு கிளிநொச்சிப் பொலிஸில் முறையிட்டுள்ளனர். அதன் பின்னர் அவரது வீட்டிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் ஒழுங்கை ஒன்றில் மேற்படி மோட்டார் சைக்கிள் அநாதரவாக நிற்பதை அவதானித்த அயலவர்கள் குறிப்பிட்ட நபருக்கு அறிவித்தனர். இதனையடுத்து மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. இந்த விடயம் குறித்தும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(த-426)

# பரிசில் வழங்கல்

சுழிபுரம், செப்.8

பண்டிதர் ஆறுமுகம் அற்புதமலர் அறக்கட்டளை பத்தாவது ஆண்டு பரிசில் வழங்குதலும் நினைவு தினமும் இன்று திங்கட்கிழமை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அறக்கட்டளைத் தலைவர் த.துரைலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அறக்கட்டளை நிர்வாக உறுப்பினர் க.வாமதேவன் வரவேற்புரையையும், நினைவுரையை ஆசிரியர் அ.குகதாசனும் நிகழ்த்துவர். அறக்கட்டளையில் குறிப்பிட்ட 9 பாடசாலையில் சித்திய டைந்த 70 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள் என.

(வ-28)

# நிறைமதி கலைவிழா நெல்லியடியில் இன்று

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கல்வி வலயம் நடத்தும் நிறைமதி கலை விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ராசேந்திரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி சுகந்தி செபஸ்ரினும் கலந்து கொள்வர்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனம், ஞானசாரிய கல்லூரி மாணவன் த.ஜெனோசனின் தனி நடனம், மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் சிறுவர் நடனம், நெல்லியடி மத்திய கல்லூரி மாணவர்களின் குழு நடனம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் அபிநயப் பாடல், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகளின் குழு நடனம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்களின் நாட்டார் இசை, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவிகளின் தேயிலைக் கொழுந்து நடனம் என்பன இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து இயல், இசை, நாடகம் மற்றும் நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். அதை அடுத்து பொதுப் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகள் பெற்ற பாடசாலைகள் மட்டுமன்றி மாணவர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

(ஒ-108-173)

# தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்.செப்.8

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் புதிய தொழிற்பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முழுநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் நடத்தப்பட்டு வரும் நிலையில் பகுதி நேர பயிற்சிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வாகன இயந்திர திருத்துநர், வீட்டு மின் இணைப்பாளர், தொழிற் சாலை மின் இணைப்பாளர், மோட்டார் சைக்கிள் இயந்திர திருத்துநர், முகம் மற்றும் சிகை அலங்கரிப்பாளர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர் உட்பட்ட கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆர்வமுடையவர்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்திலோ அல்லது பயிற்சி நிலையங்களிலோ எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

(வ-14)



# துணுக்காய் வலயப் பாடசாலைகளில் 107 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள்

## கல்வி நடவடிக்கைகள் பெரும் பாதிப்பு

முல்லைத்தீவு, செப்.8

துணுக்காய் கல்வி வலயத்துக் குட்பட்ட 60 பாடசாலைகளில் 8ஆயிரத்து 577 மாணவர்கள் கல்வி பயில்கின்ற நிலையில் 107 ஆசிரியர்கள் பற்றாக் குறையுடன் அவை 3 ஆம் தவணை கல்வி நடவடிக்கை களுக்காகக் கடந்த திங்கட் கிழமை ஆரம்பமாகியுள்ளன.

இதனால் கிராம மட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர் இடைவிலகும் சந்தர்ப்பமும், சிறுவர் தொழிலாளிகள் உருவாகும் சாத்திய மும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் பணியாற்றிய ஆசிரியர் களில் 76 பேர் ஆசிரியர் பயிற் சிக் கலாசாலைக்குப் பயிற் சிக்காக சென்றுள்ளமையா லேயே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ உயர்தரப் பாடங்களில் முறையே தமிழ்-2, இந்து நாகரிகம்-2, வரலாறு-3, வர்த்தகம்-3, கணக்கியல்-2, பொருளியல்-3 எனப் 15 ஆசிரியர்களும்- இடைநிலைப் பிரிவில் கணிதம்-2, விஞ் ஞானம்-3, ஆங்கிலம்-4, தமிழ்-3, உடற்கல்வி-2, வர லாறு-2 என 16 ஆசிரியர் களும் உட்பட மொத்தம் 107 ஆசிரியர்களுக்குப் பற்றாக் குறை காணப்படுகிறது.

அத்துடன் பாலைப்பாணி அ.த.க.பாடசாலை,அம்பகாமம் அ.த.க.பாடசாலை , புலுமச்சி நாதகுளம் அ.த.க.பாடசாலை, அலைகல்லுப்போட்ட குளம் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளிலும் அதிபர் மட்டுமே பணியாற்றுவதால் அதிபர் பாடசாலை சார்பான வேறு விடயங்களுக்குச் செல் கின்றபோது பாடசாலையை மூடிவிட்டே செல்லவேண் டியுள்ளது.

இதனால் கிராம மட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர் இடைவிலகும் சந்தர்ப்பமும், சிறுவர் தொழி லாளிகள் உருவாகும் சாத்திய மும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

எனவே வடக்கு மாகாண கல்வி அமைச்சர், இந்த விட யத்தில் கவனம் எடுத்து விரை வாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என பாதிக்கப்பட் டுள்ள மாணவர்களின் பெற் றோர்களும் சமூக ஆர்வலர் களும்கோரியுள்ளனர்.(த-500)

## விபத்தில் சிக்கியவரை கைவிட்டு சென்றது அம்புலன்ஸ் வாகனம்

புதுக்குடியிருப்பு, செப்.8

விபத்தில் சிக்கிக் காயமடைந் தவர் வீதியில் கிடந்தவேளை அந்த வழியால் சென்ற அம் புலன்ஸ் வாகனம் வேடிக்கை பார்த்துவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப் படுகின்றது.



கோப்புப்படம்

கடந்த 29 ஆம் திகதி மாலை 5 மணியளவில் புதுக்குடியிருப்பில் இருந்து முள்ளியவளை நோக்கி முல்லைத்தீவு பிரதான வீதியூடாகச் சைக்கிளில் சென்ற புதுக்குடியிருப்பு கமநல சேவை பெரும் பாக உத்தியோகத்தர் கதிர் காமத்தம்பி மகாதேவ ராசா (வயது-59) முல்லைத் தீவு செல்வபுரம் பகுதி வீதியில் விபத்துக்குள்ளாகி நடு வீதி யில் விழுந்து கிடந்துள்ளார். அவ்வேளை அந்த வீதியூ டாகச் சென்ற அம்புலன்ஸ் வாகனம் அவ்விடத்தில் நின்று வேடிக்கை பார்த்து விட்டுச் சென்றதாகக் கூறப்ப டுகிறது. இந்தச் செயலால் அந்தப் பகுதி யில் நின்ற மக்கள் விசனம டைந்தனர். உயிர்களைக் காக்க வேண்டியவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது கவ லைக்குரிய விடயம் என மக் கள் மேலும் கூறினர். (த-433)


சாவகச்சேரி இந்துவின் கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை (North wood) ஐ வசிப்பிடமாகவும் கொண்டவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்-ஆசிரியர் சங்கத்தின் பிரித்தானியாக் கிளையின் முன்னாள் தலைவரும் தற்போதைய போசகருமாகிய

ஸ்ரீமான் பொன்னம்பலம் விஜயராஜன் (விஜயன்)

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். கல்லூரியின் வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டவரும் கல்லூரியின் நூற்றாண்டு கேட்போர் கூடத்தை அமைப்பதற்கு அல்லும்பகலும் உழைத்தவரும் கல்லூரிக்கென தனது பங்களிப்பாக ஒரு உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணிக்க எண்ணம் கொண்டிருந்த விஜயன் அவர்களது இழப்பு எமக்கு ஈடு செய்ய முடியாததொன்றே.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், அன்பு மாணவர்கள்,
(சி/16551)(4.3.6) பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) சாவகச்சேரி.


## 10, 500 மாற்றுத் திறனாளிகளில் 1,000 பேர் முள்ளந்தண்டு பாதிப்பு

முல்லைத்தீவு, செப்.8

முல்லைத்தீவு மாவட்டத்தில் 10ஆயிரத்து 500 மாற்றுத்திறனாளிகளில் 1,000 பேர் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களாக உள் ளனரென முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் கீ.சகிலா தெரிவித்தார்.

கிளிநொச்சி பரந்தனிலுள்ள விழிப்புலனற் றோர் சங்கத்தில் கடந்த 4ஆம் திகதி நடை பெற்ற மாதாந்த உலர் உணவு வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருமளவிலான மாற்றுத்திறனாளிகளை கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச அதிபர் ஊடாக சிறிதள வான உதவிகள் கிடைக்கின்றன. கிடைக்கின்ற உத விகள் மாற்றுத்திறனா ளிகளின் வாழ்வாதா ரத்துக்கு போதுமான தாக இல்லை.

நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்கின்ற மாற்றுத்திறனாளிக ளுக்கு கூடுதலான உதவிகள் கிடைக்க வேண்டும். முள்ளந் தண்டு பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிறைய உதவிகள் வேண் டும். கிளிநொச்சியில் விழிப்புலனற்றோரை பார்க்கின்றபோது நம்பிக்கை கூடுதலாக பிறக்கின்றது.



விழிப்புலனற்றோ ரின் செயற்பாடுகள் மாற்றுத் திறனாளி கள் எல்லோருக்கும் நம்பிக்கை தருவ தாக இருக்கின்றன. புலம்பெயர்ந்த எமது உறவுகள் மற்றும் உதவி அமைப்பு கள் மாற் றுத்திறனா ளிகளின் வாழ்வாதாரத்துக்கு கூடுதலான உதவி களை வழங்கவேண்டும்- என்றார். (த-18)


பத்தாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்



அமரர் பண்டிதர்
அ.ஆறுமுகம்

தோற்றம் 18.12.1917
மறைவு 08.09.2004

பத்து ஆண்டுகள் மறைந்தாலும் தங்களது நினைவை, திறமையை நாம் மறக்க மாட்டோம் நினைவு கொள்கின்றோம். தங்களால் ஆக்கப்பெற்ற விசவத்தனை முருகப்பெருமான் அருள் கடாட்சத்தை சிறப்புடன் கூறும் ஆறு நூல்கள் எங்கள் கைவசம் உள்ளன.

ஆலய மணிஓசை கேட்பது போல் தங்களது பாடல் ஓசை கேட்ட வண்ணமாகவுள்ளது.

பண்ணாகம் மெய்கண்டான் வரலாறு கூறும் நூல்கள் வெள்ளி விழா, பவளவிழா மலர்கள் ஆகியவற்றை ஆக்கியவர்களில் தாங்கள் ஒருவராக விளங்கியதை நாம் அறிவோம். தங்களை மறவாது ஆண்டு தோறும் நினைவு கொண்டு அஞ்சலி செய்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம். (51296)(4.3.6)

அறக்கட்டளை,
நினைவுக்குழுவினர்.



நினைவலைகள்

எட்டாம் ஆண்டு
வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி
ஸ்ரீ நடராஜா
(பத்திரிகையாளர்)



பிறப்பு 13 . 10 . 1947
இறப்பு 20 . 07 . 2006

பத்தாம் ஆண்டு
கலாநிதி சிலோன் விஜயேந்திரன் M.A.D.Lit
(வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி இராஜேஸ்வரன்)
(கவிஞர், நடிகர்)



பிறப்பு 03 . 01 . 1946
இறப்பு 30 . 08 . 2004

திதி : 08.09.2014

கல்லடி வேலன் என்ற கவிச் சிங்கம் வழியில் வந்தே
நல்லுலகினிலே நீவீர் நற்புகழ் நாட்டிவிட்டே
தொல்லுலகிதனை நீத்தே துறக்கத்தை அடைந்தீர் என்றே
சொல்லெலாம் துயரை மாற்ற சகோதரரே வழிதான் உண்டோ?

பாசத்துடன் நினைவுகூரும்
சகோதரிகள் - திருமதி பாலசரஸ்வதி சந்திரன், திருமதி சகுந்தலா யசோதரன்,
செல்வி தேவகி இரத்தினசபாபதி (பிரான்ஸ்)
(51798)(7.6.3)



10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நடராசா
முத்துராசா

திதி: ஆவணிப் பூரணை

மண்ணில் 18.06.1933
விண்ணில் 30.08.2004

ஆண்டுகள் பத்து ஆனபோதும் ஐயா!
உங்கள் நினைவுகள் இன்னும் நீங்கவில்லை
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து
எமது சந்தோஷத்திற்காகவே வாழ்ந்தீர்கள் ஐயா!
இப் புவிதனை விட்டு நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்முடன் என்றும் நிலைத்திருக்கும் ஐயா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"தனு கோபி மகால்"
78, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## அமெ. இந்து கோயில்களில் செப். 11 இல் குருதிக்கொடை

வொஷிங்டன், செப்.8
அமெரிக்காவில் வர்த்தக மையம் தகர்க்கப்பட்ட 13 ஆவது நினைவு தினம் எதிர் வரும் வியாழக்கிழமை நினைவு கூரப்படுவதை முன்னிட்டு, சிறப்பு குருதிக்கொடை முகாம்களை நடத்த அமெரிக்காவிலுள்ள இந்து கோயில்கள் முடிவு செய்துள்ளன.
நான்காவது ஆண்டாக நடைபெறும் இந்தக் குருதிக் கொடை முகாம்களை அந்த நாட்டின் இந்து கோயில்கள் நிர்வாக மாநாடு அமைப்பு ஒருங்கிணைக்கிறது.
வட அமெரிக்காவிலுள்ள சுமார் 600 கோயில்கள் இந்த அமைப்பின் அங்கம் வகிக்கின்றன.
யோகாசனப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் உயர் கல்வி மாணவர்கள் சங்கம் போன்ற கல்வி அமைப்புகளும் இந்த குருதிக்கொடை முகாம்களுக்கான ஏற்பாட்டில் பங்கேற்கின்றன. (வ)


பொஸ்னியாவில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நில அதிர்வில் அங்குள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கி காயமடைந்த தொழிலாளர்களை மீட்பு பணியாளர்கள் சிகிச்சைக்காகக் கொண்டுவந்தபோது.... (வ)

## சீனாவில் வாகன விபத்து

### 11 பேர் சாவு

பீஜிங், செப்.8
சீனாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.
வடகிழக்கு சீனாவின் கன்சு மாகாணத்தில் உள்ள ஹூயன் ஜியன் பகுதியில் இருந்து விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் 3 சக்கர வாகனத்தில் 14 பேர் பயணம் செய்தனர். மலைப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த அந்த வாகனம், ஒரு வளைவில் இறங்கும்போது திடீரெனக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் வாகனத்தில் பயணம் செய்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்தவர் களில் 9 பேர் சிகிச்சை பயனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தனர். மேலும் மூவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின் றனர். (வ)

## ஐ.எஸ்.அமைப்பை ஒழிக்க தயாராகிறது அமெரிக்கா

### 9 நட்பு நாடுகளின் உதவியை நாடுகிறார் ஒபாமா

வொஷிங்டன். செப்.8
சிரியாவிலும் ஈராக்கிலும் தம்மைப் பலப்படுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ்.என்ற இஸ்லாமிய தேசப் போராளிகளுக்கு எதிராகப் போராட சுமார் 9 நட்பு நாடுகளின் உதவியை நாடியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
10 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ், ஈராக் மீது போர் தொடுத்து அனேகமாக எதிர் மறை விளைவையே சந்தித்திருந்த நிலையில் ஜனாதிபதி ஒபாமா நேரடியாக போர்க் களத்தில் இறங்குவதற்கு யோசித்து வருவது இந்த முடிவின் மூலம் புலனாகியுள்ளது.
ஈராக்கிலும் சிரியாவிலும் குறைந்தது 10,000 இஸ்லாமிய தேசப் போராளிகள் பிரிட்டன் அளவுக்கு விசாலமான நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அதற்கென ஓர் கலிபாவையும் ஐ.எஸ்.ஐ.எஸ். நியமித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில்



அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பல தரப்புக்களிடமிருந்தும் அதிக அழுத்தத்தை எதிர் கொண்டு வருகின்றார். தற்போது ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். நிலைகள் மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் வான் தாக்குதல் ஐ.எஸ். ஐ.எஸ். இடம் தாம் இழந்த நிலப் பகுதிகளை சிரிய கிளர்ச்சிப் படை மீளக் கைப்பற்றுவதற்கு உதவியாக அமைந்து வருவதாகவும் இதில் ஏனைய நட்பு நாடுகளும் இணைந்து எம்மைப் பலப்படுத்த வேண்டும் எனவும்ஒபாமா இதனால்கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் ஐ.எஸ். ஐ.எஸ். விவகாரத்தில் தாம் இப்போது மிக நிதானமாக சரியான திசையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றோம் என்றும் ஒபாமா தெரிவித்துள்ளார். சிரியாவிலுள்ள ஐ.எஸ். ஐ.எஸ். இலக்குகள் மீது அமெரிக்கா இன்னமும் விமானத் தாக்குதல் நடத்துவது குறித்து முடிவெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும்நேட்டோ அமைப்பில்அங்கம் வகிக்கும் நாடுகள் வேல்ஸ் நகரில் ஒன்றுகூடி இஸ்லாமிய தேசப் போராளிகள் மீது தாக்குதல் தொடுப்பது குறித்து ஆலோசித்துள்ளது. (வ)

## பாம்புக்கு பயந்து முடங்கிய நகரம்



நெதர்லாந்தின் நகரம் ஒன்றில் பாம்புக்கு பயந்து மக்கள் தங்கள் வீட்டை விட்டு வெளிவராமல் முடங்கி கிடக்கின்றனர்.
நெதர்லாந்தின் தென் பகுதியில் உள்ள பிரடா நகரில் பாம்புகள் மற்றும் முயல் போன்ற சிறிய மிருகங்களை கண்ணாடி கூண்டுகளில் வைத்து வளர்த்து வருகின்றனர்.
அவ்வாறு வளர்க்கப்பட்ட கொடிய விஷம் கொண்ட நாகப்பாம்பு ஒன்று அங்கிருந்து தப்பி டிரிம்மெலான் நகருக்குள் புகுந்துள்ளது.
அந்த பாம்பு கடித்தால் இறப்பு நிச்சயம் என்பதால், அதை பிடிக்க தீவிர ஏற்பாடுகளை நகராட்சி நிர்வாகம் செய்துள்ளது. அதுவரை பொது மக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என இணையத்தளத்தில் உத்தர விடப்பட்டுள்ளது.
எனவே அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளின் கதவுகள் மற்றும் ஜன்னல்களை பூட்டி கொண்டு உள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர்.
மேலும் இந்த பாம்பு சுமார் 70 செ.மீ. அளவு கொண்டது என்று கூறப்படுகிறது. (வ)

## அமெரிக்காவில் மீண்டும் தென்பட்ட பறக்கும் தட்டு?

வொஷிங்டன் , செப்.8
அமெரிக்காவில் பறக்கும் தட்டு ஒன்று மீண்டும் தென்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பென்சில்வேனியா நகரில் வசிக்கும் ஸ்டீபானி வில்கெர்சன் என்ற பெண்மணிக்கு ஒரு விநோத அனுபவம் கிடைத்தது. அவர், தனது வீட்டில் இருந்தபோது நள்ளிரவில் தற்செயலாக வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது கண்களுக்கு சற்று தொலைவில் பல வண்ணங்களுடன் கூடிய ஒளிவட்டம் ஒன்று தெரிந்தது. உடனே இது குறித்து அயல் வீட்டில் இருந்த இளைஞருக்கு தெரிவித்து அவரிடமிருந்த தொலை நோக்கியை வாங்கி அந்த வண்ண ஒளி வட்டத்தை இருவரும் பெரிதாக்கிப் பார்த்தனர். பின்னர் அந்த காட்சியை செல்போனில் படம் பிடித்துக் கொண்டே அவசர உதவி நிலையத்துக்கு தகவலும் தெரிவித்தனர்.
இதுகுறித்து ஸ்டெபானி கூறுகையில்;
இந்த ஒளிவட்டம் விமானம் சென்றதால் ஏற்பட்டதோ என்று நினைத்தேன். ஆனால் அந்த ஒளிவட்டம் 20 நிமிடங்கள் அங்கேயே இருந்தது. மேலும் அந்த வண்ண நிறங்கள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருந்தன என்றார். பென்சில் வேனியா விமான நிலைய அதிகாரிகள், அந்த குறிப்பிட்ட நேரத்தில் விமான இயக்கம் எதுவும் அந்தப்பகுதியில் நடக்கவில்லை என்றனர். அந்த ஒளிவட்டம் வேற்று கிரகத்தின் பறக்கும் தட்டா என்ற மர்மத்துக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. (வ)



## யானைப் பறவையின் முட்டை பிரமாண்டமான ஏலம்

உலகிலேயே மிகப் பெரிய பறவை இனமான யானைப் பறவை இனம் கடந்த 17 ஆம் நூற்றாண்டிலேயே முற்றிலும் அழிந்து விட்டது. மடகஸ்கார் தீவில் கண்டுபிடிக்கப்பட்ட, பிரமாண்டமான யானைப் பறவையின் முட்டை ஏலத்துக்கு வருகிறது. இந்திய பெருங்கடலில் தென் ஆபிரிக்காவுக்கு கிழக்கே உலகிலேயே 4 ஆவது பெரிய தீவான மடகஸ்கார்தீவு அமைந்துள்ளது. அங்கு யானை பறவை உள்ளிட்ட அரிய வகை பறவையினங்கள் 17 ஆம் நூற்றாண்டில் இருந்தன. பின்னர் அவை முற்றிலும் அழிந்துவிட்டன. ஆனால் மடகஸ்கார் தீவில் கண்டு பிடிக்கப்பட்ட யானைப் பறவையின் பிரமாண்டமான முட்டை பிரிட்டனில் ஏலத்துக்கு வர உள்ளது.
இதுதொடர்பாக சம்மர் பிளேஸ் ஏல நிறுவனத்தின் தலைவர் எர்ரோல் புல்லர் கூறியதாவது:- யானைப் பறவை இனம் தொடர்பாக பல புத்தகங்களை எழுதியுள்ளேன். மடகஸ்கார்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட முட்டை, மற்ற பறவைகளின் முட்டைகளைவிட மிக பெரிதாக உள்ளது. டைனோசர் முட்டையை விட இது பெரியது. நெருப்புக் கோழி முட்டையை விட 8 மடங்கும், கோழி முட்டையை விட 100 மடங்கும் பெரியது. இது போன்ற முட்டையை, எனது வாழ்நாளில் இதுவரை கண்டதில்லை. ஒரு அடி நீளத்துக்கு இது உள்ளது. தற்போது இந்த முட்டையை பறவையின ஆய்வாளர்கள் பரிசோதித்து வருகின்றனர். இந்த முட்டையை எதிர்வரும் நவம்பர் மாதம் ஏலத்தில் விட இருக்கிறோம். அனேகமாக இது ரூ.50 லட்சத்துக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கிறேன்- இவ்வாறு எர்ரோல் புல்லர் கூறினார். (வ)



# காஷ்மீரில் தொடரும் அவலம் 400 கிராமங்கள் நீருக்குள்

## ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

ஜம்மு, செப்.8
60 ஆண்டுக கால வரலாற்றில் இதுவரை கண்டிராத மழை - வெள்ளத்தை ஜம்மு காஷ்மீர் சந்தித்துள்ளது. 400 கிராமங்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன. இதுவரை 160 பேர் உயிரிழந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலர் தங்களின் உடைமைகளை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஜம்மு காஷ்மீரில் தொலை தொடர்பு மின்சாரம் முழு அளவில் ஸ்தம்பித்து போய்



உள்ளது. இது மீட்பு பணிக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. முக்கிய சாலைகளின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.
வெள்ளம் பாதித்த பகுதி களில் சேதம் குறித்து பார்வையிட பிரதமர் நரேந்திரமோடி அங்கு செல்கிறார். தனி ஹெலியில் இருந்தபடி சுற்றிப் பார்க்கவுள்ளார். ரஜோரி மாவட்டத்தில் வியாழக்கிழமை 63 பேர் சென்ற பஸ் அடித்துச் செல்லப்பட்டது. சனிக்கிழமை வரை 25 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்றவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. ரஜோரியின் தானாமாண்டி பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் 16 பேர் உயிரிழந்தனர். ஜீலம், தவார் உள்ளிட்ட நதிகளில் அபாய அளவைத்தாண்டி வெள்ளம் பாயும் நிலையில், பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை காப்பாற்றும் பணியில் காவல் துறை, இராணுவம், விமானப்படை வீரர்கள் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர். (வ)

## தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்துக்கு குண்டு மிரட்டல்

தூத்துக்குடி துறைமுக கட்டுப்பாட்டு அறைக்கு பி.ப. 3.50 மணிக்கு தொலைபேசி அழைப்பு மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்தது. அந்த அழைப்பில் பேசிய நபர் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் வெடிகுண்டு வைக்கப் போகிறேன் என்று தெரிவித்து விட்டு தொடர்பை துண்டித்துள்ளார். அதையடுத்து தனிப்படை பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் அந்த எண் சிவகங்கை மாவட்டம் ஆதனூர் சாலையில் உள்ள மோகனசுந்தரம் என்பவரது பெயரில் பதிவாகியுள்ளது. ஆனால், தொலைபேசியில் பேசிய நபர் தூத்துக்குடி தெர்மல் நகரில் உள்ள சுங்கத் திணைக்களம் அருகே உள்ள தொலைத் தொடர்பு கோபுரத்தில் இருந்து பேசியுள்ளார்.
அதே இலக்கத்துக்கு பொலிஸார் தொடர்பு கொண்டு பேசிய போது ஒரு கடையில் இருப்பதாக தெரிவித்த அந்த நபர் பின்னர் 4.30 மணியளவில் தொலைபேசியை துண்டித்துவிட்டார். இது குறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## தமிழகத்திலிருந்து களவுபோன சிலைகளை ஒப்படைத்தது ஆஸி.

சென்னை, செப்.8
தமிழகத்தில் இருந்து திருடப்பட்ட இரண்டு சிலைகளை ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபோட் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வெள்ளிக்கிழமை ஒப்படைத்தார்.





நடனமாடும் சிவன் சிலை மற்றும் அர்த்தநாரீஸ்வரர் சிலை ஆகியவைதான் அந்தச் சிலைகள். சுமார் 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தப் புராதனச் சிலைகள் ஆஸ்திரேலியாவில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டிருந்தன. 2008 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் பழம்பொருள்கள் விற்பனை செய்யும் கடையின் உரிமையாளரான சுபாஷ் கபூர் என்பவர் நடனமாடும் சிவன் சிலையை ஆஸ்திரேலியாவில் கன்பரா எனும் இடத்தில் உள்ள தேசிய அருங்காட்சியகத்துக்கு 5 மில்லியன் டொலர்களுக்கு (சுமார் ரூ.30 கோடி) விற்றார். அவரிடமிருந்த அர்த்தநாரீஸ்வரர் சிலை சிட்னியில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் ஆர்ட் கேலரியில் வைக்கப்பட்டது.
தமிழகத்தில் இருந்து களவாடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகத்துக்குரிய இந்தச் சிலைகளைத் திரும்ப தன்னிடம் ஒப்படைக்க இந்த ஆண்டு மார்ச் மாதம் ஆஸ்திரேலியாவை இந்தியா வலியுறுத்தியது.
அதை ஏற்றுக்கொண்ட ஆஸ்திரேலியப் பிரதமர் தன் இரண்டு நாள் இந்தியப் பயணத்தின் போது அவற்றைக் கொண்டு வந்திருந்தார். 'இது ஆஸ்திரேலியாவின் நல்லெண்ணத்துக்குச் சான்று' என்று டோனி அபோட் அலுவலகம் தெரிவித்துள்ளது. (வ)

## அமித் ஷா கருத்துக்கு வலுக்கிறது எதிர்ப்பு

உத்தரப் பிரதேசத்தில் வகுப்புவாத கலவரங்கள் தொடர்ந்தால், அந்த மாநிலத்தில் பாரதிய ஜனதா ஆட்சியமைக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அமித் ஷா தெரிவித்த கருத்துக்கு, எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.
அமித் ஷாவின் இந்தக் கருத்து துரதிஷ்டவசமானது என்று தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் மனீஷ் திவாரி, இதுகுறித்து மத்திய தேர்தல் ஆணையமும், நீதிமன்றமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.
தேசிய கட்சியின் தலைவராக இருக்கும் ஒருவர் தனக்குரிய பொறுப்புக்களை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரான மஜீத் மேமன் தெரிவித்தார். உத்தரப் பிரதேசத் தேர்தல் தொடர்பாக அமித் ஷா தெரிவித்த கருத்து அபாயகரமானது என்றும் மஜீத் மேமன் கூறினார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமித் ஷா, ஹரியானா தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி அமோக வெற்றி பெறும் என் றும், மகாராஷ்ட்ரா, ஜார்க்கண்ட், ஜம்மு- காஷ்மீர் மாநிலங்களிலும் ஆட்சியமைக்கும் என்றும் கூறினார். (வ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி **தவமணி தம்பிராசா**

மலர்வு
01.07.1942

உதிர்வு
11.08.2014



**அன்னையே உன் அன்பின்
அரவணைப்பில் ஆழ்ந்திருந்த
எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி
எங்கு சென்றீர்! ஆண்டாண்டு
காலமானாலும் உம்
அமைதி, பொறுமை, சாந்தம்
என்றென்றும் எம்
மனதைவிட்டகலாது.
நீங்கள் என்றும் இறைபதத் திருக்க
இறையைப் பிரார்த்திக்கின்றோம்**

11.08.2014 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்னை திருமதி தவமணி தம்பிராசாவின் மறைவுச் செய்தி கேட்டு உடன் இருந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் நினைவஞ்சலி பிரசுரித்தோர், தொலைபேசி மூலமும் மலர் வளையம் வைத்தும் அனுதாபம் தெரிவித்தோர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த வைத்திய கலாநிதிகள், தாதியர் மற்றும் சிற்றூழியர்களுக்கும், இறுதி யாத்திரையில் கலந்துகொண்டோருக்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை நடத்தும் அந்தணர்க்கும், இன்றைய பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மஞ்சத்தடி, இணுவில். (51826)(4.3.6) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டன் North wood ஐ வதிவிடமாகக் கொண்டவருமான

**பொன்னம்பலம் விஜயராஜன் (விஜயன்)**



கைதனில் ஏந்தி உன்னைக்
கருத்துற வளர்த்த நெஞ்சம்
வெய்யவோர் கவலை கொண்டு
வேதனை கொள்ளுதையா!
பொய்யிலா உந்தன் கண்கள்
பொலிவற்றுப் போனதென்று
பொய்யிலா உறவோர் நாங்கள்
பேதலித்துள்ளோம் ஐயா!

அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவினர், நண்பர்கள், குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேவேளை அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சி.நாகராஜா (நடராசா) குடும்பத்தினர்
அம்பாள் களஞ்சியம்
டச்சு வீதி, புளியடி, சாவகச்சேரி. (51825)(7.6.3)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

**ச.சந்துதன்**

எமை இன்பத்தில்
வைத்த நாள்
02.07.2000



எமை துன்பத்தில்
ஆழ்த்திய நாள்
08.09.2009

எங்கள் அன்புச் சந்துக்குட்டி
எங்களை மறந்து ஐந்து ஆண்டுகள் மறைந்ததடா
ஆனாலும் உன்வார்த்தைகள் எங்களால் மறக்க முடியாதடா
எமக்கு இருக்கும் கவலைகளை எல்லாம் நீ இருந்தால்
ஆறுதல் கூறி அன்பான வார்த்தைகளால் எம்மை
மகிழ்விப்பாயடா! ஆனால் எமக்கு யார் இருந்தாலும் சந்து!
உன்னைப் போல் ஓர் அன்பான உள்ளம் இனி வராதடா
உன் பூவதனமும் உன் புன்னகையும் என்றென்றும்
நினைவில் நிற்குமடா சந்துக்குட்டி
கடந்த பிறந்த நாளை எண்ணி எண்ணிப் பார்த்து மகிழ்ந்தோம்
ஆனால் இன்று மனம் ஆறமுடியாமல் துடிக்கிறோமடா.

உனது அன்பான உறவுகள்
பாஸ்கரன் மாமா-அத்தை-ரஜீவன் அத்தான்,
கேதா அண்ணா-மதுரா மச்சி, நவீன், அஸ்வின்,
தீபன் அண்ணா-மயூ மச்சி, லக்ஷன், ஆதீஸ்.

மாமா
4ஆம் கட்டை, கட்டப்புரி வீதி,
ஆனைக்கோட்டை

(C/16553)(7.6.3)

## நன்றி நவிலல்

**அமரர் கணபதி தம்பு**

கடந்த 02.09.2014 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குலவிளக்கு அமரர் கணபதி தம்பு அவர்களின் இறுதி நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 616 0204

குடும்பத்தினர்.

(49766)(7.6.3)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஞாயிற்றுக்கிழமை தியத்தலாவ மற்றும் பண்டாரவளை ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்து கொண்டார். (ற)

## வன்முறை தொடர்ந்தால் தேர்தல் பிற்போடப்படும்

### எச்சரிக்கின்றார் பிரதி தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, செப். 8

வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்றால் ஊவா மாகாண சபை தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம். முகமட்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "தேர்தலை குறிப்பிட்ட திகதியில் நடத்த நாங்கள் முயல்கிறோம் ஆனால் அங்கு காணப்படும் நிலை சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு ஏதுவானதாக காணப்படவில்லை"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வன்முறைகள் குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, "தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்



துவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்குகின்ற போதிலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன.

ஊவாவில் தேர்தல் வன்முறைகள் மிக வேகமாக அதிகரித்துள்ளன, அதனால் அங்கு சுதந்திரமான நீதியான தேர்தலுக்கான வாய்ப்பில்லை.

தேர்தலை நடத்தமுடியாது என்ற ஒரு நிலைமை வருமானால் தான் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கையை எடுப்பேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ரணிலை ஜனாதிபதியாக்க பலத்தைப் பிரயோகிப்பேன்

## உறுதியளிக்கின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, செப். 8

"எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று ஐ.தே. கட்சியை ஆட்சி பீடமேற்றுவதற்காக அனைத்து விதமான தியாகங்களையும் செய்து, பரப்புரையில் ஈடுபட்டு நாட்டில் ஐ.தே.க. ஆட்சியை ஏற்படுத்த பாடுபடுவேன்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்காக எனது முழு பலத்தையும் வழங்குவேன்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேதமாஸ.

பசறையில் நடைபெற்ற ஐ.தே.கட்சியின் 68 ஆவது ஆண்டு விழாவின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-



"பதுளை மாவட்டத்துக்கும் பிரேமதாஸ குடும்பத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனது பாரியார் பிறந்த மாவட்டம். எனது தந்தை ரணசிங்க பிரேமதாஸவின் அஸ்தி இந்த மாவட்டத்திலே வைக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபை ஐ.தே.க ஆட்சியின் கீழ் வர 'சின்ன பிரேமதாஸ' அர்ப்பணிப்புடன் செயற்பட தயாராக உள்ளேன்.

ஊவாவில் ஐ.தே.கவின் வெற்றி குறித்து இன்று முழு நாடுமே பேசத்தொடங்கி விட்டது. எமது கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் நாம் என்றும் தனிப்பட்டவர்களின் நியாய பத்திரத்துக்கு அமைவாக என்றும் செயற்பட்டதில்லை.

எமது கட்சிக்கென தனியான கலாசாரம் கட்டுப்பாடு என்பன உள்ளன. அதை கடைப்பிடிப்பதாலேயே யானை இன்று தும்பிக்கையை ஆட்டிக் கொண்டு வீறு கொண்டு எழுந்திருக்கின்றது.

இன்றைய தேவை எமது கட்சிக்குள்ளான ஒழுக்காற்று விசாரணை அல்ல. அரசு செய்த ஊழல்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ள எமது கட்சியை ஆட்சிப்பீடம் ஏற்ற பாடுபட வேண்டும். சஜித் பிரேமதாஸ உண்மையான ஐ.தே. கட்சி சொந்தக்காரன். எந்தச் சந்தர்ப்பத்திலும் கட்சி தாவி கட்சியை காட்டிக் கொடுக் கும் பரம்பரையில் வந்தவன் நானல்ல.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை 2015 இல் ஜனாதிபதியாக்குவதற்காக எனது முழு பலத்தைப் பிரயோகித்தும் எல்லா விதமான தியாகங்களையும் செய்து சுபீட்சமான எதிர்காலத்தை நாட்டு மக்களுக்கு வழங்குவேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் சட்ட மீறல்: 25 பேர் கைது

கொழும்பு, செப். 8

ஊவா மாகாண சபை தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து இதுவரை 48 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிர்வரும் காலங்களில் பொலிஸ் பிணை வழங்கப்பட மாட்டாது. - இவ்வாறு தெரிவித்துள்ளார் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"தேர்தல் கடமைகளுக்காக மூவாயிரத்து 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். எதிர்வரும் 18 ஆம் திகதியளவில் தேர்தல் கடமைகளில் 11 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிர்வரும் காலங்களில் பொலிஸ் பிணை வழங்கப்படமாட்டாது.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் கைது செய்யப்படுவோர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஐ.தே.க. எம்.பி. விபத்தில் காயம்

கொழும்பு, செப். 8

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும காயமடைந்துள்ளார்.

அவர் தற்போது நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தெற்கு அதிவேக வீதியின் 39 - 40ஆம் கட்டைப் பகுதியில், நேற்றுக் காலை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ற)

## புலிகளை மீளிணைக்க முயன்றோர் கைதாம்

கொழும்பு, செப். 8

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளக்கட்டியெழுப்ப முயற்சித்தனர் என்று கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அபுதாபியில் இருந்து நாடு கடத்தப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது, கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - விசுவமடு பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் தவபாலன் மற்றும் யாழ் - இளவாலைப் பகுதியைச் சேர்ந்த செபஸ்தியன் பிள்ளை ரொபட் ஆகியோரே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்டுள்ள புறக்கோட்டை இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண கடைத் தொகுதி கடந்த வெள்ளிக்கிழமை மாலை உத்தியோகபூர் வமாக திறந்து வைக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்படப் பலர் கலந்துகொண்டனர்.


## கடவுச்சீட்டுகளில் இனிமேல் 10 விரல் அடையாளங்கள்

### அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, செப். 8

இலங்கையில் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுக்களில் 10 கைவிரல் அடையாளங்களும் பொறிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அமைச்சரவை எடுத்துள்ளது. அதன் அடிப்படையில் குடிவரவு குடியகல்வு சட்டம் திருத்தப்படவுள்ளது.

இது தொடர்பான யோசனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.




இந்தநிலையில் அமைச்சரவையின் தீர்மானம், அமைச்சரவை உபகுழுவின் சட்ட ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரின் ஆலோசனைக்கு இணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அடுத்த மாதத்தில் இருந்து கடவுச்சீட்டுக்களுக்கு 10 கைவிரல் அடையாளங்களை பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார். (ற)

# மீண்டும் ஜோடியாக வந்த



# சிம்பு~நயன்தாரா

ஆர்யாவின் தம்பி, சத்யா நடித்துள்ள அமரகாவியம் திரைப்படத்தைப்; பார்க்க சிம்புவும், நயன்தாராவும் ஜோடியாக வந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். வல்லவன் படத்தில் நடித்தபோது சிம்புவுக்கும் - நயன்தாராவுக்கும் இடையே ஏற்பட்ட பழக்கம், பின்னர் காதலாக மாறியது. ஒரு கட்டத்தில் அவர்களுக்குள் ஏற்பட்ட மனகக் சப்பால் இருவரும் பிரிந்தனர். இதனையடுத்து ஒருவரை ஒருவர் எங்காவது சந்தித்துக்கொண்டால் கூட முகத்தை திருப்பிக்கொண்டு சென்றார்கள்.

அப்படி இருந்தவர்கள், நீண்ட இடைவெளிக்குப் பிறகு இருவரும் தற்போது இது நம்ம ஆளு படத்தில் இணைந்து நடித்து வருகின்றனர். தற்போது இந்தப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இந்த நிலையில், நடிகர் ஆர்யா தனது தம்பி சத்யாவை கதாநாயகனாகத் தயாரித்துள்ள அமரகாவியம் படம் அண்மையில் வெளியாகியது. இதனையொட்டி தனது திரையுலக நண்பர்களுக்கு படத்தை காண்பிக்க விசேட காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார் ஆர்யா. இதில் நடிகர்கள் விஷால், ஸ்ரீகாந்த், ஷாம், உதயநிதி, விஷ்ணு, விஜயசேதுபதி, கிருஷ்ணா, லட்சுமி ராய், ஜனனி அய்யர், அட்லீ, ஜீ.வி. பிரகாஷ் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்குத்தான் சிம்புவும்- நயன்தாராவும் ஜோடியாக வந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். ஜோடியாகவே, போஸ் கொடுத்தார்கள். இரண்டு பேரையும் பார்க்க ரசிகர்கள் திரண்டதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் நயன்தாராவை பாதுகாப்பாக அழைத்து சென்றார் சிம்பு.

நாங்கள் இருவரும் நட்புடனேயே பழகி வருகிறோம் என்று சிம்பு-நயன்தாரா இருவரும் கூறி வருகின்றனர்.

# நச்சின்னு கடி



'உங்களுக்கு முன்னாலேயே உங்கள் மகன் சிகரெட் பிடிக்கிறானே'
'சீ.. சீ.. அவன் சிகரெட் பிடிக்கிறதுக்கு நிறைய நாளுக்கு முன்னாலேயே நான் சிகரெட் பிடிக்க ஆரம்பித்து விட்டேன்..'

**கணவர்:** தேநீர் 'ரொம்ப ஸ்ரோங்கா' இருக்கே. என்ன போட்டாய்?
**மனைவி:** ஒரு கரண்டி சிமெந்து போட்டேன்......!

**நோயாளி:** டாக்டர், வயிற்று வலியை என்னால பொறுக்க முடியலை...
**வைத்தியர் :** வயிறு வலிக்கும் போது, நீங்க ஏன் பொறுக்கப் போறீங்க?



**பொலிஸ்:** இப்படியே ஊர் சொத்து எல்லாம் கொள்ளை அடிக்கிறியே, உனக்கு கொஞ்சம் கூட வெட்கம் இல்லையா?
**திருடன்:** அதுக்குத் தான் முகமூடி போட்டிருக்கிறேன்.



நான் அழகாய் இருக்கிறேனா ?

# ரிலாக்ஸா வாசியுங்க

இளைஞன் ஒருவன் நிறைய கோழி முட்டைகளை ஒரு மூன்று சக்கர வண்டியில் வைத்து மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள கடைத்தெரு வழியே சென்று கொண்டிருந்தான்.

ஒரு திருப்பத்தில் எதிர்பாராதவிதமாக வண்டி கவிழ்ந்து விட்டது. முட்டைகள் அனைத்தும் உடைந்து சிதறி விட்டன. இளைஞன் அழ ஆரம்பித்து விட்டான், ' ஐயோ! என் முதலாளிக்கு என்ன பதில் சொல்வேன்? இவ்வளவு முட்டைக்குரிய பணத்துக்கு நான் என்ன செய்வேன்?'. இதனால் அங்கே பெரும் கூட்டம் கூடிவிட்டது. எல்லோருக்கும் அழுது கொண்டிருந்த இளைஞனைப் பார்த்து பரிதாபம் ஏற்பட்டது.

அப்போது அங்கே வந்த ஒரு பெரியவர், 'தம்பி, ஏன் அழுகிறாய்? உடைந்த முட்டைகளுக்கான பணத்தை உன்னால் கொடுக்க முடியாது என்பதுதானே உன் வருத்தம்?' என்று கேட்க இளைஞனும் ஆம்! என்றான்.

உடனே அந்தப் பெரியவர் தன் துண்டை எடுத்தார். 'இந்தக் கூட்டத்தில் இரக்க குணமுடையவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்', என்று சொல்லியபடியே அதில் தன் பங்குக்கு ஒரு பத்து ரூபாய் தாளைப் போட்டார். பின் அந்தத் துண்டுடன் அந்தக் கூட்டத்தை சுற்றி வந்தார். எல்லோரும் அதில் பணத்தைப் போட்டார்கள். எல்லோர் முன்னிலையிலும் பணத்தை எண்ணினார்.

அதை அப்படியே இளைஞனிடம் கொடுத்துவிட்டு, 'இனியாவது கவனமாக நடந்துகொள்', என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார். கூட்டத்திலிருந்த அனைவரும் அவரை பரோபகாரி என்று வாழ்த்தினர்.

கூட்டம் கலைந்தது. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் இளைஞனிடம், ' அவர் மட்டும் வரவில்லையென்றால் உன் கதி என்ன ஆகி இருக்கும்? என்ன நல்ல குணம் அவருக்கு? அவரை உனக்கு முன்னரே தெரியுமா?' என்று கேட்டார்.

அந்த இளைஞன் சொன்னான், 'அவர்தான் என் முதலாளி. இந்த முட்டைகளை ஏற்றி அனுப்பியவர்'.

# அழகு எப்படியிருக்கிறது









# நாளைய பெண்கள் சுயமாக வாழ

ஆண்கள் பெண்களை தமக்கு அடிமையாக்கி கலாசாரம், பண்பாடு, மரபு என்று சில ஆயுதங்களைப் பெண்களின் முதுகில் திணிப்பதை பெண்கள் கொஞ்சமேனும் சிந்திக்காமல் வாழ்கிறார்கள். தமிழர்களின் பண்பாடு, கலாசாரம் எல்லாம் பெண்களுக்கு மட்டும்தானா? ஆண்களுக்கென்று எதுவுமே இல்லையா?

இந்தக் கலாசாரங்களை, பண்பாடுகளை பெண்கள் மேல் திணிக்கப்பட்ட வஞ்சனைகள் என்று உணராமலே எமது பெண்கள் இன்னும் போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்களே! இனியாவது பெண்கள் சிந்திக்க வேண்டும். தமது வலிமைகளை உணர வேண்டும். பத்து மாதங்கள் குழந்தையை வயிற்றில் சுமக்கத் தெரிந்த பெண், தாயாக, சகோதரியாக, மனைவியாக, மகளாக என்று ஒவ்வொரு நிலையிலும் குடும்பத்தை அன்பினால் சுமக்கத் தெரிந்த பெண், அடங்கிப் போக வேண்டிய தேவை என்ன? அடங்குதல், ஒடுங்குதல், ஆக்கிப் போடுதல், அடித்தாலும் உதைத்தாலும் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று தொழுதல், புகுந்த வீட்டில் பணிந்து நடந்து பிறந்த வீட்டுப் பெருமை காத்தல். இவை எல்லாமே ஆண்கள் தமது சுயநலத்துக்காகத் தயாரித்து வைத்த பெண் அடிமை அட்டவணைகள்.

பெண்களே! நீங்கள் நினைக்கலாம், இப்போது நாங்கள் விடுதலை பெற்று விட்டோம் என்று. ஆனால் இன்னும் முழுதாக இல்லை. ஆண், பெண் இருபாலாரும் சமநிலைக்கு வர, இன்றைய இளம் பெண்கள்தான் சரியாகச் செயற்பட வேண்டும். நீங்கள் படிக்க வேண்டும். உங்கள் காலில் நீங்கள் நிற்பதற்கு, சொந்தமாகத் தொழில் பார்க்க வேண்டும். போலிச் சம்பிரதாயங்களையும், ஆடம்பரத்திலான அதிக ஈடுபாட்டையும் தவிர்த்து, எது தேவை என்பதை உணர்ந்து வாழவேண்டும்.

முக்கியமாக, உங்கள் குழந்தைகளை ஆண் குழந்தை, பெண் குழந்தை என்று பேதம் காட்டாது சமனாக வளருங்கள். நீ பெண் குழந்தை! நீதான் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று உங்கள் ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்குமான தகராறின் போது, நீங்கள் சொல்வீர்களானால், அங்கு நீங்கள் பெரிய தவறு செய்கிறீர்கள். இப்படி நீங்கள் சொல்லும் போது பாதிக்கப் படுவது உங்கள் பெண் குழந்தையின் மனம் மட்டுமல்ல, உங்கள் ஆண் குழந்தையின் மனமும்தான்.

ஆண் குழந்தையின் மூளையில் அது அப்போதே, பெண்கள் எதையும் விட்டுக் கொடுக்க வேண்டியவர்கள்தான் என்று பதிந்து விடுகிறது.

அதுவே நாளடைவில் அக்கா, தங்கை, மனைவி, மகள் எல்லோரும் தனக்கு விட்டுக் கொடுத்து வாழவேண்டியவர்கள் என அவனை எண்ண வைக்கிறது.

இப்படித்தான் ஒவ்வொரு விடயத்திலும், பெண்பிள்ளைகளுக்கு நீ பெண்ணல்லவோ! எனப் போதிக்கப்படும் விடயங்கள், கூடவே வளரும் ஆண்பிள்ளையின் மூளையில் பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமெனப் பதியப்பட்டு விடுகிறது.

ஆகவே பெண்களே! உங்கள் பிள்ளைகளை, ஆண், பெண் பேதம் காட்டாது, விட்டுக் கொடுத்தலில் இருந்து சமையல், வீட்டுவேலை, கல்வி, தொழிற் கல்வி, தொழில் மற்றும் இதர பிற வேலைகளிலும் செயற்பாடுகளிலும் சமத்துவத்தைப் பேணி வளருங்கள்.

எந்தக் கட்டத்திலும் உங்கள் பெண் பிள்ளையை நீ பெண்! என்று கூறி சமையற் கட்டுக்கும், ஆண் பிள்ளையை வெளி வேலைக்கும் அனுப்பாதீர்கள்.

உங்கள் வளர்ப்பில், பெண் அடங்க வேண்டியவள், ஆண் அடக்குபவன் என்ற நிலை முற்றாக மாற வேண்டும்.

இதை ஏன் நான் பெண்களுக்கு மட்டும் கூற வேண்டும் என நீங்கள் எண்ணலாம். நாங்கள் குனிந்து நின்று கொண்டு ஆண்களைப் பிழை கூற முடியாது. நாங்கள் தான் நிமிர வேண்டும்.

நாளைய பெண்கள் சுயமாக வாழ நாங்கள்தான் பாதையமைக்க வேண்டும்.



# கலாசாரமும் பண்பாடும் பெண்களுக்கு மட்டும்தானா?



பெண் ஒன்று பிறந்து விட்டாலே பொன் வேண்டும், பொருள் வேண்டும், அவளை நல்லவன் கையில் கொடுத்து விடவேண்டும். என்று சிந்திக்கத் தொடங்கி விடுவார்கள் பெற்றோர்கள். தமது ஆசைகளைக் குறைத்து, தேவைகளைத் தவிர்த்து அந்தப் பெண்பிள்ளைக்காகச் சேமிக்கத் தொடங்கி விடுவார்கள். முக்கியமாக ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தியாவிலும், இலங்கையிலும் பெண்ணைப் பெற்றவர்கள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்களாகி விடுகிறார்கள்.

ஆசை ஆசையாகப் பெண்ணைப் பெற்று விட்டு அவளது ஒவ்வொரு வளர்ச்சியிலும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டியவர்கள், நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு வாழ்வது போல தவிப்புடன் வாழ்கிறார்கள். வாழ வைக்கப்படுகிறார்கள். ஒரே ஒரு பெண் குழந்தையைப் பெற்றவர்களுக்கே இந்தக் கதி என்றால், நான்கைந்து பெண்களைப் பெற்றவர்களின் நிலையைச் சொல்லவே தேவையில்லை.

இந்த நியதியில் எந்த மாற்றமும் ஏற்படக்கூடாது. அப்படி மாற்றம் ஏற்படுவதே ஒரு தப்பான விடயம் என்பது போலவே காலங்காலமாக எல்லாம் நடைபெற்றுக் கொண்டும் வருகின்றன. யாராவது ஒரு பெண் இந்த நிலை மாற வேண்டும் என்று குரல் கொடுத்தாலே, அவள் கலாசாரம், பண்பாடு எல்லாவற்றையும் காலுக்குள் மிதிக்கிறாள் என்று கூச்சலிடுகிறது எமது சமுதாயம்.

எமது பண்பாட்டின்படி ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரையறையான கோட்பாடு, மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்றுதான். ஒருவனுக்கு ஒருத்தியாக வாழும் போது மனதுக்கும் மகிழ்ச்சி, நிறைவு. முக்கியமாக எய்ட்ஸ் பிரச்சினை இல்லை. வேறு பாலியல் சம்பந்த மான நோய்களுக்கும் சந்தர்ப்பம் இல்லை.

ஆனால் ஆண்கள் மனைவி இருக்கையில் வேறு பெண்ணுடன் தொடர்பு கொண்டால், ஆண்கள் சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவுவார்கள். பெண்கள் கண்டு கொள்ளக் கூடாது என்கிறார்களே. இதுவும் தமிழர் பண்பாடா?

பெண்ணுக்கு மட்டும் பொம்பிளை சிரிச்சாப் போச்சு. புகையிலை விரிச்சாப் போச்சு.......... என்கிறார்களே.

எமது பண்பாட்டில் ஏனிந்தப் பாகுபாடு? எமது கலாசாரமும் பண்பாடும் பெண்களுக்கு மட்டும்தானா? ஏனிந்தப் பாரபட்சம்?

தாலிக்காய் ஆதிகாலத்தில் வெறும் மஞ்சள் காயாகவே இருந்தது. அதாவது நாம் சமையலுக்குப் பாவிக்கும் மஞ்சள். ஏன் தெரியுமா? மஞ்சள் ஒரு இயற்கையான கிருமி நாசினி. இருவர் திருமண பந்தத்தில் இணையும் போது, ஒருவரில் இருக்கும் தொற்றுக் கிருமிகளோ, நோய்களோ மற்றவரை அணுகாமல் இருக்கவும், கிருமிகளைச் சாகடிக்கவுமே இந்த மஞ்சள் காய் பயன்படுத்தப்பட்டது.

இதே போலத்தான் பொட்டும். மூலிகைகள் கொண்டு செய்யப்படும் பொட்டை, நெற்றிப் பொட்டில் வைக்கும்போது அது மருத்துவ ரீதியாக உடலுக்கு நல்ல குளிர்ச்சியையும் நன்மையையும் தருகிறது.

இப்படியான நல்ல காரணங்களுக்காகக் கொண்டு வரப்பட்ட பல விடயங்கள் இப்போ தடம் மாறி, அவரவர் வசதிக்கேற்ப பல அடாவடித்தனங்கள் புகுத்தப்பட்டு, கலாசாரம், .பண்பாடு என்பதற்கு என்ன அர்த்தங்கள் என்று தெரியாமலே பெண்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளன. கலாசாரம், பண்பாடு என்ற பெயரில் எமது பெண்கள் அடக்கப்படுகின்றனர். அடிமைப்படுத்தப்படுகின்றனர்.

முதலில் எமது கலாசாரத்தில், பண்பாட்டில் புகுத்தப்பட்ட அடாவடித்தனங்கள் களையப் பட்டு, தேவையான நல்ல புதிய விடயங்கள் புகுத்தப்பட வேண்டும்.

சில விடயங்கள் காலத்துக்கேற்ப நேரத்துக்கேற்ப இடத்துக்கேற்ப மாறத்தான் வேண்டும். கலாசாரம் என்ற முறையில் கட்டிக் காக்க எம்மிடம் வேறு எத்தனையோ நல்ல விடயங்கள் உள்ளன. அவைகளைக் கட்டிக் காப்போம்.

தமது ஆசைகளைக் குறைத்து, தேவைகளைத் தவிர்த்து அந்தப் பெண்பிள்ளைக்காகச் சேமிக்கத் தொடங்கி விடுவார்கள். முக்கியமாக ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தியாவிலும் இலங்கையிலும் பெண்ணைப் பெற்றவர்கள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்களாகி விடுகிறார்கள்.

## விபத்தில் இளம் பெண் படுகாயம்

கிளிநொச்சி,செப்.8

கிளிநொச்சி திருநகர் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது நிலைதடுமாறி நிலத்தில் விழுந்தபோது எதிரே வந்த ஓட்டோ இடதுகாலில் ஏறியதில் காயமுற்ற இளம் பெண் சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 4ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் நிகழ்ந்ததில் கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்த எஸ்.ரேணுகா (வயது-26) என்ற இளம்பெண்ணே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை- நாயுடன் விளையாடிய நான்கு வயதுச் சிறுவன் ஒருவர் நிலத்தில் விழுந்து மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-18)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் திருவையாறு கிராமத்தில் ஜப்பானிய மக்களின் நிதி பங்களிப்பில் 'யு.என்.ஹபிராற்' நிறுவனத்தினரால் 28 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன்.'யு.என்.ஹபிராற்' நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் லங்காதிலக, நிறுவனத்தின் உட்கட்டுமான முகாமைத்துவ ஆலோசகர் கெய்கோ மட்சூ ஆகியோர் கலந்துகொண்டனர். (த)

## இராசேந்திரங்குளம் மக்கள் குடிதண்ணீரின்றி அவலத்தில்

வவுனியா, செப் 8

வவுனியா இராசேந்திரங் குளப் பகுதி ஆடைத் தொழிற்சாலையை அண்மித்த பகுதியில் உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் போதியளவு கிடைக்கவில்லையென அந்தப் பகுதிமக்கள்



கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா இராசேந்திரங் குளம் பகுதியில் 800 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களில் பெரும்பாலான மக்கள் தற்காலிக குடிசைகளில் வசித்து வருகின்றனர்.

தற்போது வறட்சியால் இந்தக் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு வவுனியா பிரதேச சபையினர் தண்ணீர் தாங்கிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகித்து வருகின்றனர். எனினும் இந்த நீர் போதியளவு ஒழுங்காகக் கிடைப்பதில்லை என அவர்கள் குற்றஞ் சுமத்தி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களில் சிலர் வீடுகளில் கிணறு முற்றாக வற்றியுள்ளமையால் பணம் கொடுத்து தண்ணீர் வாங்கிப் பாவிக்க முடியாத நிலையில் தண்ணீருக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் போதியளவு குடிதண்ணீரைத் தந்துதவுமாறு சம்பந்தப்பட்ட மக்கள் கோரியுள்ளனர். (த-402)

# சிறுவர்களைக் குளங்களில் தனியே குளிக்க அனுப்பாதீர்

### கிளிநொச்சிப் பெற்றோரிடம் அவசர வேண்டுகோள்

கிளிநொச்சி, செப் 8

கிளிநொச்சி மாவட்டக் குளங்களில் குளிப்பதற்குச் சிறுவர்கள் பெரியவர்களின் துணையுடன் செல்லுமாறும், சிறுவர்களைக் குளங்களில் தனியாகக் குளிக்கவிடவேண்டாம் எனவும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் என்.சுதாகரன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி செல்வாநகர் கந்தன்குளத்தில் சிறுமிகள் மூவர் மூழ்கி உயிரிழந்ததை அடுத்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் சகல குளங்களிலும் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளன. இந்தப் புனரமைப்புப் பணிகளின்போது குளங்களின் உட்பகுதிகளில் பெரும் குழிகள் உருவாகியுள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாகக் குளங்களின் உட்பகுதியில் நீர் குறைவடைந்து சேறும் சகதியுமான நிலை காணப்படுகிறது. அத்துடன் புனரமைப்பின்போது உருவாக்கப்பட்டுள்ள குழிகளில் மட்டும் நீர் தேங்கி நிற்பதன் காரணமாக எந்தக் குளங்களும் பாதுகாப்பானதாக இல்லை.

இந்தநிலையில் குளங்களை நாடிச் செல்லும்போது பெரியவர்களின் துணையுடனேயே சிறுவர்கள் செல்லவேண்டும். குறிப்பாகச் சகல பாடசாலைகளிலும் மாணவர்கள் மத்தியில் குளங்களில் நீர் வற்றியுள்ள நிலைமையை விளக்கிச் சிறுவர்கள் குளங்களை நாடிச் செல்வதைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (த-18)

## யாருமற்ற வயோதிபர் முதியோர் இல்லத்தில்

*கிளிநொச்சி, செப்.8*

*உறவினர்கள் யாருமில்லையென கிளிநொச்சி அரச அதிபரிடம் கடந்த 5 ஆம் திகதி முற்பகலில் வருகை தந்த முதியோர் ஒருவரை கிளிநொச்சி முதியோர் இல்லம் ஒன்றில் தங்கவைக்குமாறு கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனிடம் அரச அதிபர் பணித்துள்ளார்.*

*கடந்த் 5 ஆம் திகதி முற்பகல் 11.00 மணியளவில் வருகை தந்த முதியவர் மருத்துவமனை ஒன்றிலிருந்து நேரடியாகவே மாவட்ட செயலகத்துக்கு வந்திருந்தார்.*

*அவர் தொடர்பான விவரங்களை அரச அதிபர் கேட்டபோதும் அவற்றைக் கூறக்கூடிய நிலையில் முதியவர் இல்லாததன் காரணத்தால் கிளிநொச்சியிலுள்ள முதியோர் இல்லம் ஒன்றில் அவரை தங்க வைக்குமாறு அரச அதிபர் கரைச்சி பிரதேச செயலருக்குப் பணித்துள்ளார். (த-18)*

## 240 மில்லி. ரூபா செலவில் 6 நீர்ப்பாசன வேலைத்திட்டம்

### கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.8

இரணைமடுக்குளத்தின் கீழான நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் என்பன புனரமைப்பு நடைபெற்று வரும் நிலையில் 'இபாட்' திட்டத்தின் கீழ் 240 மில்லியன் ரூபா செலவில் மேலும் ஆறு வேலைத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான நீர்ப்பாசனக் கால்வாய்கள் கழிவு வாய்க்கால்கள் ஆகியன 'இபாட்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2013 ஆம் ஆண்டு 10 வேலைத் திட்டங்கள் 543.9 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றைவிட இந்த ஆண்டு 18 வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தற்போது உருத்திரபுரம், சின்னக்காடு, பரந்தன் ஆகிய பகுதிகளில் 240 மில்லியன் ரூபா செலவில் 6 புனரமைப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அவற்றுக்கான புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இரணைமடுக் குளத்தின் கீழான வாய்க்கால்கள் மற்றும் கழிவு வாய்க்கால்களின் வேலைகளில் எவ்வாறான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதெனக் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரனிடம் கேட்டபோது; கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் 2012ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. இந்த வேலைகள் 2017ஆம் ஆண்டு வரை தொடரும். 3 ஆண்டுகளாக இந்த வேலைகள் தொடர்கின்றன. நீர்ப்பாசன வாய்க்கால்கள் மற்றும் கழிவு வாய்க்கால்களுக்குமான வேலைகள் தான் நடைபெறுகின்றன. குளத்தின் பிரதான வாய்க்கால்களில் ஓரளவு வேலைகள் செய்துள்ளோம். கிளை வாய்க்கால்களில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 3 ஆயிரத்து 50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் 500 மில்லியன் ரூபா வரையான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன-என்றார். (த-18-55)

## அனுமதியின்றி அமைக்கப்பட்ட எட்டு கடைகளை இடிக்கத் தீர்மானம்

கிளிநொச்சி, செப்.8

கிளிநொச்சி நகரில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட எட்டு வர்த்தக நிலையங்களை இடித்து அகற்றுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பிரதேச சபையின் அனுமதிகள் பெறப்படாமல் சட்டவிரோதமாக பல்வேறு கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நகர்ப் பகுதியில் ஏ-9 வீதியில் பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட 15 இற்கும் மேற்பட்ட கட்டடங்களுக்கு எதிராகப் பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதில் 8 அனுமதியற்ற கட்டடங்களை இடித்து அகற்றுவதற்கான தீர்மானம் சபையினால் எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றை அகற்றும் நடவடிக்கை மிக விரைவில் முன்னெடுக்கப்படும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.சிவகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தினால் பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட இரு கட்டடங்களுக்கு எதிராகக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இடைக்காலத் தடை உத்தரவு போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த மாதம் நிபந்தனைகளின் அடிப்படையில் அந்தத் தடை உத்தரவு நீக்கப்பட்டது.

இதன்போது பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 52 இன் கீழ் எந்த அனுமதியும் பெறாத எந்தக் கட்டடத்தையும் பிரதேச சபையின் தீர்மானத்துக்கு அமையத் தலைவரின் அனுமதியுடன் இடித்து அகற்ற முடியும் என நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இதன் அடிப்படையிலே சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகக் குறித்த கட்டடங்கள் அகற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-55)

# பாடசாலை புறச்சூழலில் சுத்தம் பேணுமாறு சுகாதாரப் பிரிவின் அதிகாரியால் வலியுறுத்து

கரணவாய், செப். 8
டெங்கு நோய்த் தாக்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுவதால் பாடசாலைச் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைத்திருக்குமாறு பருத்தித்துறை சுகாதாரப் பிரிவு வைத்திய அதிகாரி எஸ்.செந்தூரன் அறிவித்துள்ளார்.
இது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரியால் பாடசாலை அதிபர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஒரு மாத காலமாக விடுமுறைக்காக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் கற்றல் செயற்பாடுகளுக்காக கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டன. அந்தப் பின்னணியிலேயே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
அண்மைக் காலமாக இடையிடையே பெய்த மழைகாரணமாக டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான சூழல் காணப்படுகின்றன. குறிப்பாக பாடசாலைச் சூழலில் இத்தகைய நுளம்பு பெருகும் நிலை காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
எனவே பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பாடசாலைச் சுற்றுப்புறச் சூழலை சிரமதானப் பணி மூலம் சுத்தம் செய்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இல்லாது ஒழித்து டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பாடசாலை அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-108)

# லான்ட்மாஸ்ரர்-ஹைஏஸ் மோதி ஒருவர் படுகாயம்

தென்மராட்சி, செப் 8
கட்டுப்பாட்டை இழந்த ஹைஏஸ் வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த லான்ட்மாஸ்ரருடன் மோதியதில் லான்ட்மாஸ்ரர் சாரதி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்கு மீசாலை சந்தியில் இடம் பெற்றது.
பயணிகளுடன் சென்ற ஹைஏஸ் வாகனம் கிடுகு ஏற்றச் சென்ற லான்ட் மாஸ்ரரை மோதியதில் இருவாகனங்களும் பலத்த சேதமடைந்தன. இந்தச் சம்பவத்தில் சுன்னாகம் உடுவில் தெற்கைச் சேர்ந்த லான்ட் மாஸ்ரர் சாரதியான பவான் என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (து-9-131)

# ஆலயத்தின் அருகே கள்ளுத் தவறணை

## பொலிஸில் முறைப்பாடு

வலி.வடக்கு, செப். 8
ஆலயத்துக்கு அண்மையில் சட்டவிதிமுறைகளுக்கு உட்படாது கள்ளுத் தவறணை அமைப்பது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் வலி.வடக்குப் பிரதேச சபையினால் முறையிடப்பட்டுள்ளது.
வரலாற்றுப் புகழ் மிக்க கீரிமலை நகுலேஸ்வரம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், வைரவர் கோவில் ஆகியவற்றுக்கு அண்மையில் இந்த புதிய தவறணையை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் வலி.வடக்கு பிரதேச சபைக்குப் பொதுமக்களினால் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.
வலி.வடக்குப் பிரதேச சபையிடம் உரிய அனுமதி பெறாமலும், மதுபானச்சாலைகள் அமைப்பதற்கான அரசின் அறிவித்தல்களுக்கு உட்படாமையாலும் குறிப்பிட்ட இடத்தில் தவறணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அமைச்சர் ஒருவரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இதனை அமைப்பதாகக் கூறப்படுகிறது.
இதனைத் தடுக்கும்படி பிரதேச சபையினால் தெல்லிப்பழை பொலிஸாருக்கும் மற்றும் மதுவரித் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.
குறிப்பிட்ட கள்ளுத் தவறணை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து சுவாமி தீர்த்தத்துக்குச் செல்லும் புனிதமான வீதியில் அமைக்கப்படுவதையிட்டு அந்தப் பகுதியில் உள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (து-86)

# ஒஸ்மானியாக் கல்லூரியில் தற்போது 400 மாணவர்கள்



யாழ்ப்பாணம்.செப். 8
மீள்குடியமர்வின் போது 47 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி தற்போது 400 இற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வித் தேவைக்கு தனது சேவையை வழங்கி வருகிறது. இதற்கு கடந்த காலத்தில் அதிபராகக் கடமையாற்றியவரின் அளப்பரிய சேவையே காரணமாகவுள்ளது என்று யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எச்.ஜமால் முஹிதீன் தெரிவித்தார்.
யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஒஸ்மானியாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எம்.முபாரக்கின் சேவை நலன் பாராட்டு விழா நேற்றுமுன்தினம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் தலைமையுரையை நிகழ்த்திய போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் மாணவர்களின் கல்வித் தேவைக்கு அடித்தளமாக இந்தக் கல்லூரி விளங்கியுள்ளது. அந்தக் காலப் பகுதியில் அதிபராகப் பொறுப்பேற்ற எம்.முபாரக் மாணவர் களின் நலன் கருதி கடமைக்கு அப்பால் தானாகவே முன்வந்து பல்வேறு சேவைகளை வழங்கியுள்ளார்.
இவரது முயற்சியால் தான் இன்று அதிகளவான மாணவர்களை இந்தக் கல்லூரி கொண்டுள்ளது. முஸ்லிம் மாணவர்களின் கல்வித் தேவைக்கு அடித்தளமாக இந்தக் கல்லூரி விளங்குகின்றது.
இனிவரும் காலங்களிலும் பாடசாலையைப் பொறுப்பேற்கும் அதிபர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துச் சேவையை வழங்க முன்வர வேண்டும்- என்றார்.
இந்த நிகழ்வில் அகில இலங்கை ஜமியத்துல் உலமா சபையின் யாழ்-கிளிநொச்சி மாவட்ட தலைவர் எ.எம்.அப்துல் அஸீஸ் மௌலவியின் ஆசியுரையும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (து-ரி)

# வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் மூன்று மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்.செப். 8
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்துக்கு மூன்றுமாடிக் கட்டடத் தொகுதி அமைக்கும் பணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரினால் அடிக்கல் நடப்பட்டுள்ளது.
குறித்த பிரதேச செயலகம் எதிர்கொண்டு வரும் செயற்பாட்டுக்கான இடப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்து மக்களுக்குச் சிறப்பான பணியை ஆற்றும் நோக்கில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 2.75 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கடந்த 4ஆம் திகதி நட்டார்.
இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பாலகிருஷ்ணன் (ஜீவன்) மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரான செல்வகுமார், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் சோதிநாதன் எனப் பலர் கலந்து கொண்டனர். (து)



சங்கமித்தை வந்து இறங்கிய இடமான யாழ்ப்பாணம் மாதகலில் அமைந்துள்ள ஜம்பு கோளப்பட்டினம். தன்னுடைய அடையாளங்களை இழந்து தமிழ் உச்சரிப்பே இன்றி தற்போது சிங்களத்தில் தம்பகொலபடுன என்ற பெயரில் கடற்படையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. (வ-21)

# படுக்கையில் இரண்டு பேரை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, செப். 8
படுக்கையில் வைத்து பாம்பினால் கடியுண்ட இருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த வேலாயுதம் அமுதுப்பிள்ளை (வயது-65), மந்துவில் வடக்கைச் சேர்ந்த நகுலேஸ்வரன் விமல்ராஜ் (வயது-19) ஆகிய இருவரும் பாம்பினால் கடியுண்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (து-9)



# காரைநகரில் கடந்த வாரத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகம்

காரைநகர், செப். 8
காரைநகரில் கடந்த ஒரு வாரமாகத் திருட்டுக்கள் அதிகரித்திருப்பதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.
கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 10க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் புகுந்த திருடர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்டதுடன் ஐந்தாறு வீடுகளில் மடிக்கணினி, நவீன ரக தொலைபேசிகள், சைக்கிள்கள், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.
உடைமைகளைப் பறிகொடுத்தவர்கள் மறுநாள் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாடுகளை மேற்கொள்வதும், பொலிஸார் வருகைதந்து விசாரணைகளை மேற்கொள்வதும் காரைநகரில் வழமையான சம்பவமாக மாறியுள்ளது. இதுவரை எவரும் கைது செய்யப்பட்டதாக அறியமுடியவில்லை.
கடந்த திங்கட்கிழமை இரவு காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த மடிக்கணினி, தொலைபேசி உள்ளிட்ட பொருள்களைத் திருடிச்சென்றுள்ளனர். அன்றைய தினம் காரைநகர் பெரியமணல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளது.
அதேபோன்று கடந்த வியாழக்கிழமை இரவும் சுப்பிரமணியம் வீதியில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த கைத்தொலைபேசி, ரொக்கப் பணம் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட சொக்கலேட் உட்பட சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியானவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.
அத்துடன் இடைப்பிட்டியில் உள்ள பிறிதொரு வீட்டில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட போது வீட்டில் உள்ளோர் எழுந்து அபயக்குரல் எழுப்பியதும் அவர்கள் மீது கொட்டான் தடியை வீசிவிட்டுத் தாம் வந்த சைக்கிளையும் அந்த இடத்தில் விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.
கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் மாப்பானவூரியில் உள்ள பஸ் உரிமையாளரின் வீட்டிலும், நடுத்தெருவிலுள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டிலும் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் பணம் என்பன திருட்டுப்போய் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
திருட்டுக்கள் அனைத்தும் வீட்டில் உள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் மருந்து விசிறப்பட்டே திருடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. வீட்டில் உள்ளோர் மறுநாள் காலையில் எழுந்தே தங்கள் வீடுகளில் திருட்டுப் போனதை அறிந்து பின் பொலிஸ் நிலையத்துக்கு சென்று முறைப்பாடு செய்கின்றனர்.
இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக உரியவர்களிடம் எடுத்துக்கூறியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கவலை தெரிவிக்கும் மக்கள், காரைநகருக்குத் தனியான பொலிஸ் நிலையம் அமைக்குமாறும் பொலிஸாரை இரவு வேளைகளில் ரோந்துப் பணியில் ஈடுபடுத்துமாறும் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். (து-250)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உலக நீதி நிலைபெறுமா?

மனித உரிமை ஆணையாளராக இதுவரை இருந்து வந்த நவநீதம்பிள்ளை அம்மையார் தமது பதவிக் காலம் முடிவுற்று விடை பெற்றுக் கொண்டதையடுத்து அவர் இடத்துக்கு தெரிவாகியுள்ள புதிய மனித உரிமை ஆணையாளர் இளவரசர் அல்-ஹூசேன் இன்று மனித உரிமை சபையின் 27 ஆவது அமர்வில் தனது முதல் உரையை நிகழ்த்தவுள்ளார்.

அதற்கு முன்பதாக அவர் ஏற்கனவே வெளியிட்டிருந்த அறிக்கையொன்றில் மனித உரிமை ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கை குறித்த விசாரணைகளுக்கு தாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க விருப்பதாக அறிவித்திருப்பதுடன் இந்த விசாரணைக்கு இலங்கை அரசை ஒத்துழைப்பை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற நவநீதம்பிள்ளையும் இதே கோரிக்கையைத் தான் இலங்கையிடம் பல தடவைகளிலும் முன் வைத்திருந்தார். புதிய ஆணையாளர் பற்றி இலங்கையில் சமீப காலத்தில் வெளியிடப்பட்டு வந்த கருத்துக்கள் நகைப்புக்கு இடமானவையாக இருந்தன. நவநீதம்பிள்ளை ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டது போலவும் புதிய ஆணையாளர் இலங்கைக்கு ஆதரவாக இருப்பார் என்பது போன்ற கருத்துக்கள் தொனிக்கும் வகையிலும் அவை அமைந்திருந்தன.

ஆணையாளர் நவநீதம்பிள்ளையாக இருந்தாலென்ன இளவரசர் அல்-ஹூசேயினாக இருந்தாலென்ன அவர்கள் அவர்களுக்கென இருக்கும் சட்டதிட்டங்கள் வரையறைகளுக்கமைவாகவே செயற்படுவார்கள். நவநீதம்பிள்ளை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தென்னாபிரிக்கர் என்றமையால் இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்குச் சார்பாக செயற்பட்டவர் போன்று தென்னிலங்கைத் தலைவர்களும், தமிழர் விரோதக் கட்சிகளைச் சார்ந்தோரும் குற்றஞ்சாட்ட முனைந்திருந்தனர். அவ்வாறு அவர் செயற்பட்டிருப்பராகில் ஐ.நா. நியமங்களுக்குப் புறம்பாக நடந்து கொண்டார் என்பது கருத்தாகும். போர்க் குற்றங்கள் போலவே அதுவும் மாபெரும் குற்றமாக உறுப்பு நாடுகளால் பார்க்கப்பட்டிருக்கும். இலங்கைக்கு எதிராக இரண்டு முறை போர்க் குற்றங்களும் மனித உரிமை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும்படி கோரி தீர்மானங்கள் நிறைவேற்றிய நாடுகளால் ஐ.நா. நியமங்களை மீறி செயற்பட்டிருந்தால் நவநீதம்பிள்ளை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி அவரை வீட்டுக்கு அனுப்பியிருப்பது அவ்வளவு கஷ்டமாக இருந்திருக்காது.

அவருக்கு எதிராக தனிப்பட்ட முறையிலேயே இலங்கைப் பிரதிநிதிகள் மனித உரிமை சபையில் குறிப் பாக இலங்கை சார்பில் சிறப்பு பிரதிநிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருந்தார். அவைகளைப் பற்றி நவநீதம்பிள்ளை அலட்டிக் கொள்ளவும் இல்லை உறுப்பு நாடுகள் அக்கறை காட்டவும் இல்லை. மாறாக மனித உரிமை ஆணையாளர் என்ற முறையில் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்த அறிக்கையில் அடங்கியிருந்த அம்சங்களின் அடிப்படையிலேயே மனித உரிமைகள் சபை இரண்டாவது தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. அதன்படிதான் இப்போது சர்வதேச விசாரணையொன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விசாரணைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து ஒத்துழைக்கப் போவதில்லையென்று அறிவித்திருந்த அரசு இப்போது தானே ஏட்டிக்குப் போட்டியாக ஒரு விசாரணைக் குழுவை நியமித்து ஐ.நாவின் சர்வதேச விசாரணையை மழுங்கடிக்க முயன்று வருகிறது. அதுமட்டுமல்ல மனித உரிமைகள் சபையின் விசாரணைக்கு இலங்கையிலிருந்து எவரும் சாட்சியமளிப்பதையும் அரசு தடுக்க முயற்சிக்கிறது.

போரின் போதும் அதற்கு முன்பும் இடம்பெற்றுள்ள உரிமை மீறல்கள் தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு பல அமைப்புகளைச் சார்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் தயாராகி வருகிறார்கள். ஏன் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் கூட அந்த விசாரணையின் முன் தோன்றி சாட்சியமளிக்கத் தயாராய் இருப்பதாக அறி வித்துள்ளார். போர் உச்சக் கட்டத்திலிருந்த போது வெள் ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் கொல்லப் பட் டமை தொடர்பாக கடும் குற்றச்சாட்டுகள் உண்டு. இது மிகப் பெரிய போர்க் குற்றமாக எடுத்துக் கொள்ளப்படலாம். அதனை யார் செய்தார்கள் என்பதில் நிறையவும் முரண்பாடுகள் உண்டு. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெள்ளைக் கொடியுடன் வந்தவர்கள் தொடர்பாக தாம் கட்டளை ஏதும் பிறக்கவில்லையென்று கூறியதாக செய்தி வெளிவந்துள்ளது. அவ்வாறாயின் அவரது சாட்சியம் மிக முக்கியத்துவம் பெறுவதாகவும் பல விடயங்களைக் கிளறி விடுவதாகவும் இருக்கும்.

அதனால் தான் சர்வதேச விசாரணைகளில் சாட்சிய மளிப்பது தேசத்துரோகம் என்று அரச தரப்பினர் கூறி வருகிறார்கள் போலும். அவ்வாறு சாட்சியமளிப்பதைத் தடுக்கவும் சாட்சியமளிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு தரப்பில் ஆலோசிக்கப்படுவதாகத் தெரிகிறது.

எதுவானாலும் மனித உரிமை ஆணையாளர் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடரவே போகின்றன. அதனை புதிய ஆணையாளரும் கொண்டு நடத்துவார் என்றும் தெரிகிறது. எந்த வகையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் அவைகளுக்கு காரணமாக இருந்தவர்களுக்குத் தண்டனையும் கிடைக்க வேண்டும். அதுவே உலக நீதியாக இருக்கும்.

# அஹிம்சையை மதிக்குமா இலங்கை அரசு?

சேரலாதன்

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப் பட்டு வரும் இலங்கை அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் முடிவுக்கு வந்தாக வேண்டும். தவறின் ஜனவரி மாதத்தின் ஆரம்ப தினத்திலிருந்து தாயகப் பிரதேசம் எங்குமே அஹிம்சைப் போராட்டம் வெடிக்கும். மேலும் வடக்கு- கிழக்கு இணைந்த இறைமையுள்ள அரசு அமையும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும். இவ்வாறு வவுனியாவில் இடம் பெற்ற தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள், நில அபகரிப்பு, திட்டமிட்ட வகையில் ஏற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், காணாமற் போனோர்கள் விடயத்தில் அரசு காட்டும் அசிரத்தை, தமிழர் பிரதேசங்களில் இடம் பெறும் படையினரின் அத்துமீறிய நடவடிக்கை என்பன தொடர்பாகவும் இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனநாயக வழிமுறைகளின் கீழ் இயங்கி வரும் ஒரு கட்சி என்ற வகையில் தமிழரசுக் கட்சி அஹிம்சைப் போராட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. அஹிம்சைப் போராட்டம் என்பது தமிழரசுக் கட்சிக்குப் புதிதான ஒன்றல்ல. தந்தை செல்வா அதன் தலைவராக இருந்த போதே தமிழர்களின் உரிமைகளைப் பெறும் நோக்கில் பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக அறிவிக்கப்பட்டமை, சிங்கள ஸ்ரீயை வாகனங்களில் பொருத்துவதற்கான நடவடிக்கை, தமிழர்கள் மீதான அடக்குமுறைகள், தமிழர் தாயகத்தில் அரசின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் இவ்வாறு பல்வேறு அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து தமிழரசுக் கட்சி அவ்வப்போது ஜனநாயக வழிமுறையிலான அஹிம்சைப் போராட்டங்களை நடத்தியுள்ளது. ஆனால் இந்தப் போராட்டங்கள் இன வெறி ஒன்றையே பிரதான நோக்கமாகக் கொண்ட சிங்கள அரசுகளின் கண்களைத் திறக்கவில்லை. 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் 1970 இல் இருந்து 1977 வரை ஆட்சியில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் எதிர்க்கட்சி அந்தஸ்தைக் கூடப் பெற முடியவில்லை. ஆனால் அப்போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட அதிக நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றதால் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவொரு முதலும் கடைசியுமான சாதனையாகும். இதைக் கூடப் பொறுக்க முடியாத இனவாதிகள் தமிழர் ஒருவர் இனிமேல் ஒரு போதுமே எதிர்க்கட்சித் தலைவராக வரக்கூடாது என்ற எண்ணத்தில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை அறிமுகம் செய்தனர்.


நாடு இன்றுள்ள நிலையில் அஹிம்சைப் போராட்டங்கள் எந்த அளவுக்கு மதிக்கப் படப் போகின்றன என்பதைத் தமிழர்கள் அறிவார்கள். காணாமற் போன தமது உறவுகளுக்காகக் குரல் கொடுத்தவர்களைத் தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்திருக்கும் இலங்கை அரசு ஜனநாயக விழுமியங்களின் பேரில் எள்ளளவும் மரியாதை வைத்திருக்காத நிலையே தொடருகின்றது. போர் இடம் பெற்ற போது அதனைக் காட்டிக் காட்டியே தமிழர்கள் மீது அடக்குமுறைகள் ஏவி விடப்பட்டன.

ஆனால் போர் ஓய்ந்து அமைதி நிலவுவதாகக் கூறப்படும் தற்போதைய தருணத்திலும் தமிழர்கள் பல்வேறு வகையிலும் அடக்குமுறைகளுக்கு ஆளாகி வருகின்றனர். பருவமடைந்த ஒரு பெண்பிள்ளையின் பூப்புனித நீராட்டு விழாவை வீட்டில் நடத்தும் போதும் கூட அங்கே படையினரும், இராணுவப் புலனாய்வாளர்களும் அழையா விருந்தாளிகளாக நுழைந்து நோட்டம் விடுவதாக சமாதானப் பேரவையின் அறிக்கையொன்றில் தெரிவிக்கும் அளவுக்கு நிலைமை மோசமானதொரு கட்டத்தை எட்டியுள்ளது. கொழும்புக்குச் சென்று கொண்டிருந்த தமிழ் ஊடகவியலாளர்கள் பயணம் செய்த வாகனத்தில் கஞ்சா இருந்த தாகக் கூறி அவர்களை அவமதித்த செயல் மிகவும் பாரதூரமானது. ஆனால் அரசு இது தொடர்பாக அலட்டிக் கொள்ளவே இல்லை. இதனால் அரசுக்கும் இதற்கும் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இவ்வாறு அரசின் ஆதரவுடன் இடம்பெறும் தமிழர் மீதான தீய நடவடிக்கைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

அஹிம்சைப் போராட்டங்கள் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் பயன் தராது என்பதை உணர்ந்ததன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்திப் போரிட்டனர். இனக் கலவரங்கள் ஏற்படும் போதெல்லாம் அரசின் ஆதரவு பெற்ற குண்டர்கள் தமிழர்கள் மீது மேற்கொண்ட கொடிய தாக்குதல்களும், அழிவுகளும் தமிழ் இளைஞர்களின் இரத்தத்தில் சூடேற்றியதால் அவர்கள் ஆயுதங்களைத் தஞ்சம் அடைந்தனர். இதைவிட அவர்களுக்கு வேறொரு வழி தெரியவில்லை. தமது இனத்தின் மீட்சிக்கான போராட்ட மாகவே அவர்கள் இதனைக் கருதினர். ஆனால் இலங்கை அரசோ இதனையொரு பயங்கரவாதச் செயலாகச் சித்திரித்து பரப்புரைகளை மேற்கொண்டது. அதில் வெற்றியும் அதற்குக் கிடைத்தது.

இந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அஹிம்சைப் போராட்டங்களை நடத்தப் போவதாகக் கூறியுள்ளமை எந்த அளவுக்குச் சாத்தியமாகப் போகின்றது என்ற கேள்வியே தற்போது எழுகின்றது. இந்தியாவை அடிமைப்படுத் தியிருந்த வெள்ளையர்களுக்கு எதிராக அண்ணல் காந்தி மேற்கொண்ட அஹிம்சை முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் வெள்ளையர்களின் கண்களைத் திறந்ததால் இந்தியா சுதந்திரம் பெற்றது. நிறவெறி கொண்ட வெள்ளையர்கள் கறுப்புத் தோலையுடைய காந்தியின் அஹிம்சைக்கு மதிப்புக் கொடுத்தனர். அத்துடன் அவரது உயிருக்கு உத்தரவாதமும் வழங்கியிருந்தனர். வெள்ளையர்கள் இந்தியாவில் எத்தனையோ அட்டூழியங்களைப் புரிந்த போதிலும் காந்தியை மதித்தனர், அவரது அஹிம்சைக் கொள்கைக்கு மதிப்பு வழங்கினர்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் அஹிம்சைத் தத்துவங்கள் என்றோ செத்துப் போய்விட்டன. அஹிம்சைவாதிகள் பயங்கரவாதிகளாகவே இங்கு நோக்கப்படுகின்றனர். கொலையும், சித்திரவதைகளும், தடுப்புக் காவலும் தாரக மந்திரங்களாக மாறிவிட்டன. இந்த நிலையில் அஹிம்சை என்ற வார்த்தை வேப்பங்காயைக் கடித்தது போன்றதொரு கசப்பு உணர்வை ஆளும் தரப்புக்கு ஏற்படுத்தி விடுகின்றது. மூன்று தசாப்தங்களாக நீடித்த ஆயுதப் போர் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டு மதிப்பிட முடியாத அளவு சொத்துக்களை நாசம் செய்த போதிலும் தமிழர்களுக்கு எதுவுமே வழங்கக்கூடாது என்பதில் அரசு பிடிவாதப் போக்குடன் செயற்படுகின்றது. இந்த நிலையில் அஹிம்சைப் போராட்டங்களுக்கு அரசு மதிப்பு வழங்கும் எனத் தமிழர்கள் நம்பிக்கை கொள்வதில் பயன் கிடைக்குமா என்பது சந்தேகமே.







தமிழர்களின் உரிமைகளைப் பெறும் நோக்கில் பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக அறிவிக்கப்பட்டமை, சிங்கள ஸ்ரீயை வாகனங்களில் பொருத்துவதற்கான நடவடிக்கை, தமிழர்கள் மீதான அடக்குமுறைகள், தமிழர் தாயகத்தில் அரசின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் இவ்வாறு பல்வேறு அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து தமிழரசுக் கட்சி அவ்வப்போது ஜனநாயக வழி முறையிலான அஹிம்சைப் போராட்டங்களை நடத்தியுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர்
சிவமகாலிங்கம்

# தேரில் ஆரோகணிக்கின்றான் எம்பெருமான் சந்நிதி முருகன்

கோயில் என்றால் சிதம்பரத்தைக் குறிப்பது போலச் சந்நிதி என்றால் தொண்டமானாறு செல்வச் சந்நிதியையே குறிக்கும். ஈழத்து திருச்செந்தூர் என்று போற்றப்படும் திருத்தலமாகச் சந்நிதி முருகன் ஆலயம் திகழ்கிறது. பழைமையும் பெருமையும் மிக்க சந்நிதித் தலம் கந்தபுராண வரலாற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. முருகப் பெருமானின் தூதுவராகச் சூரனைச் சந்திப்பதற்கெனத் திருச்செந்தூரில் இருந்து மகேந்திரபுரிக்கு வருகை தந்த வீரவாகுதேவர் இங்கு தங்கி முருகப் பெருமானை வழிபட்டார் என்று கூறப்படுகிறது. தொண்டமானாறு வள்ளி ஆறு என்றும் கோயில் இருக்கும் இடம் கல்லடி என்றும் அழைக்கப்பட்டது. ராவக என்ற தவமுனிவர் சமாதி அடைந்த இடத்திலேயே ஆலயத்தின் தல விருட்சமாகிய பூவரசு காணப்படுகின்றது. சந்நிதியானின் அருளை நாடிவரும் பக்தர்கள் இந்த இடத்திலே அமர்ந்து பிரார்த்தனை, தியானம் என்பன செய்து முருகனை உள்ளம் உருகி வழிபடுவார்கள். சந்நிதியானின் பூவரச மரநிழல் ஞான பண்டிதன் நடனமாடித் திரிந்து அருள் விளையாட்டுக்களை நடத்தும் இடமாகத் திகழ்கிறது. மலை போலத் துன்பங்களைத் தாங்கி வரும் அடியவர்கள் இந்த நிழலில் இருந்து உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிந்து சந்நிதியானின் திரு வடிகளைத் தஞ்சமெனப் பற்றித் தீர்வுகள் கண்ட வரலாறுகள் பல உண்டு.

பக்தன் இறைவனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு வணங்கும் ஆலயமாக, அன்பின் மிகுதியினால் உரிமையுணர்வோடு முருகனை அடியவர்கள் வழிபடும் தலமாகச் சந்நிதியான் ஆலயம் உள்ளது. ஏழை பங்காளனாகத் திக்கற்றவர்களுக்குத் திசை காட்டும் தெய்வமாகத், தஞ்சம் என வந்தவர்களை அஞ்சேல் என்று அபயகரம் காட்டிக் காப்பாற்றும் காவலனாகப் பசிப்பிணி போக்கும் மருத்துவனாக, பலரின் உடற்பிணி நீக்கும் வைத்தியனாக, உளநோய் தீர்க்கும் உளவியலாளராக, பாவ வினைகளை அறுக்கும் பரம கருணாநிதியாக சந்நிதியான் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு ஆறுதல் தருகிறான். முருக பக்தராகிய மருதர் கதிர்காமரை கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்ற முருகன் அங்கே மேற்கொள்ளப்படும் பூசை முறைகளைக் காட்டி அந்த வழியிலே தன்னையும் பூசிக்கு மாறு பணித்தார். தமது வாயை வெள்ளைத் துணியான் கட்டி அறுபத்து நான்கு ஆலம் இலைகளில் காலையும் மாலையும் அமுது படைத்து விபூதி நிறைந்த தட்டில் கற்பூரத்தை வைத்து தீபம் காட்டிப் பயபக்தியுடன் கதிர்காமர் பூசை செய்து வந்தார். கதிர்காமரின் பரம்பரையில் வந்தவர்கள் ஆசார சீலர்களாக இன்றும் அந்த மரபிலேயே பூசைகளைச் செய்து வருகிறார்கள். முருகப் பெருமானுக்கு நிவேதித்த ஆலம் இலைப் பிரசாதமும், தீர்த்தமும், திருநீறும், தலவிருட்சமாகிய பூவரச மரத்தின் பழுத்த இலையும் தீராத வினைகளையும் தீர்க்க வல்லவையாக உள்ளன. சனிக்கிழமைகளில் சுத்தமான எள்ளில் இருந்து ஊற்றப்படும் நல்லெண்ணெய்யில் திருமுழுக்குப் பூசையும், மாலையில் பிட்டுப் பிரசாதமும் நிவேதிக்கும் வழக்கம் உண்டு.




கதிர்காமக் கொடியேற்றத்தின் போது சந்நிதி வேலவனுக்கு உழுத்தம் பிட்டு நிவேதித்து இங்கிருந்து முருகனை வழியனுப்பும் வைபவமும், கதிர்காமத் தீர்த்தத்தின் பின் முருகன் ஆலயத்துக்கு எழுந்தருளும் போது பயத்தம் துவையலும் இளநீரும் நிவேதித்து வழிபாடு செய்யும் மரபும் இன்றும் காணப்படுகிறது. சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து அடியார்கள் பாதயாத்திரையாக கதிர்காமம் சென்று முருகனைத் தரிசித்து வந்தார்கள். உடல் உபாதைகள் எதையும் பொருட்படுத்தாமல் முருக நாமத்தை உச்சரித்தபடியே திருவடி யாத்திரையாகக் கதிர்காமம் செல்லும் அடிய வர்கள் அங்கு சென்றடைந்ததும் ஆனந்தக் களிப்பில் தம்மை மறந்து ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் முருகனை வணங்கு வார்கள். "ஏழு மலையும் தாண்டி வந்த எங்களைத் தானே முருகன் ஏறெடுத்துப் பார்க்கையிலே தாண்ட வக்கோனே" என்று பக்திப் பரவசத்தில் ஆனந்தக் கூத்தாடி முருகனை வழிபடுவார்கள்.

உள்நாட்டுப் போரினால் சந்நிதி ஆலயச் சூழலும் சிதைவுற்றது. கோயிலின் மூன்று திசைகளிலும் 45 அன்னசத்திரங்களும், 36 கிணறுகளும், இரண்டு குளங்களும் இருந்தன. ஆயிரக் கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் உணவு உண்ணக் கூடிய முறையில் அன்ன சத்திரங்களும் அமைந்திருந்தன. இது வேறு எக்கோயிலிலும் இல்லாத விசேட அம்சமாகும். சந்நிதியில் "சோறு மணக் குதடா" என்று தவத்திரு யோகர் சுவாமிகள் சுறியிருந்தார்.

கோயிலின் தெற்குத் திசையில் தென்னை மரச்சோலையின் நடுவே மயில்வாகன சுவாமிகள் ஆனந்தாச்சிரமத்தினை மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். இவரின் சீடரான மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தினை நிறுவிச் சிறப்பாக நடத்தி வருகின்றார். அன்னதானப் பணியுடன் ஆச்சிரமத்தின் கலை பண்பாட்டுப் பேரவையால் சமய நிகழ்ச்சிகளும் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. " ஞானச்சுடர் ஆன்மீகப் பத்திரிகையைப் பல வருடங்களுக்கும் மேலாக வெளியிட்டு வருகிறார்கள். இன்று பல அன்னதான மடங்கள் ஆலயச் சூழலில் இயங்க ஆரம்பித்துள்ளன.

பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் எனப் பலரும் சந்நிதி ஆலயச் சூழலில் நடமாடித் திரிந்தார்கள். இன்றும் திரிகின்றார்கள். அவர்களுக்கூடாகச் சந்நிதி முருகன் அருள் வெளிப்பாடுகளைச் செய்வான். கடவுள் சுவாமிகள், கௌரிபாலா என்று அழைக்கப்பட்ட ஜேர்மன் சுவாமிகள், திருப்புகழ் சுவாமிகள் எனப் பல சித்தபுருஷர்கள் சந்நிதி ஆலயச் சூழலிலே நடமாடித்திரிந்தார்கள். போர்க்காலச் சூழலினால் பாதிப்புற்ற சந்நிதி ஆலயம் புனரமைக்கப்படுவதற்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும் சிவபதம் அடைந்துவிட்ட தவத்திரு முருகேசு சுவாமிகள் உறுதுணையாக இருந்து செயற்பட்டார்கள்.

காவடி, கரகம் ஆகிய கிராமியக் கலைகள் மிகச் சிறப்பாக நடைபெறும் இடமாகவும் சந்நிதி ஆலயம் திகழ்கிறது. பாற்காவடி, பறவைக் காவடி, ஆட்டக்காவடி, தூக்குக்காவடி எனப் பல காவடிகளை மஹோற்சவ காலத்திலே ஆலய வீதிகளில் காணலாம். கந்தா, முருகா, கதிர் வேலா, ஞானபண்டிதா, சந்நிதிவேலா என அடியவர்கள் முருகனைக் கூவி அழைத்தும், அங்கப் பிரதட்சணம் செய்தும், ஆடியும் பக்தி பூர்வமாக வழிபடும் காட்சியைச் சந்நிதியிலே காணலாம். சந்நிதி முருகனின் அடியவர்களின் கூட்டு முயற்சியினால் இந்திய சிற்பசாரியர்களின் துணையுடன் திருவாரூர் தியாகராஜப் பெருமானின் தேர் அமைப்பில் 1984 ஆம் ஆண்டு சித்திரத் தேர் அமைக்கப்பட்டது.

## ஆற்றங்கரை வாழ் அழகன்

ஆற்றங்கரையருகே அழகுறவே வீற்றிருந்து
தேற்றித் தீ வினையறுப்பான் செல்வச்சந் தியான்
ஏற்றிவிட்ட கொடியினிலே ஏறி நின்றுகொண்டு
அவன் மாற்றிடுவான் எங்களது மனத்துயரை
மால் மருகன்

அடியவர்க்கு நாளும் அன்னம் அளித்தருளும்
வடிவேல் அழகன் வாழ் செல்வச் சந்நிதியில்
முடியாத தொன்றில்லை முட்டியவன்தாள்
பணிந்தால் கொடியவினை அறுத்திடுவான்
குமரேச வள்ளலவன்

உள்ளம் உருக் குலைந்தால் உறுதுணை
யாயிருப்பான் கள்ளமறச் சிந்தையிலே காவல்
இருந்திடுவான்
வெள்ளப் புனலோடும் விளங்கு தொண்ட
மானருகே வள்ளி தெய்வ யானையுடன்
வரமருளும் வள்ளலவன்

இல்லார் தம் தமக்கு ஏற்றநல்ல உதவி செய்வான்
நல்லார் தமக்குமவன் நன்மை செய்யத்




துணையிருப்பான்எல்லோர்க்கும் அருள்வான்
எங்கள் தமிழழகனவன் புள்ளி மயில் ஏறிவரும்
பன்னிருகை வேலழகன் காண்

## பூவரசு பூச்சொரிய சிரித்திடும் வேலரசன்

ஆற்றங்கரையோரத்திலே
ஆலமரச் சோலையிலே
பூவரசு பூச்சொரிய வேலரசன்
சிரித்திருப்பான்.

அன்னவேலன் சந்நிதியில்
அமுதமலை நிறைந்திருக்கும்
அடியவர்கள் பசிதீர
அன்னவேலின் அருளிருக்கும்
அரோகரா என்றவர்கள்
வாழ்விலின்பம் நிறைந்திடுமே
அன்பு செய்யும் அடியவர்கள் தம்
பண்பாடும் ஒளிர்ந்திருக்கும்.

பூக்களெல்லாம் வேலவனின்
திருவடியை அலங்கரிக்க
பூவின் வாசம் மனமாசை
முற்றிலுமாய் நீக்கிடும் காண்
பூக்கள் நிறை மாலைகளால்



வேலனவன் எழில்
ஜொலிக்கும்
பூவுலகில் நம் வாழ்வு மாண்பு
பெற்றுச் சிறப்புறும் காண்

துரை கணேசமூர்த்தி



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**:வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன்தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேல் அதிகாரிகள் மூலம் கிடைக்கும். பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும்.



**இடபம்**: உஷ்ணம் தொடர்பான நோய் தாக்கம் ஏற்படலாம். வீண் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தாராளமாக பணம் செலவு செய்து தேவையானவற்றை வாங்குவீர்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.



**மிதுனம்**: மனதில் உற்சாகம் பிறக்கும். தேவையான உதவிகளும் கிடைக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். கல்வியில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். செல்வம் சேரும்.



**கடகம்**: கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புக்களை சமாளிக்கும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.



**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும். எப்படியும் செய்து முடித்து நல்ல பெயர் வாங்கி விடுவீர்கள். நிம்மதி ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் நீங்கும்.



**கன்னி**: உறவினர்கள் வருகையும் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும் எதிர்பாராத செலவும் உண்டாகும். கவனம் தேவை. முயற்சிகள் தாமதப்படும். விளையாட்டுக்களில் கவனம் தேவை.



**துலாம்**: துன்பங்கள் நீங்கி வாழ்க்கையில் இன்பம் உண்டாகும். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். உடைமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.



**விருச்சிகம்**: மறைமுக எதிர்ப்புகள் விலகும். எதிரிகளும் நண்பராவார்கள். வேலையில் முன்னேற்றம் உண்டாகும். உங்களுக்கு பின்னால் உங்களைப்பற்றி புறம் பேசியவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள். எதிலும் எச்சரிக்கை தேவை.



**தனுசு**: எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். உங்களுக்கு வரும் முன்கோபத்தைத் தவிர்ப்பது முன்னேற்றத்துக்கு உதவும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மகரம்**: எதிர்ப்புகள் நீங்கும். தொழில் வியாபாரம் சிறிது மந்தமான நிலையில் காணப்பட்டாலும் வருமானம் குறையாத நிலை இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம்.



**கும்பம்**: சக ஊழியர்களிடம் பேசும்போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும். பெண்களுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மீனம்**: கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. உங்களை எல்லோரும் நேசிப்பார்கள். எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.

## நாளை

**ஆவணி-24 செவ்வாய்க்கிழமை | 09.09.2014**

திதி: பூரணை மு.ப.08.19 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
பி.இ.03.46 வரை

சுபநேரம்: 10.34-12.04 வரை
இராகுகாலம்: 03.04-04.34 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## கடவுளிடம் நம்பிக்கையை விட சிறந்தது தன்னம்பிக்கை

"கடவுளிடம் நம்பிக்கையை விடத் தன்னம்பிக்கையே சிறந்தது. நாம் தன்னம்பிக்கையை இழந்து கொண்டே இருக்கிறோம். எமக்கு நேர்ந்த இன்னல் இதுதான். சீர்திருத்தவாதிகளுக்குநான் விடுக்கும் அறைகூவல் இதுவே. வைதீகர்களுக்குத் தங்களிடத்தில் நம்பிக்கையும் ஆற்றலும் மிகுதியாக இருக்கின்றன. ஆனால் அவர்களின் முறை சற்றுப் பண்பாடில்லாததாக இருக்கக்கூடும். ஆனால் சீர்திருத்தவாதிகளோ ஐரோப்பியர்களின் வலையில் சிக்கி அவர்களின் வீண் பெருமையை வளர்க்கும் கருவிகளாக உள்ளனர். ஏனைய நாடுகளின் பொதுமக்களைப் பார்க்கும்போது எமது மக்களைத்தெய்வங்களென்றே கூறவேண்டும். எந்தவொரு நாட்டில்தான் வறுமை என்பது குற்றமாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் அழகுடன் அறிவும் இணையப் பெற்றவர்கள். அவர்களை நாம் இடையறாமல் வெறுத்ததாலேயே அவர்கள் தன்னம்பிக்கை இழந்து விட்டார்கள்; தங்களைப் பிறவியிலேயே அடிமைகள் என்று கருதிறார்கள். அவர்களுக்குரிய உரிமைகளை அளித்து விடுங்கள். அவர்கள் தங்கள் சொந்த உரிமைகளைச் சார்ந்தே நிற்கட்டும். இது தான் அமெரிக்க நாகரிகத்தின் புகழுக்குக் காரணம். உடல் கூனி, பசியால் வாடி, கையில் ஒரு சிறிய கோலையும் ஒரு துணி மூடையையும் தாங்கிக் கப்பலிலிருந்து இறங்கி வரும் அயர்லாந்து மனிதனைக் கவனியுங்கள், சில மாதங்கள் அமெரிக்க நாட்டில் கழித்த பின்னர் அவன் நிமிர்ந்து அச்சமின்றி நடப்பதைப் பாருங்கள். தான் அடிமையாயிருந்த ஒரு நாட்டிலிருந்து தன்னை ஒரு சகோதரன் என்று கூறும் ஒரு நாட்டுக்கு அவன் வருகிறான்.

# விமானிகளைத் தாக்கும் தோல் புற்றுநோய்



விமானிகள் மற்றும் விமான ஊழியர்களுக்கு தோல் புற்றுநோய் அபாயம் அதிகரித்து வருவதாக ஆய்வறிக்கை ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

மற்றவர்களைவிட அவர்களுக்கு இந்த அபாயம் இரண்டு மடங்கு அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெலனோமா என்ற இந்த தோல் புற்றுநோயானது சாதாரண மக்களை விட விமானிகளுக்கும் விமான ஊழியர்கள்க்கும்தான் விரைவாகத் தாக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிக உயரத்தில் விமானம் பறக்கும்போது அவர்களுக்கு அயனி கதிர்வீச்சும் புற ஊதாக் கதிர்வீச்சும் அதிகளவில் தாக்குவதால் இந்த அபாயம் அதிகரிப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

9,000 மீற்றர் உயரத்தில் பறக்கும் போது தரையில் இருப்பதைவிட இரு மடங்கு அதிகளவில் புற ஊதாக் கதிர்வீச்சு அளவு இருக்கும் என்று சான் பிரான்சிஸ்கோவின் கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியரும், ஆய்வுக் குழுத் தலைவருமான மார்ட்டினா சான்லோரென்சா கண்டு பிடித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக 2 லட்சத்து 66 ஆயிரம் பேரிடம் 19 விதமான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் விமானிகளுக்கு 2.22 சதவீத அதிக அபாயமும், விமான ஊழியர்களுக்கு 2.09 சதவீத அபாயமும் உள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 5 |
| 4 | | 5 | 1 | 2 | 8 | | | 6 |
| 2 | 6 | | | | | 4 | 1 | |
| 5 | | | | 9 | | 1 | | |
| 8 | 7 | 9 | | | | 5 | 6 | 2 |
| | | 1 | | 7 | | | | 4 |
| | 5 | 6 | | | | | 4 | 7 |
| 1 | | | 4 | 6 | 7 | 3 | | 9 |
| 9 | | 7 | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 3 | 4 | 1 | 6 | 8 | 9 | 5 |
| 8 | 4 | 9 | 2 | 5 | 3 | 1 | 6 | 7 |
| 1 | 6 | 5 | 9 | 7 | 8 | 2 | 4 | 3 |
| 4 | 1 | 8 | 6 | 9 | 7 | 3 | 5 | 2 |
| 9 | 2 | 6 | 8 | 3 | 5 | 4 | 7 | 1 |
| 5 | 3 | 7 | 1 | 4 | 2 | 6 | 8 | 9 |
| 3 | 5 | 1 | 7 | 6 | 4 | 9 | 2 | 8 |
| 7 | 8 | 4 | 3 | 2 | 9 | 5 | 1 | 6 |
| 6 | 9 | 2 | 5 | 8 | 1 | 7 | 3 | 4 |

# தேசிய மட்டத்தில் யாழ். அணிகளுக்கு இரண்டாம், மூன்றாம் இடங்கள்

வலி.வடக்கு,செப்.08
இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடை பெற்ற ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

கொழும்பு வியாங்கொட சியான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் நேற்று முன் தினம் சனிக் கிழமை பகல் நடைபெற்ற போட்டியில் இரண்டாம் இடத்தை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பெற்றுக் கொண்டது. அத்துடன் மூன்றாம் இடத்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி பெற்றது.

இதில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி வட மாகாண மட்டத்தில் நடை பெற்ற போட்டியில் முதலாம் இடத்தையும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தன. கடந்த காலத்தில் தேசிய மட்டத்தில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிகள் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரி - 86-23)



இரண்டாம் இடத்தைப் பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி



மூன்றாம் இடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

## பயிற்றுனர்களுக்கான கற்கைநெறியில் வடமாகாண பயிற்றுனர்



யாழ்ப்பாணம்,செப்.8
சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனத்தின் தெற்காசிய பிராந்திய அபிவிருத்தி நிலைய இந்தோனேசியாவின் யகர்த்தவில் நடைபெறும் மெய்வன்மை பயிற்றுனர் மற்றும் விரிவுரையாளர்களுக்கான தரம் 1 இற்கான கற்கை நெறிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின.

நேற்று ஆரம்பமாகிய மேற்படி கற்கைநெறி எதிர்வரும் 14ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. குறித்த கற்கை நெறிக்கு வடமாகாணத்தைச் சேர்ந்த கதிரவேல் விஜிதரன் கலந்து கொண்டுள்ளார்.

இவர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் வவுனியா மாவட்ட மெய்வன்மை பயிற்றுனருமாவார். மேலும், சர்வதேச மெய்வன்மை சங்கத்தின் பயிற்றுனர் தரம் 1 மற்றும் தரம் 2 விசேட பயிற்சிகளில் விசேட சித்தி அடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி-23)

## தேசியமட்ட கபடியில் சம்பியனானது பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.செப்.8
புளோறன்ஸ்சின் அபார ஆட்டம் மூலம் வவுனியா பரக்கும்பா மகாவித்தியால அணியை வீழ்த்தி பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி வித்தியாலய அணி தேசிய மட்ட கபடிச் சம்பியன் ஆனது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா பரக்கும்பா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி வித்தியாலய அணி 16:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று தேசிய மட்ட சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து நொச்சிகம லிதர்ஷ மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 40:26 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

இதேவேளை 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கமுத்தேகம மத்திய மகா வித்தியால அணியை எதிர்த்து பருத்தித்துறை கலட்டி ஆர்.சி வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் கமுத்தேகம மத்திய மகா வித்தியால அணி 45:44 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ரி-23)




சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் சிறுவர்களுக்கான உதை பந்தாட்ட அடிப்படைப் பயிற்சி முகாம் கடந்த வெள்ளிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பமானது. அங்கு நடைபெற்ற சிறுவர்களுக்கான பயிற்சியை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட பயிற்றுனர்களுக்கான செயலமர்வின் போது. (ரி- 23)

# மட்டக்களப்பு அணி அபார வெற்றி



மாங்குளம்,செப்.7
மட்டக்களப்பு மாவட்ட அணியைச் சேர்ந்த அலெக்சனின் அபார துடுப்பாட்டத்தாலும், நிலுக்சாந்தின் நிதானமான துடுப்பாட்டத்தாலும் வுனியா மாவட்ட அணியை 156 ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றியீட்டியது மட்டக்களப்பு மாவட்ட அணி

பிறிமா வெற்றிக்கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டியின் 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட 15 வயது ஆண்களிற்கான சுற்றுப்போட்டி வவுனியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணியின் அலெக்சன், நிலுக்சாந் ஆகியோர் அசத்தலாக ஆடி வீசப்பட்ட பந்துகளை பவுண்டரிகளாகவும், சிக்ஸர்களாகவும் மாற்றி தமது ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தோடு அணியையும் பலப்படுத்தினர். இதனால் வவுனியா மாவட்ட பந்து வீச்சாளர்களிற்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்தது. இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மட்டக்களப்பு அணி சார்பாக அதிரடியாக ஆடிய அலெக்சன் 100 ஓட்டங்களையும், நிதானமாக ஆடியய நிலுக்சாந் 95 ஓட்டங்களையும், றுசாந் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வவுனியா அணி சார் பாக தாண்டிகா 9 பந்துப் பரிமாற்றங்களை வீசி 39 ஓட்டங்களைக் விட்டுக் கொடுத்து 4 இலக்குகளையும், றுசாந்தன் 9 பந்துப்பரிமாற்றங்களை வீசி 58 ஓட்டங்களைக் விட்டுக்கொடுத்து 2 இலக்குகளையும், பிரபோதயா 3 பந்துப் பரிமாற்றங்களை வீசி 23 ஓட்டங்களைக் விட்டுக் கொடுத்து ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

304 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களம் இறங்கிய வவுனியா அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது. மட்டக்களப்பு அணியின் பந்து வீச்சினை எதிர்கொள்ள முடியாமல் வவுனியா மாவட்ட அணியினர் தவித்தனர்.

இதனால் 40.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 154 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் வவுனியா அணி சார்பாக அணித் தலைவர் உசாந்தன் 44 ஓட்டங்களையும், சங்கீத் 18 ஓட்டங்களையும், பிரபோதயா, நிரூஜன் ஆகியோர் முறையே 15, 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மட்டக்களப்பு அணி சார்பாக றுகான் 10 பந்துப்பரிமாற்றங்களை வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், றிஸ்நாத் 10 பந்துப்பரிமாற்றங்களை வீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், நதீஸ் 7 பந்துப் பரி மாற்றங்களை வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கையும், மகீத் 7 பந்துப்பரிமாற்றங்களை வீசி 37 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கையும், நிறூத் ஒரு பந்துப் பரிமாற்றத்தை வீசி 12 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கையும், லுக்சன் 5 பந்துப் பரிமாற்றங்களை வீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இறுதியில் மட்டக்களப்பு அணி வவுனியா மாவட்ட அணியை 156 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது. (ரி-422)

# முத்தரப்புத் தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா




சிம்பாப்வேயில் நடைபெற்ற முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை தென்னாபிரிக்கா சுவீகரித்துக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா நிதானமாகவும் மந்தமாகவும் ஆட்டத்தை தொடர்ந்தது. இறுதி நேரத்திலும் பின்வரிசை வீரர்கள் கைகொடுக்காமல் போக 50 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 217 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது. துடுப்பாட்டத்தில் ஆரோன் பிஞ்ச் 54 ஓட்டங் களையும், ஜேம்ஸ் போல்க்னர் 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட னர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும், மோர்க்கல், பார்னல் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 218 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்கா 40.5 ஓவர்களில் 4 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை எட்டியது. இதன் மூலம் ஆஸ்திரேலியாவை 6 இலக்குகளால் தோற்கடித்து, தென்னாபிரிக்கா முத்தரப்புத் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

தென்னாபிரிக்க அணி சார்பில் தொடர் முழுவதும் சதம் அடித்து வந்த டு பிளசிஸ் 96 ஓட்டங்களையும், அம்லா 51 ஓட்டங்களையும், டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜோன்சன், மக்ஸ்வெல், பால்க்னர், சிமித் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்னும், தொடர்நாயகனாக தென்னாபிரிக்காவின் டு பிளசிஸ்ஸும் தெரிவானார்கள். (ரி)

## பொத்தம் அறிவுரை தேவையில்லை

ஐ.பி.எல். தொடர்பாக பொத்தமின் அறிவுரை தேவையில்லை எனத் தெரிவித்த பி.சி.சி.ஐ. செயலர் சஞ்சய் படேல், தங்களுக்கு ஆலோசனை வழங்க கவாஸ்கர், கபில் தேவ், ரவிசாஸ்திரி, டிராவிட் உள்ளிட்ட வீரர்கள் உள்ளனர் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் இயன் பொத்தம் ஐ.பி.எல். தொடர் குறித்து கூறுகையில்;கிரிக்கெட்டின் நீண்ட கால நலனுக்கு எதிராக, ஐ.பி.எல். பெரியளவில் உருவெடுத்துள் ளது. வீரர்களை அடிமைகளாக்கும் இத்தொடரால் சூதாட்டம் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. இதை ரத்து செய்ய வேண்டும் எனத் தெரிவித்து இருந்தார். இவரது கருத்துக்களுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள பி.சி. சி.ஐ. செயலர் சஞ்சய் படேல் கூறுகையில் :-

அமெரிக்காவின் பெரும் முதலீட்டாளர் ஆலன் ஸ்டான்போர்டுடன் இணைந்து. ஐ.பி.எல். போன்ற தொடரை ஆரம்பிக்க முயற்சித்தவர் தான் பொத்தம். வேறொரு பிரச்சினையில் சிக்கி ஸ்டான்போர்டு சிறை சென்றதால், இந்த முயற்சி தடைப்பட்டுப் போனது. இதற்கான ஆதாரம் உள்ளது.

அதையெல்லாம் விட்டுவிட்டு, முன்பின் ஆராயாமல் ஐ.பி.எல். குறித்து மடத்தனமாக பேசுகிறார். எங்களுக்கு இவரது அறிவுரை தேவையில்லை. எங்களுக்கு ஆலோசனை வழங்க கவாஸ்கர், கபில்தேவ், ரவி சாஸ்திரி, டிராவிட் உள்ளிட்ட வீரர்கள் உள்ளனர்.

ஒரு விடயம் குறித்து பேசும் முன், அது சரியா என முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க ஆண்டுக்கு இரண்டரை மாதங்கள், ஏனைய கிரிக்கெட் சபைகள் எப்படி வீரர்களை அனுப்புகின்றனர் எனக் கேட்கிறார் பொத்தம். இதனால் ஏற்படும் இழப்புக்களை சரிகட்டும் வகையில் சம்பந்தப்பட்ட கிரிக்கெட் சபைகளுக்கு ஆண்டுக்கு 60.30 கோடி ரூபா பி.சி.சி.ஐ. சார்பில் தரப்படுகின்றன. இதெல்லாம் தெரியாமல் கூறுகிறார் பொத்தம். இப்படிப் பேச இவருக்கு எந்த உரிமையும் கிடையாது இவ்வாறு சஞ்சய் படேல் கூறினார். (ரி)

## டெஸ்ட் ஆட்டங்களுக்காக பதவி விலகிய பெய்லி




ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ரி- 20 அணித்தலைவர் பதவியில் இருந்து ஜோர்ஜ் பெய்லி நேற்று பதவி விலகினார். டெஸ்ட் ஆட்டங்களில் கவனம் செலுத்துவதற்காகவே பதவியைத் துறந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ரி- 20 அணித் தலைவர் பதவியில் இருந்து ஜோர்ஜ் பெய்லி பதவி விலகியுள்ளார். அத்துடன் அவர் டெஸ்ட் ஆட்டங்களில் கவனம் செலுத்த விரும்புகிறார் என தெரிவித்துள்ளது. எதிர்வரும் 2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண ரி- 20 தொடருக்காக அணியைப் பலப்படுத்த ஆஸ்திரேலியா முயற்சி எடுத்து வருகிறது. அதனைக் கருத்திற் கொண்டும் டெஸ்ட் ஆட்டங்களில் தன்னை நிலை நிறுத்தி கொள்ள தான் விரும்புவதாக பெய்லி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரி விக்கையில் உலகக்கிண்ணத் தொடரில் புதிய வீரருக்கு அணித் தலைமைப் பதவி வழங்கப்பட வேண் டும் என்றும் அவர் தனது திறமையை வெளிக்கொண்டு வந்து தடத்தைப் பதிக்க வேண்டும் என்பதே என் விருப்பம் என்றும் கூறினார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வதேச ரி- 20 தொடரில் கலந்து கொள்ளும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் பெய்லி இடம் பெறமாட்டார் என்றும் எதிர்வரும் நவம்பரில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெறும் 3 ரி- 20 ஆட்டங்களில் அணியை தலைமை தாங்கவுள்ள வீரர் அடுத்தடுத்த வாரங்களில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் நியமிக்கப் படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ரி)

## அடுத்த வருடம் திருமணம் - தீபிகா



பொதுநலவாயப் போட்டியில் தங்கம் வென்ற ஸ்குவாஷ் வீராங்கனையான தீபிகா பல்லிகல், தினேஷ் கார்த்திக் உடன் நடக்கவிருக்கும் திருமணம் பற்றி மனம் திறந்து பேசியுள்ளார்.

இந்தியாவின் ஸ்குவாஷ் வீராங்கனையான தீபிகாவுக்கும், இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ்கார்த்திக்கிற்கும் கடந்த வருடம் நவம்பர் மாதம் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

இந்த நிலையில் தங்களின் திருமணம் கண்டிப்பாக அடுத்த வருடம் நடைபெறும் என தீபிகா தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், இந்த வருடம் திருமணம் நடக்க விருப்பதாக இருந்தது.

ஆனால் அடுத்து ஆசிய போட்டிகள் மற்றும் சில போட்டிகள் வரவிருப்பதால் அடுத்த வருடத்துக்கு திருமணம் தள்ளிப்போய் உள்ளது. அதே போல் தினேஷுக்கும் சில போட்டிகள் இருப்பதால் அவருக்கும் நேரமில்லை.

இந்தக் காரணத்தால் எங்கள் இருவராலும் பெற்றோருடன் பேசி குறித்த திகதியை முடிவு செய்ய முடியவில்லை. ஆனால் கண்டிப்பாக அடுத்த வருடம் திருமணம் முடிந்துவிடும். மேலும், அவர் இந்துவாகவும், நான் கிறிஸ்தவராகவும் இருப்பதால் நாங்கள் இருவரும் எங்கள் சொந்த மரபுகளை பின்பற்ற விரும்புகிறோம். அதனால் இரண்டு விழாக்கள் இருக்கும் எனக் கூறியுள்ளார். (ரி)

## இந்தியா, புதிய தெலுங்கானாவுக்கு வெற்றியை சமர்ப்பித்த சானியா



அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் அதன் வெற்றிக் கிண்ணத்தை இந்தியா மற்றும் புதிய தெலுங்கானா மாநிலத்துக்கு சமர்ப்பிப்பதாக ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்துள்ளார்.

கலப்பு இரட்டையர் போட்டியில் முதல் முறையாக ஜோடி சேர்ந்துள்ள சானியா மிர்சா மற்றும் பிரேஸில் நாட்டின் புருனோ சோர்ஸ் ஆகியோர் இறுதிப் போட்டியில் பங்கேற்றனர். இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற பின்பு சானியா கூறுகையில்; நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். புருனோவுடன் சேர்ந்து விளையாடி வெற்றி பெற்று இருப்பது பெரிய விடயம். நாங்கள் இருவரும் முதன்முறையாக ஒன்றாக விளையாடியுள்ளோம். கடந்த 2 வாரங்கள் மிகச் சிறப்பாக சென்றன. இந்த வெற்றியை என்னுடைய நாடான இந்தியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும், தெலுங்கானா மாநிலத்துக்கும் மற்றும் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமர்ப்பிக்கிறேன். நான் மகிழ்ச்சியின் உச்சத்துக்கு சென்றுள்ளேன். இது கனவொன்று நனவான விடயம். இன்னும் இது போன்று நிறைய வெற்றிகள் வரும் என நிச்சயமாக நம்புகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- சானியாவின் வெற்றிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரசிங் மோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற சானியாவை வாழ்த்துவதாக தனது டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்ட மோடி, சானியாவின் சாதனை நம்மை பெருமைப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ரி)

CMK

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் கந்தகோட்டதண்ணல்(கணேஷ்)



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Bremen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கந்தகோட்டதண்ணல் கடந்த (03.09.2014) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவலிங்கம்-மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், கலாதேவியின் அன்புக் கணவரும், சுதர்சன்,சபீசன், றஜிந்தா, லிசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் துளசிகா, சிந்துஜா, கரிகரன், துஸ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற செல்வராசா (இலங்கை), கதிரவேற்பிள்ளை (சுந்தரலிங்கம்- கனடா), பங்கயற்செல்வி (இலங்கை), வரதலட்சுமி (ஆஸ்திரேலியா), விஜய லட்சுமி (நோர்வே), ஆகியோரின் அன்பு சகோ தரனும் லோகேஸ்வரி, மீனலோஜினி, நித்தியானந்தன், அமிர்தலிங்கம், சிறிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அஸ்வின், ஆஸ்வி, நிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2014) பி.ப 3.00மணிக்கு ஜேர்மனியில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
24, வளாக வீதி, திருநெல்வேலி (51838)
நித்தியானந்தன் (மைத்துனர்), பங்கயற்செல்வி (சகோதரி).

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் விஜயபாலன்



இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் , ஜேர்மனியை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் விஜயபாலன் 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், இணுவில் மேற்கு விவேகானந்தன் (வெள்ளைத்தம்பி), விஜயேந்திரன், தனலங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புனிதத்தின் கணவரும் றொசான், சுபீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விலாசம் :
SIVAJOYAPALAN
Post Fach-5r
74825 Gundel sheim
Germany (51836)

தகவல்:
விவேகானந்தன்
(வெள்ளைத்தம்பி) (சகோதரன்)
0776169782

# மரண அறிவித்தல்

## வீரகத்தி தம்பையா



நெடுங்கேணி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி தம்பையா நேற்று (07.09.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும்,மகேஸ்வரி,இராசையா, செல்லத் துரை ஆகியோரின் சகோதரரும், கலையரசன் (சுவீடன்), அம்பிகாதேவி, கலைச் செல்வன் (ஆசிரியர் -ஹாட்லிக்கல்லூரி), கலைவாணன் (சுவீடன்), கலைவாணி (சுவீடன்), மதிவதனி (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி (சுவீடன்), சற்குணேஸ் வரன், ஜெயந்தி (ஆசிரியை - யா/செம்பியன்பற்று றோ.க.த.க. பாட சாலை), கவிதா (சுவீடன்),இந்திரகுமார் (சுவீடன்), சுந்தரமூர்த்தி (சுவீடன்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தங்கத்துரை (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல தனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுங்கேணி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
021 226 2034 (49767)(45.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.


# தொடர்ச்சிகள்

## இறைமையை

அந்த உரையில் போர் முடிவடைந்த பின்னர், இலங்கை அரசுக்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சின் போது முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

"2011 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி ஜனாதிபதி ராஜபக்ஷ குழுவினரிடம் முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் 13 ஆவது திருத்தம் பற்றி ஒரு வார்த்தை கூட இருக்கவில்லை. இதனை இராஜதந்திர வட்டாரங்களும் சர்வதேசமும் நன்கு அறியும். மத்திய அரசுக்குச் செல்லவேண்டிய 13 விடயங்களும், தன்னாட்சி மாநிலத்திற்கு தேவையான 51 விடயங்களும், தெளி வாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள வலுவான ஒற்றை யாட்சித் திட்டத்தின் காரணமாக தெளி வான - திட்டவட்டமான ஆட்சி அதிகா ரப்பகிர்வு சாத்தியமற்றது."- என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் இராஜதந்திர வெற்றிகள் தொடர்பில் சில விடயங்களை குறிப்பிட்டுள்ளார். "2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி அமெரிக்க இராஜங்கத் திணைக்களம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தது. சம்பந்தன் தலைமையில் அங்கு சென்றோம். 2009 இல் முடிவுக்கு வந்த போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள், மனிதாபிமான உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் எமது கருத்துக்கள் கேட்கப்பட்டன. சம்பந்தன் வழங்கிய பதில்களின் நம்பகத்தன்மையின் பேரில் ஐ.நா மனித உரிமைகள் சபையில், 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் போர்க்குற்ற விசாரணைப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டது.

போர்க்குற்ற விசாரணை தொடர்பில், அந்தப் பிரேரணை நாம் எதிர்பார்த்த அளவு நிறைவைத் தராது விட்டாலும் அதையாவது நிறைவேற்ற முடிந்தமை, பெரும் இராஜதந்திரச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் நிறைந்த நாடுகளினால் தான் நிறைவேறியது. இதனைக் கூட முறியடித்துவிட அரசு தரப்பு மட்டுமல்ல தமிழர் தரப்பிலும் எடுத்த முயற்சிகளை எல்லோரும் அறிவார்கள்.

சர்வதேச சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்தாது விட்டால் இலங்கை அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வென்றெடுத்துவிடும். சர்வதேச சந்தர்ப்பம் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்காது."- என்றும் தெரிவித்துள்ளார்.

"இன அழிப்பு தொடர்பான, நிலமீட்புத்தொடர்பான, பெண்களின் பாதுகாப்புத் தொடர்பான, காணாமற் போனவர்கள் தொடர்பான பிரேரணைகள் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். இந்த ஆணைக் குழு ஒன்று பிரேரிக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு ஒழிக்கப்பட்டு. 'மாநிலங்களின் அல்லது பிராந்தியங்களின் ஒன்றியம்' எனும் கூட்டாட்சித் தத்துவம் கொண்டு வரப்படவேண்டும். முழுமையான உச்ச அதிகாரப் பகிர்வொன்றில் தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களின் தன்னாட்சி உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும். ஆளை மாற்றுவதைவிட பேரினவாதக் கொள்கைகளும் அகற்றப்பட்டு தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும். 18 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு ஆகக் குறைந்தது 17ஆவது திருத்தமாவது மீட்கப்பட வேண்டும்"- என்றும் அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## வடக்கில்

முழுமையான விவரங்களையும் இளைஞர்கள் திரட்ட வேண்டிய அவ சியம் தற்போது எழுந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

"தற்போது இராணுவத்தினர் எமது குடும்பங்கள் அனைவரையும் பற்றி சகல விவரங்களையும் கணினியில் உள்ளடக்கி வருகின்றார்கள். எம்முள் பலருக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது. எமது உடல் கூறும் மொழி சம்பந்தமாக இராணுவம் ஆராய்ந்து வருவதைப் பற்றி ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதியுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன்.

ஒருவர் இருக்கும் விதம், சிரிக்கும் விதம், முறைக்கும் விதம், கைகால்களை அசைக்கும் விதம் எல்லாவற்றையும் படம் பிடித்து எடுத்து அவற்றில் இருந்து அந்த மனிதரை எடைபோடக் கூடியதாக விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. இந்தக் கலையில் இஸ்ரேல் நாடுதான் முன்னணியில் நிற்கின்றது. எமது அரசு அந்த நாட்டுடன் சுமுகமான உறவினைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது. ஆகவே இராணுவம் வடமாகாணத்தில் இருந்து புல்லுத் தின்று கொண்டிருக்கவில்லை என்பதை எமது மக்கள் உணர வேண்டும்.

எமது இளைஞர்கள் இராணுவம் பற்றிய சகல விவரங்களையும் சேகரிக்க வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளது. எங்கெங்கே, எத்தனைபேர், எவ்வளவு ஏக்கர் நிலத்தில் இருக்கின்றார்கள், என்னென்ன வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் போன்ற பல தரவுகளையும் பெற்றுக் கொடுக்க, எமது மக்கள் குறிப்பாக இளைஞர் - யுவதிகள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். எமது கட்சி முன்னர் போல் மேடைப் பேச்சு பேசுவதுடன் இருந்துவிட முடியாது - என்று தெரிவித்துள் ளார். (ற-5)

## கூட்டமைப்பின்

யத்திலே வல்லாண்மை வலுமிக்க பாரதம், அதன் பிரதமரிடம் கடந்த கால வெளியுறவுக் கொள்கையை விட இலங்கையில் தமிழ்த் தேசிய இனத்தின் தன்னாட்சியை நிலை நாட்டவும் சிறிய தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும் புதிய கொள்கையைக் கோரி நிற்கின்றோம். அது அவசியமெனக் கருதுகிறோம். எங்கள் ஜனநாயகவழிப் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும் என்று வேண்டி நிற்கின்றோம்.

சாத்வீகப் போராட்டங்களை நடத்துவதற்குத் தேவையான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஆகவும் செயலாற்றுவர் எனும் உணர்வோடு உரிமையோடு கூட்டமைப்பில் அங்கம் வகிப்பர். போராட்டத்துக்கான கட்டமைப்பை ஒருமைப்பாட்டோடு உருவாக்குவோம் என்பதை அறுதியிட்டுக் கூறிக்கொள்கின்றேன். இதன் பொருட்டு 'தேசிய சபை' உருவாக்குவதற்கு முன்னின்று உழைப்பேன் என்று உறுதியளிக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாடு ஒன்றும் இந்த ஆண்டில் நடத்த வேண்டுமென அழைப்பு விடுக்கின்றேன்" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## சுகாதார

சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் சமையலறைக் கழிவு நீரை பொது வடிகாலினுள் செலுத்தி சூழலை மாசடையச் செய்தமை, உரிமம் பெறாது உணவு உற்பத்தியில் ஈடுபட்டமை, உணவு உற்பத்தி செய்யும் பகுதி சுகாதாரமற்ற முறையில் காணப்பட்டமை, உடல் நலத்துக்கு ஒவ்வாத வகையில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்கள் சுகாதார பரிசோதகரால் அந்த உணவக நடத்துநர் மீது சுமத்தப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டுக்களை அதன் நடத்துநர் நீதிமன்றில் ஒப்புக் கொண்டார்.

அதனையடுத்தே அவரை இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதிக்க நீதிமன்று உணவு விடுதியைத் திருத்தி அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தலுக்காக வழக்கை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ற-4)


# வாழ்க தலைவா





தங்கத்தமிழரின் தாழ்ச்சி கண்டு
பொங்கி எழுந்தாய் சிறு பராயம்தொட்டு
எங்கு எம் இனத்திற்கு அநீதி உண்டோ
அங்கு உன் சிம்மக் குரல் அதிரும்

Best Wishes

தந்தை செல்வாவின் வளர்ப்பில் வந்தோய்
தானைத் தலைவன் அமிர் வழி நடந்தோய்
எங்கள் தமிழினம் வாழ்வதற்காய்
ஏற்றாய் தலைமையை வாழ்க வாழ்க

Best Wishes

நேற்று (07.09.2014) ஞாயிற்றுக்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்ற
**உயர்திரு மாவை. சோ.சேனாதிராசா** அவர்களின் தலைமை சிறக்கவும் தமிழினம் தலைநிமிர்ந்து வாழவும் வாழ்த்துகின்றேன்.

Congratulations!

திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்
தவிசாளர்,
வலிமேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

# மரண அறிவித்தல்

## திருமதி.எலிசபெத் சந்தியாப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)



புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. எலிசபெத் சந்தியாப்பிள்ளை நேற்று 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் சந்தியாப்பிள்ளையின் (கிளாக்கர் ஆயர் இல்லம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருட்சகோதரி அன்ரனீனா (அப்போஸ்தலிக்க கார்மேல் சபை) A.S அகஸ்ரின் (ஓய்வு நிலை ஆசிரியர் பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்பு சகோதரியும், அன்சிலி (பிரான்ஸ்) கிங்ஸ்லி (பிரான்ஸ்) லெஸ்லி (லண்டன்) வினித்தா (ஆசிரியை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பருத்தித்துறை) சிந்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயவதனி (பிரான்ஸ்) நித்தியா, சியாமா (லண்டன்) அன்ரன் உதயகுமார் (மருந்தாளர் - மாவட்ட வைத்தியசாலை மன்னார்) ஜோஸ்ரலின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்ரீபன், கிளென், டெல்பின், ஜொஸ்லின், டிசாந்தன், ஷறோனி, கிவானி, மஜோலின், ஹெரியன், ஜொனிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சூசையப்பர் ஆலய வீதி,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.




# 5 ஆம் ஆண்டு நினைவில் உதிரும் கண்ணீர்ப் பூக்கள்

## செல்வப் புதல்வன்

# ச. சந்துதன்

இன்பத்தில் எமை புகழவைத்த நாள்
02.07.2000

துன்பத்தில் எமை துவழவைத்த நாள்
08.09.2009



அன்பு மகனே ஆருயிர் புத்திரனே - சந்துதா
உமைப்பிரிந்து வாழும் நரகமான வாழ்வில்
ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்தது ராசா
ஐந்து ஆண்டுகள் என்ன ஆண்டுகள் எத்தனையானாலும்
கொடூரமான இந்த நாளின் கொடுமையை
மறக்கத்தான் முடியுமா ராசா.

உம்முடைய இழப்பிற்குப் பின் எமக்கு
எந்தத் துன்பம் எந்த இழப்பு எந்தத் தாக்கம்
எது வந்தாலும் அவை எம்மைத் தாக்குவதில்லை
இதைவிட இழப்பதற்கு எதுவுமே இல்லையடா கண்ணே.

உன்னுடன் வாழ்ந்த ஒன்பது ஆண்டுகளே
எமக்கு இன்பமான பொன்னான வாழ்க்கை
நாம் கண்ட காலங்கள் நீ இன்றிருந்தால்
எப்படி எப்படியெல்லாம் இருந்திருப்பாய் என்ற
கற்பனை எம்மை வாட்டி வதக்கி
கொண்டிருக்கெடா செல்லமே.

ஆத்மா அழிவதில்லை என்ற அசையாத நம்பிக்கையும்
பரத்திலே உமை வந்து காண்பேன் என்கின்ற
இறைவார்த்தையையும் நம்பி அதுவரையில்
நிழற்படத்தில் உமைப்பார்த்து
உம்மைக்காண வரும் இன்பமான நாளை எண்ணி
வாழ்கின்றாள் உன் அம்மா
நீ துயிலும் புனிதமான இல்லத்திலே வந்து
என்றாவது ஒருநாள் அப்பா என்று அழைத்து
பேசுவான் என்ற நம்பிக்கையோடு அனுதினமும்
உனைக்காண ஓடிவரும் உன் அப்பா.

படிப்பதற்கு வெளிநாடு சென்ற பெரிய சந்துவண்ணா
எப்போ வருவார் எங்களோடு இருக்க
எனக்கேட்கும் உன் தம்பிகள்
இவர்களுக்கு நீ கூறும் பதில்கள் தான் என்ன?
செல்ல மகனே.
எங்கள் எண்ணங்களை அறிந்து
நீ வரமாட்டாய் என்பதே நிஜம்
ஆனால் நாம் வந்து உமை சந்திக்கும் நாள்
வரையில் ஆறாத துயரோடு உன்னுடன் வாழ்ந்த
ஒன்பது ஆண்டுகளில் பெற்ற
இன்பத்தை எண்ணி எண்ணி வாழ்கின்றோம்.



உன் பிரிவினால் பரிதவிக்கும்
பெற்றோர் - சண்முகநாதன், அருள்நங்கை
சகோதரர்கள் - தேவசந்து, தேவசாத்வி
“லக்ஷ்மி” சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.


(C/16514)(7.6.3)

**கடை வாடகைக்கு**

Show Room/ office இடவசதி K.K.S Road சுன்னாகத்தில் (நூல் நிலையம் அருகாமையில்) புதிய கட்டடம் வாடகைக்குண்டு

தொடர்பு: 077 9419 341 (51835)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது குடும்ப குலவிளக்கு

அமரர்

**முத்தையா திலீபன்**

தோற்றம்
23 . 03 . 1987

மறைவு
11 . 06 . 2014

அன்பினில் சிறந்தவனாய்
அவனியில் உதித்து இல்லற வாழ்வில் நறுமணம் பரப்பி
உறவுகள் போற்றிடும் உத்தம புருசனாய்
பிறர் துயர்துடைக்கும் அன்புத் திலீபனாய்
விந்தைகள் புரிந்திடும் காரியவீரனாய்
எல்லையில்லா அரிய அன்புள்ளம் கொண்டவனாய்
இங்கிதமாய் வாழ்ந்திட்ட வேளை தன்னில்
கருணையில்லாக் காலனின் கண்கெட்ட செயலால்
இமைகள் மூடித்திறப்பதற்குள்
எல்லாம் முடிந்தது கதிகலங்கி நாம் தவிக்க
எங்கே சென்றாய்
மீண்டெழ முடியாமல் தவியாய் தவிக்கின்றோம்.
*அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தம்பகாமம், பளை. (51831)(4.3.6) குடும்பத்தினர்.

## பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்
13 . 06 . 1981



சந்நிதியான் அடியில்
25 . 08 . 1999

**செல்வி திருமகள் கனகசபை**

**திதி : சதுர்த்தசி**

மூவைந்து வருடங்கள் வாடாத மலராய் - இன்றுவரை
சந்நிதியான் திருவடியில் மலர்ந்திருக்கும் திருமகளே!
வாழும் வரை எம்மனையில் சொர்க்கத்தைக் காட்டிவிட்டு
எமைவிட்டு நீமட்டும் அங்கு சென்றதேனோ!

சூரியனாய் அஸ்தமித்து பௌர்ணமியாய் வலம் வந்து
எம்குலத்தை ஒளிரவைத்த - திருமகளே
தேரேறி வினை அறுக்க வந்த எம் வேலவன்
உன்னை மட்டும் தன்னிடம் அழைந்ததேனோ!
வான் இன்றி மண் ஏது! நீர் இன்றி கடல் ஏது!
நீ இன்றி நாம் ஏது! உன் நினைவால் வாடும்.


(51829)(7.6.3)

125, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா,
அண்ணாமார், தம்பிமார்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி கமலாம்பிகை சுந்தரலிங்கம்**



தோற்றம்
07.08.1928

மறைவு
24.07.2014

தாய் மனசு தங்கம் நான் அறிந்த தெய்வம்
நன்றி சொல்ல போதாதம்மா ஏழேழு ஜென்மம்
என்றென்றும் மாறாத சொந்தம்
தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
தாயைப் போன்றதொரு தெய்வமுமில்லை.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். 077 082 9763

ச.தியாகலிங்கம் (மகன்)
(இலங்கை வங்கி,
வட்டுக்கோட்டை)

(51827)(4.6.3)

## கைதடி கந்தசுவாமி தேர் இன்று

யாழ்ப்பாணம், செப் 8

கைதடி மேற்கு இணுங்கித் தோட்டம் கந்த சுவாமி கோயில் வருடாந்த திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. காலை வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு வள்ளி தெய்வானை சமேதராய் முருகன் தேரில் வீதி யுலா வருவார்.

நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பமான திருவிழாவில் நேற்று சப்பரத் திரு விழாவும் நேற்று முன்தினம் வேட்டைத் திரு விழாவும் சிறப்பாக இடம்பெற்றன. (ற-4)

## யாழ்.வலயக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், செப். 8

நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த யாழ்.வலயக்கல்வித் திணைக்களத்துக்குட்பட்ட அதிபர்களுக்கு மீளாய்வுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் வியாழக் கிழமை முற்பகல் 9 மணிக்கு பிற்போடப் பட்டுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் அன்றைய தினம் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று மேலும் அவர் தெரி வித்துள்ளார். (ற-4)

## பாரதியார் நினைவு நிகழ்வு இன்று

கரணவாய், செப்.8

மகாகவி பாரதியாரின் நினைவுநாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண் டபத்தில் இடம்பெறவுள்ளது. கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் இந்த நிகழ்வு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் அறிமுகவுரையை ந.தியாகராசாவும், பார தியும் அவரின் திரை இசைப்பாடல்களும் என்ற தலைப்பில் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ். வாசனும் உரையாற்றவுள்ளனர். (ற-108)

## சந்நிதி தேரை முன்னிட்டு கடைகள் நேற்றுத் திறப்பு

### நெல்லியடிப் பகுதியில்

கரணவாய், செப்.8

வரலாற்றுச் சிறப்பு மிக்க செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழாவை முன்னிட்டு நேற்று நெல்லியடியிலுள்ள வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் நடை பெற்றன.

சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை இடம்பெற வுள்ளது. அதற்கு ஊழியர்கள் செல்வதற்கு ஏது வாக நெல்லியடி வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங் கள் அனைத்தும் மூடி விடுமுறை வழங்கியுள் ளன.

அதனால் நேற்று ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்களுக்கு பொது விடுமுறையாக இருந்த போது ஆலயத்துக்குச் செல்லும் பக்தர் களின் நலன்கருதி நேற்று வர்த்தக நிலையங் கள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ற-108)

## சீரற்ற காலநிலையால் 24 வீடுகள் சேதம்

கொழும்பு, செப்.8

மொனராகலை மெதகம பகுதியில் இன்று பிற்பகல் வீசிய கடும் காற்றினால் 24 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

மரங்கள் முறிந்து விழுந்ததால் பிரதேசத் திற்கான மின்சார விநியோகமும் தடைப்பட் டதாக மொனராகலை மாவட்ட இடர் முகாமைத் துவ நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மத்திய மலைநாட்டிலும், நாட்டின் வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களி லும் அவ்வப்போது கடும் காற்று வீசுவதற்கான சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ற)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலக நிதிக்கிளையில் ஓய்வூதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி வே.ஜெயவாணி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சிவயோகநாயகி வேலாயுதம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதம கணக்காளர், கணக்காளர்
மற்றும் சக உத்யோகத்தர்கள், பணியாளர்கள்,
நிதிக்கிளை, களஞ்சிய நலன்புரிக் கிளை மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.

(51834)(10)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் உறுப்பினரும், மாவட்டச் செயலக நிதிக் கிளையின் ஓய்வூதிய உத்தியோகத்தருமாகிய செல்வி வே.ஜெயவாணி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவயோகநாயகி வேலாயுதம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

யாழ், மாவட்டச் செயலக
நலன்புரிக்கழகம்.

(51833)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்:
30.12.1952

மறைவு:
09.08.2014

கடந்த 09.08.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர்

**(திருமதி) கமலராணி விமலதாசன்**

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (08.09.2014) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில், அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

29, ஆஸ்பத்திரி வீதி,
யாழப்பாணம் (51830)

குடும்பத்தினர்.

## கல்வி மற்றும் தொழில்சார் வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு



"உயர்தரத்தின் பின்னர் மாணவர்களே நீங்கள் செல்லவேண்டிய பாதை....?? "

கொழும்பின் பிரபல விரிவுரையாளர்களினால் நடத்தப்படும் இலவசக் கருத்தரங்கு

10.09.2014 | 10.00 am

முன்னெடுக்கப்படும் விடயங்கள்

- சவால் மிக்க துறைகளில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கள் எவை?
- எமது தகைமைகள், தொழில்த் துறையில் வெற்றி பெற வழி தேடிக் கொள்வது எவ்வாறு?
- உங்கள் எதிர்காலத்திற்கும், பல்கலைக்கழகக் கல்விக்கும் உறுதியானவை எவை? அவற்றை இனங்காண்பது எவ்வாறு?
- நல்ல தொழில் வாய்ப்பைப் பெற மிகக்குறைந்த தகைமைகள் எவை?
- கற்பித்தல் நிலையமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை என்ன?

*பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டது
100 Seats ONLY
பதிவுகளுக்கு: உங்கள் பெயர், முகவரியை
077 55 888 95
09/09 ற்கு முன்னர் அனுப்பி உறுதிசெய்யுங்கள்

கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு
Rs.2500
கற்கைநெறிக்கான விசேட சலுகை

குறிப்பு: மாணவர்களுடன் பெற்றோர்களும் சமூகமளிக்க முடியும்

ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO COLLEGE
No.01, Kanagapuram Rd, Kilinochchi
021 228 5444

Sri Lanka's Largest Higher Education Network

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்கு அழைக்கிறார் மஹிந்த

கொழும்பு, செப்.8

ஐ.நாவின் புதிய மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்கு வருமாறு தான் அழைப்பு விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை வந்துள்ள ஜப்பானிய பிரதமர் ஷின்ஷோ அபேயிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஜப்பானிய பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற இருதரப்பு பேச்சின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கை அரசு ஐக்கியநாடுகளின் மனித உரிமைகள் சபையுடன் தொடர்ந்தும் பேச்சு மேற்கொண்டுள்ளது. புதிய மனித உரிமை ஆணையாளருடனும் பேச்சு மேற்கொள்ள அது தயாராகவுள்ளது. இதேவேளை புதிய ஆணையாளரை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதையும் ஜப்பானிய பிரதமர் பாராட்டினார். நல்லிணக்கத்தை நோக்கி அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டிய ஜப்பானியப் பிரதமர், சம்பந்தப்பட்ட சகலதரப்பினர் மத்தியிலும் பேச்சு இடம்பெறவேண்டியது நல்லிணக்கத்திற்கு அவசியமானது என்பதை வலியுறுத்தினார். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெறும் ஜப்பானின் முயற்சிக்கான இலங்கையின் ஆதரவிற்கும் நன்றி தெரிவித்தார்"- என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## தொடர்ச்சிகள்

### தமிழரசுக்

தனர். அதன்பின்னர் நடைபெற்ற கேள்விநேரத்தின்போது,

" வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர்களின் இருப்பையே இல்லாதொழிக்கும் தனது அடக்குமுறை நடவடிக்கைகளை அரசு நிறுத்திக் கொள்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி காலக்கெடு விதித்துள்ளது. இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் - அடக்கு முறை நடவடிக்கைகளை நிறுத்தி, நிலைமையைச் சீர்செய்வதற்கும் அரசியல் தீர்வை வழங்குவதற்கும் இலங்கை அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறுமானால் தைத் திங்கள் முதலாம் திகதி தொடக்கம் தமிழர் தாயகம் எங்கும் அஹிம்சைப் போராட்டம் தொடர்ந்து கட்டவிழும்" என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் விடுத்துள்ள அறிவிப்பு சம்பந்தமாக எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

"அஹிம்சை வழிப்போராட்டத்தை முன்னெடுப்பதற்குரிய உரிமை அக்கட்சிக்கு இருக்கின்றது. எனினும், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது. அத்துடன், தீர்வு விடயத்தில் மிரட்டல்களுக்கு அரசு அடிபணியாது"- என்றும் கூறினார் அமைச்சர் நிமல்.

அதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலைவருக்கு வாழ்த்து தெரிவித்து, பிரிவினைவாதக் கொள்கையை கைவிடுமாறு கோரும் அரசு,அரசியல் தீர்வு திட்டம் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இருதரப்பு பேச்சை நடத்தித் தீர்வை நோக்கிப் பயணிக்கலாம் அல்லவா என்று இதன்போது எழுப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

" கூட்டணி அரசில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு தரப்பிடமும் வெவ்வேறு கருத்துகள் இருக்கின்றன. எனவே, இருதரப்பு பேச்சை நடத்தி தீர்வு விடயத்தில் இணக்கப்பாட்டை எட்டினாலும் அது பற்றி மீளவும் இதரக் கட்சிகளுடன் கலந்துரையாட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அப்போது காலதாமதம் தான் ஏற்படும். எனவே தான், குறுகியவழியாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரசு பரிந்துரைசெய்தது. இதை விடுத்தல் தீர்வுக்கு மாற்று வழியில்லை. அத்துடன், இருதரப்பு பேச்சில் இறுதிமுடிவை எட்ட முடியாது என்பதே எமது கருத்தாகும். இவ்வாறு குறுகிய வழியிருக்கையில் காலத்தை இழுத்தடித்து, அரசியல் நடத்துவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருதரப்பு பேச்சை மீண்டும் மீண்டும் கோருகின்றது. அரசுடன் முரண்பட்டால்தான் அவர்களால் வடக்கு, கிழக்கில் அரசியல் நடத்தக்கூடியதாக இருக்கும்"- என்றார். (ற-சி)

### நெடுந்தீவிலிருந்து

லாற்றுச் சான்றுகளான குதிரைகளை வனவிலங்கு திணைக்களத்தின் அனுமதியுடன் வெளியில் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் குதிரைகளை யார் சரி வெளியில் கொண்டு செல்வதை அங்கீகரிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கடற்படையினரூடாக நெடுந்தீவில் இருந்து குதிரைகள் காரைநகர், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவத்தினரின் விடுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-7)

### சட்ட விரோத

தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க ஸ்ரீவர்த்தன. இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வெலிஓயா ஆகிய பகுதிகளில் நடக்கும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடனே இந்த விசேட பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து மக்கள் தகவல் வழங்கினால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி பிரிவுக்கு வழங்கும் தகவல்களின் இரகசியம் பேணப்படும். தகவல் வழங்குவோர் குறித்த விவரங்களும் வெளியிடப்படமாட்டாது. திணைக்களங்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பான சட்ட விரோத தகவல்களையும் வழங்க முடியும்.

0212290022, 0212290122 இலக்கங்களுடன் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் இரவு வேளைகளில் 0774784655 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும். div.mulaitivu@police.lk என்ற மின்னஞ்சல் மூலமும் தகவல் வழங்கலாம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### ஓட்டோவில்

பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த நபர் தற்போது நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

கஞ்சா எங்கிருந்து கிடைத்தது என்ற விவரங்களை சந்தேக நபர் வெளியிட மறுக்கின்றார் என்று பொலிஸார் கூறுகின்றனர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

### மோட்டர்

யில் மறைத்து வைத்துள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைடுத்து அங்கு சென்ற பொலிஸார் மோட்டருடன் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர். அவர் தற்போது 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

### கடை கதவு

இரவு நடந்துள்ளது.

கடையில் சுருக்குக் கதவுகளை உடைத்துக்கொண்டு உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த சிறுவர்கள், முதியோர்களுக்கான பால்மா உட்படப் பல பொருள்களை திருடிக்கொண்டு கடையின் பின்கதவுகளினூடாக தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை கடையை திறப்பதற்கு வந்த போதே திருட்டுச் சம்பவம் பற்றித் தெரிய வந்துள்ளது. உடனடியாக இந்தச் சம்பவம் பற்றி பருத்தித்துறைப் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ற-173-109)

### குழு

பின்னர் அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் மகேந்திரன் பிரபாத் (வயது-27), அருந்தவராசா பவீந்திரன் (வயது-20), சின்னத்துரை சிவரஞ்சன் (வயது-28), மனோகரன் மணிவண்ணன் (வயது-21) சிவசோதி சிவகுமார் (வயது-30) ஆகியோரே காயமடைந்தவர்களாவார். அவர்களில் பிரபாத் என்வரே கால் முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் விபத்துத் தொடர்பான பிணக்காலேயே மோதல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

### பணியாளரது

டும். அத்துடன் வரவுப் பதிவேட்டில் அவர்களது கையொப்பம் இடப்பட்டிருத்தல் அவசியமாகும்.

இது தொடர்பாக ஏற்கனவே தொழில் தருநர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் தொழிலாளர்கள் ஒத்துழைப்பு வழங்கினால் அதற்கான சட்ட நடவடிக்கைகளை எம்மால் மேற்கொள்ள முடியும். வரவு பதிவேடு இல்லாமல் பணியாளர்களுக்கான விடுமுறை மற்றும் சம்பளப் பிரச்சினைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

இதனை விட பணியாளர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகளை மூடும்படி எம்மால் கூற முடியாது. அதற்குச் சட்டமும் இல்லை. தொழில் தருநர்கள் தமது கம்பனி வேலை பளுக்களுக்கு ஏற்றவாறு விடுறையை ஏதோ ஒரு நாளில் வழங்க முடியும். ஆனால் ஒன்றரை நாள் விடுமுறை வழங்க வேண்டும். எனினும் விடுமுறை நாளில் தொழிலாளர் பணிக்கு அமர்த்தப்பட்டால் அன்றைய தினத்துக்கு ஒன்றரை மடங்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

பொது விடுமுறை நாள்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்கப்படுவதற்கு காரணம் அந்த விடுமுறை தொழிலாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதாலேயே. ஆனால் அந்த நாள்களில்தான் விடுமுறை வழங்க வேண்டும் என தொழில் தருநர்களிடம் கூற முடியாது.

இதேவேளை பணியாளர் ஒருவர் உணவு, நேரம் இடைவேளை ஒரு மணித்தியாலம் உட்பட 9 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும். இந்த நேரத்துக்கு மேலதிகமாக வேலை செய்தால் அந்த நேரத்துக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். அதனடிப்படையில் வாரத்தில் உணவுநேர இடைவேளை நீக்கலாக 45 மணித்தியாலங்கள் பணி புரிய வேண்டும். அத்துடன் போயா தின விடுமுறை நாள்கள் வேலை செய்தால் அவருக்கான கொடுப்பனவு சம்பளத்தில் ஒன்றரை மடங்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் பொது விடுறைகள் வருடத்தில் 8 விடுமுறைகள் உள்ளன. இந்த நாள் விடுமுறை வழங்கப்படாமல் பணி புரிந்தால் இரண்டு மடங்கு சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

இதனை விட பணிக்கு சேர்ந்து முதல் வருடத்தில் 14 நாள் விடுமுறையும், பணிக்கு சேர்ந்து 2 வருடங்கள் ஆனால் 21 நாள் விடுமுறையும் என மேலதிக விடுமுறைகளை பணியாளர்கள் எடுக்க முடியும். அதனை விட தொடர்ச்சியாக 5 வருடங்கள் பணியாற்றும் தொழிலாளருக்கு பணிக் கொடையும் வழங்கப்பட வேண்டும். அத்துடன் பணியாளர்களுக்கு நியமனக் கடிதங்களும், அவர்கள் விரும்பாவிட்டாலும் ஊழியர் சேமலாப நிதியமும் தொழில் தருநர்கள் கட்டாயம் வழங்க வேண்டும்.

இவற்றை நடைமுறைப்படுத்த தொழிலாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தமக்குப் பிரச்சினைகள் ஏற்பாட்டால் தொழில் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்ய முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-14)

### கொழும்புக்கு

"2009 ஆம் ஆண்டு மே மாதம் முதல், கொழும்பு அரசு, போர் வெற்றியின் அடிப்படையில் சர்வாதிகார முறையில் அது நடத்துவித்து வந்த அரசியல் இயந்திரம், பெருவாரியான வடமாகாண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாண சபை பதவி ஏற்றதும் அந்தச் சபை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் அல்லது எவ்வாறு அதனை நடத்துவிக்க வேண்டும் என்று தெரியாமல் திகைப்புற்றிருக்கின்றது.

அரசின் குழப்பம்

அதே நேரத்தில் வெளிநாட்டு சூழல், அயல்நாட்டு சூழல், உள்நாட்டு சூழல் என்பவை சற்று கரிசனை தந்து கொண்டிருப்பதால் அரச முக்கியஸ்தர்களைப் பொறுத்த வரையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். வடமாகாண முதலமைச்சரைப் பக்கத்தில் வைத்துத் தனிமையில் பேச வேண்டும் என்று சகோதரர்கள் இருவரும் காரணமில்லாமல் வெவ்வேறாகக் கருத்து வெளியிட்டிருக்க மாட்டார்கள்.

நல்லூர் முருகனின் திரு விழாக் காலத்தில் 'இன்னும் இன்னும் வலங்குவேன்', 'நீங்கள் முன்னேர வேண்டும்;', 'உங்கள் பிரதேசம் முன்னேர வேண்டும்' என்று ஜனாதிபதி தான் படித்த தமிழில் கூறியிருக்க மாட்டார். இது அரசின் குழப்ப நிலை.

எமது குழப்பம்

எமக்குள்ளும் ஒரு குழப்ப நிலை. தமிழ் மக்கள் உலகெங் கணும் இருந்து ஒருவரை ஒருவர் மூன்று வகையாகச் சாடி நிற்கின்றார்கள். 'இன்று தந்ததை எடு, தருவதை ஏற்றுக்கொள்', 'தலையெழுத்தை மாற்ற முடியாது', 'கிடைப்பதைச் சுருட்டிக் கொள்' என்று ஒருசாரார் கூறுகின்றார்கள். அவர்கள் கிடைப்பதைச் சுருட்டிக் கொண்டவர்களாகக் காலம் கடத்துகின்றார்கள். தீர்வோ கிடைத்தபாடில்லை. மேலும் ஒரு சாரார் முன்னர் ஒருவர் கண்ட கனவைத் தாங்கள் நனவாக்க முனைகின்றார்கள். முன்னர் கனவு கண்டவரின் கனவு நனவாகவில்லை என்பது பற்றி அவர்களுக்குக் கரிசனை இல்லை. அவ்வாறு கனவை நனவாக்க முனைபவர்கள் அதற்கான தந்திரோபாயங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவை அவர்கள் வசம் உள்ளதோ இல்லையோ நான் அறியேன்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முடிவு

ஆனால் கனவுகண்டவர்களின் ஆத்ம அனுசரணையாளர்கள் என்று தம்மை அடையாளம் காட்டிக்கொண்டு குட்டையைக் கிளறிக் கொண்டிருக்கின்றார்கள் சிலர். அவர்களின் சூரத்தனங்கள் நாம் இன்று நடத்திக் கொண்டிருக்கும் வடமாகாணசபையை 1988 ஆம் ஆண்டில் உருவான வட-கிழக்கு மாகாணசபையின் முடிவுக்கு எடுத்துச் சென்று விடுமோ என்று எண்ண வேண்டியுள்ளது.

மூன்றாவது சாரார் நிலைமையை முழுமையாக உணர்ந்து கொண்டு காலத்திற்கு ஏற்றவாறு, கருத்துக்கு ஏற்றவாறு கண்காணிப்புடன் கருமம் ஆற்றி வருகின்றார்கள். எனினும் அவர்கள் நோக்கிச் செல்லும் தீர்வு யதார்த்தமானது. எந்தவொரு நாடுகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை. அரசு அவர்களின் அறிவுரைகளை அனுசரித்தே செல்ல வேண்டியிருக்கும்.

எனவே வடமாகாணசபை வந்தமை பெரும்பான்மையினரை மட்டும் அன்றி எம்மையும் சில குழப்பங்களில் மாட்டி விட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சி

கட்சி பேதமின்றித் தமிழ் மக்களையும், தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களையும், தம்பால் ஈர்த்தே தந்தை செல்வா அரசியல் நடத்தினார். பெரும்பான்மை இனத்தவரிடையே பாகுபாடுக்கு உட்பட்ட சிங்கள மக்களுக்கும் குரல் கொடுக்கும் ஒரு கட்சியாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி அந்தக் கால கட்டத்தில் பரிணமித்திருந்தது. இதனை நாங்கள் மறக்கக் கூடாது.

இவை - முற்றாகப் பிரிந்து செல்வோம், முடிவாக நாம் பிரிந்து வாழ்வோம் என்ற ஆயுதமேந்திய குரல் ஒலிப்பதற்கு முன்னர் இருந்த சூழல். அதாவது அதிகாரத்தில் உள்ளவர்கள் தரமாட்டோம் என்றாலும் அவர்களின் தவறைச் சுட்டிக்காட்டினோம். ஆனால் தவறு செய்தவர்களைத் தண்டிக்க நாம் முன்வரவில்லை. இது அஹிம்சையின் வழி. ஆயுதப் போராட்டம் மௌனித்த நிலையில் எமது அந்தப் பாரம்பரியத்தை நாம் மனதில் எடுப்பது உசிதம் என்றதாலேயே அதனை இங்கு நான் குறிப்பிடுகின்றேன். ஆனால் அன்றைய நிலை வேறு இன்றைய நிலை வேறு.

மாற்று இலக்கு என்ன ?

ஒரேயொரு தீர்வு தான் உண்டு என்று அந்த இலக்கை நோக்கிச் செல்பவர்கள் அது கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும் மாற்றுவழியொன்றை மனதில் நிறுத்தாமல் எமது இளைஞர்கள் நுழைந்த பாதை இப்பொழுது எங்கே எங்களைக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது என்பதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

அரசின் போர் வெற்றி எப்பேர்ப்பட்ட ஒரு இயல்பை வட - கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தியுள்ளது என்பதை நாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வாதாரங்கள் இன்றி வாடும் நிலை, போர் எமது மக்கள் மனதில் ஏற்றிய பயம், பீதி ஆகியவற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்புநிலை, இராணுவ கட்டுப்பாட்டினுள் எமது மக்கள் இடருரும் நிலை, மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் பிறமாகாணத்தில் இருந்து கொண்டுவந்து வேற்று இனமக்களைக் குடியிருத்தும் நிலை, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் வலுவற்ற நிர்வாக நிலை, எமது சிறிது அளவான நிர்வாக அதிகாரத்தினுள்ளும் திவிநெகும என்ற சட்டம் செய்துள்ள ஊடுருவல் நிலை போன்ற பலதையும் எதிர் நோக்கும் நிலையில் மக்கள் உள்ளனர்.

எமது வடமாகாண சபை பல இடர்களின் மத்தியில்தான் தனது கடமைகளைச் செய்து வருகின்றது. இவ்வாறான நிலையில், சர்வதேசச் சூழல், அயல்நாட்டுச் சூழல் மேலும் உள்நாட்டிலும் எழுந்து வரும் சில சூழல்கள் எமக்கு சாதகமாக இருப்பதை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டுடன் எங்கள் உறவுகள், அறிஞர் அண்ணாத்துரை காலத்தில் இருந்து இன்று ஜெயலலிதா அம்மையார் காலம் வரையில் சுமூகமாக இருந்து வருகின்றதை இங்கு நான் சுட்டிக்காட்ட வேண்டும். எம்மைப் பிரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அந்தத் தொடர்பு என்றென்றும் இருந்து கொண்டே இருக்கும் - என்றார். (ற-5)



மட்டக்களப்பு குருக்கள்மடம் செல்லக் கதிர்காம ஆலயத்தில் புதிதாக வடிவமைக்கப்பட்ட திராவிட சித்திரத் தேரோட்டம், நேற்று இடம்பெற்றது. புதிய தேரானது யாழ்.திருநெல்வேலியைச் சேர்ந்த தனுஷா சிற்பாலயக் குழுவினரால் நிர்மாணிக்கப்பட்டது. (வ-10)



## விபத்துகள்

ஏறாவூர், செப். 8

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஆறுமுகத்தான்குடியிருப்பில் நேற்று நடைபெற்ற ஓட்டோ விபத்தில் அதில் பயணம் செய்த நால்வர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மட்டக்களப்பு கொழும்பு பிரதான நெடுஞ்சாலையால் சென்று கொண்டிருந்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த ஹோட்டலின் வழியாக நுழைந்து வீட்டுச் சுவரில் மோதியுள்ளது.

ஓட்டோவில் பயணித்த ஹிங்குறாணை பன்சல வீதியைச் சேர்ந்த கபில ரட்னாயக்க (வயது-45), அவரது மனைவி தம்மிகா ஜெயந்தி (வயது 43), மகள் நுவந்திக்கா (வயது-19) தந்தை பண்டார விமலதாஸ ஆகியோரே காயமடைந்த நிலையில் ஏறாவூர் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே விபத்தில் சிக்கி காயமடைந்துள்ள தமது உறவினரைப் பார்க்க வெலிக்கந்தைக்குச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து நிகழ்ந்ததாக ஓட்டோ உரிமையாளரான கபில ரட்னாயக்க தெரிவித்தார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை ஏறாவூர் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-10)

## பாடசாலை மாணவர் மத்தியில் எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்து

கொழும்பு, செப்.8

பாடசாலை மாணவர்கள் மத்தியில் எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை- இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த சில வருடங்களில் அதிகரித்திருப்பதை காண முடிவதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பற்ற உறவுகள் அதிகரித்திருப்பது, எயிட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய மேற்கொள்ளும் பரிசோதனைகள் அதிகரிப்பது என்பன எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை காட்டுவதற்கான காரணமாகும்.

2013 ஆம் ஆண்டு 196 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு 180 பேர் அடையாளம் காணப்பட்டனர். அத்துடன் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 110 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயிக்கு உள்ளான 95 வீதமானவர்கள் பாதுகாப்பற்ற உடலுறவு காரணமாகவே நோய்க்கு ஆளாகியுள்ளனர். இதனால், பாதுகாப்பற்ற உடலுறவுகளே நாட்டில் எயிட்ஸ் நோயாளர்கள் அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது.

15-25 வயதுக்கு உட்பட்ட எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்து இருப்பதை இது காட்டுகிறது என்றும் சிசிர லியனகோ குறிப்பிட்டுள்ளார். (வ)

# ஒலுவிலில் நடக்கும் அபிவிருத்தியால் மக்களுக்கு விடிவு ஏதும் இல்லை

## நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



அம்பாறை, செப்.8

ஒலுவில் கிராமத்தில் பல் கலைக்கழகம், துறைமுகம் போன்ற பெரிய அபிவிருத்தி திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் அவை மக்களின் விடிவுக்கு வழி வகுக்கவில்லை. மாறாக அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டு மிகவும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஒலுவில் பிரதேசத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற 'ஒலுவில் உயர்ச்சிப் பெருவிழா' நிகழ்வுப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறுகூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

"ஒலுவில் கிராமத்தில் எவ்வளவுதான் அபிவிருத்தி திட்டங்கள் வந்தாலும் ஒலுவில் பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம் என்று நாமம் சூடப்பட்டாலும் அந்தக் கிராம மக்கள் அவற்றுள் அனுபவிக்க எதுவுமில்லை என்ற கவலை காணப்படுகின்றது. ஒலுவிலின் மேற்கு விவசாயப் பிரதேசமான அஷ்ரப் நகரில் இராணுவத்தின் பிரசன்னமும் கிழக்குப் பகுதியான கடற்கரைப் பிரதேசத்தில் கடற்படைத்தளமும் நிலைகொண்டிருப்பது அந்த மக்களுக்கு பெரும் அவல நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் குறித்த பிரச்சினைகளுக்கு எல்லாம் நிரந்தரமான தீர்வினைப் பெற்றுத்தருவது கட்சிக்கு இருக்கின்ற தார்மீகப் பொறுப்பாகவும், தேவையாகவும், சவாலாகவும் இருக்கின்றது. அந்தப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு மாற்றீடாக ஆறுதலுக்காவது அரச தொழில் வாய்ப்புக்களில் இந்தக் கிராமத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்படாமல் புறக்கணிப்பு நடக்கிறது என்று சொல்லப்படுகிறது.

எனவே அவற்றுக்கெல்லாம் ஒரு முடிவுகட்ட வேண்டும். அவற்றையெல்லாம் நாங்கள் தீர்த்து வைக்க வேண்டியதொரு சந்தர்ப்பமாகவே அடுத்த கட்டத்தை எதிர்பார்த்து பொறுமை காத்து நிற்கின்றோம். அடுத்த கட்டமாக ஒரு தேர்தல் வருகின்றபோது அவற்றையெல்லாம் தீர்ப்பதற்கான ஒரு வியூகம் வகுக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வை பெற்றுத் தருவதற்கான பொறுப்பை அந்தத் தலைமை ஏற்க வேண்டும் என்பதில் நாம் விடாப்பிடியாக இருப்போம் என்கின்ற செய்தியை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி வைக்க விரும்புகின்றேன்' -என்றார். (வ-10)

## 'டைனமைற்' வெடிபொருள்களுடன் கைதாகிய 6 மீனவருக்குப் பிணை

மன்னார், செப்.8

மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் வைத்து 'டைனமைற்' வெடி பொருள்களுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்ட 6 மீனவர்களும் சரீரப்பிணையில் செல்ல மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோ அனுமதித்தார்.

**அவர்களிடம் இருந்து 2,700 கிராம் 'டைனமைற்' வெடி மருந்து மற்றும் 10 டிக்னேற்றர் குச்சிகள் ஆகியவை கைப் பற்றப்பட்டன.**

மன்னார் பனங்கட்டுக் கோட்டைச் சேர்ந்த 6 மீனவர்களை 'டைனமைற்' வெடிப் பொருள்களுடன் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து 2,700 கிராம் 'டைனமைற்' வெடி மருந்து மற்றும் 10 டிக்னேற்றர் குச்சிகள் ஆகியவை கைப் பற்றப்பட்டன.

இந்தநிலையில் குறித்த 6 மீனவர்களையும் கடற்படையினர் அன்றைய தினம் மு.ப. 10.30 மணியளவில் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வி. எஸ்.மெராண்டா தெரிவித்தார்.

குறித்த மீனவர்களிடம் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின் அன்றைய தினம் நண்பகல் மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோ முன்னிலையில் முன்னிலை செய்யப்பட்டபோது குறித்த 06 மீனவர்களையும் தலா 50 ஆயிரம் ரூபாய் சரீரப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

மீண்டும் குறித்த வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (வ-56)

# மின்சார சபையின் உப அலுவலகம் சாய்ந்தமருதில் அமைக்க தீர்மானம்

## கல்முனை மாநகர சபையால் நிறைவேற்றம்

அம்பாறை, செப்.8

இலங்கை மின்சார சபையின் கல்முனைப் பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தின் உப அலுவலகம் ஒன்றை சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைக்குமாறு கோரும் தீர்மானம் கல்முனை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த சபை அமர்வு மாநகர முதல்வர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தலைமையில் நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநகர சபை பிரதி முதல்வர் எம்.ஐ. எம்.பிர்தௌஸ் இதற்கான பிரேரணையை சமர்ப்பித்திருந்தார்.

பிரேரணையைச் சமர்ப்பித்து பிர்தௌஸ் உரையாற்றுகையில்;

கல்முனையில் இயங்கி வருகின்ற இலங்கை மின்சார சபையின் பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தின் உப அலுவலகம் ஒன்று சாய்ந்தமருதில் அமைக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். ஏனெனில் சாய்ந்தமருது பிரதேசம் மற்றும் அண்மித்த கிராமங்களான மாளிகைக்காடு, காரைதீவு, மாவடிப்பள்ளி உள்ளிட்ட பிரதேசங்களில் 12 ஆயிரத்துக்கும் அதிகமான மின் பாவனையாளர்கள் உள்ளனர்.

அவர்கள் மாதாந்த மின் கட்டணம் செலுத்துதல், மின் துண்டிப்பு, மீள் இணைப்புக் கட்டணம் செலுத்துதல் மற்றும் தேவைகளுக்காகப் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்துக்கே செல்ல வேண்டியுள்ளது.

எனவே குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்களின் நலன் கருதி கல்முனை மின் பொறியியலாளர் அலுவலகத்தின் உப அலுவலகம் ஒன்றை சாய்ந்தமருதில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை கோரிக்கை விடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாநகர சபையின் அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் இந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (வ-10)

## கிராண்கோவை பாதை பணிகள் இன்று ஆரம்பம்

அம்பாறை, செப்.8

ஒரு மில்லியன் ரூபா நிதியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள அம்பாறை கிராண்கோவை ஓடையாறு விவசாய பாதை வேலைகளை, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, இன்று ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இதற்கான நிதியை தேசிய காங்கிரஸின் தலைவரும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஒதுக்கியுள்ளார்.

இந்த நிகழ்வில், பொத்துவில் பிரதேச சபையின் உறுப்பினரும் அமைச்சர் அதாவுல்லாவின் இணைப்பதிகாரியுமான ஏ.பதுர்கான், பிரதேச செயலாளர் என்.எம்.எம். முஸாரத் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

NEW SCIENCE WORLD
Brown Road-Navalar Road Junction, Jaffna.
Day Classes 2015
வகுப்புகள் யாவும் 01.09.2014 திங்கள் முதல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பதிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது
13.09.2014 இற்குமுன் இணைவோருக்கு மட்டுமே அனுமதிக்கட்டணம்
20 பாடப்புத்தகங்கள் (தமிழ்-ஆங்கிலம்) மற்றும் VIDEO DVD இலவசம்!
வாரநாள் பிரிவுகள்
திங்கள், புதன் : 1.காலை 8-10 2. காலை 10-12
செவ்வாய், வியாழன் : 1.காலை 8-10 2. காலை 10-12
வார இறுதிநாள் (சனி, ஞாயிறு) பிரிவுகள்
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
எமது இறுதிப்பிரிவில் பயின்ற 3000 பேருக்கான சான்றிதழ்கள் வெகுவிரைவில் வழங்கப்படும்.
SAAMSON Experts in English Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

## வத்திக்கான் செல்லவுள்ளார் மஹிந்த

கொழும்பு, செப்.8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைவில் வத்திக்கானுக்குப் பயணம் செய்யவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜப்பான் பிரதமர் மற்றும் சீன ஜனாதிபதி ஆகியோர் இலங்கைப் பயணங்களை முடித்துக் கொண்டதன் பின்னர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வத்திக்கானுக்கு செல்லவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் ப்ரப்பாண்டவர் இலங்கைக்கு வரவுள்ளார். அந்தப்பயணத்துக்கான அழைப்பை நேரடியாக விடுக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி வத்திக்கானுக்குச் செல்லவுள்ளார். (ற)

MEDIA SOLUTION
HD VIDEO EDIT PRO SYSTEM I
i 7- 4th Gen 3.60 Ghz
Z87 saber tooth M\B
8 GB kingstan Ram
4 GB VGA
Blu Ray Writer
250 GB SSD Kingston
1000 GB HDD Westan Dgital
750 Watts Power Supply
189000
மிகக்குறைந்த விலையில்...
HD, SD, VIDEO EDITING
Blu Ray Writing
VHS To DVD
BLU RAY To DVD
Disk Printing
HD VIDEO EDIT SYSTEM II
i 7- 4th Gen 3.6Ghz
H 87-M E Asus M\B
8 GB kingstan Ram
2 GB VGA
DVD Writer
1000 GB HDD Westan Dgital
750 Watts Power Supply
117000
Meory Card
8, 16,32 GB CF Card 60mb\s
8, 16,32 GB SD 60mb\s
Pen Drive 8,16,32,64 Gb
BD, DVD,CD, களையும் பெற்றுக்கொள்ளலாம்
FREE
HD VIDEO EDIT SYSTEMS
கொள்வனவு செய்பவர்களுக்கு
HD VIDEO EDITING
Soft ware,
100 GB HD BACK ROUND
Nalin Information Technologies (PVT) Ltd.
No 195/3, Parameswara Junction, Palaly Road, Jaffna.
Phone- 0212221121/1166 0777667975





சிவமயம்
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
தென்னிந்திய திருத்தல தரிசனம்
(கோயில்கள் சுற்றுலாத் தலங்கள் உள்ளடக்கம்)



மலைக்கோட்டை உச்சிப்பிளையார், மதுரை மீனாட்சியம்மன், அழகர் கோயில், ஆயிரம்கால் மண்டபம், சுசீந்திரம், கன்னியாகுமரி, பகவதியம்மன், திருச்செந்தூர், இராமேஸ்வரம், இராமநாதசுவாமி கோயில், அக்கினிதீர்த்தம், 22 புனித கிணறுகளில் நீராடல், பிள்ளையார்பட்டி விநாயகர், திருச்சி, ஸ்ரீரங்கம், சமயபுரம் மாரியம்மன், ஆடிகும்பேஸ்வரர், சாரங்கபாணி கோயில், தஞ்சை பெரிய கோயில், திருவாரூர், கும்பகோணம், சீர்காழி, சிதம்பரம் நடராஜா, காஞ்சிகாமாட்சி, ஏகாம்பரேஸ்வரர் கோயில், வரதராஜப்பெருமாள் கோயில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர், மாங்காடு மாரியம்மன், திருவேற்காடு கருமாரியம்மன், பெங்களூர் சிவன் கோயில், மைசூர் மகாராஜ அரண்மனை, பொருட்காட்சியகம், பிருந்தா வனத்தோட்டம், நந்திக்கோயில், சாமுண்டேஸ்வரி கோயில், ஊட்டி தாவரவியல் பூங்கா, ஊட்டி ஏரி, திருக்கடையூர் அபிராமி, திருப்பதி, ஐம்பூதஸ்தலங்கள், ஆறுபடைவீடுகள், நவக்கிரக கோயில்கள், சென்னை சீரடிபாபா, அண்ணா, எம்.ஜீ.ஆர். நினைவு சதுக்கங்கள், மெரினா கடற்கரை மற்றும் சுற்றுலாத் தலங்கள்.
சென்னையில் ஒரு நாள் பொருள்கள் கொள்வனவு செய்ய ஒதுக்கப்படும்.

உள்ளடக்கப்பட்டவைகள்!
1. இரு வழி விமானக்கட்டணம் (Return Air Ticket all taxes)
2. உயர்தரத்திலான மூன்று நேர சைவ உணவு, காலை, மாலை தேநீர் மற்றும் குளிர்பானங்கள்.
3. சுத்தமான குடிதண்ணீர் (Minaral water)
4. குளியலறை இணைந்த தங்குமிட வசதி, (Attached Bathroom, Colour TV)
5. முழு சுற்றுலாவுக்கும் குளிரூட்டப் பட்ட சொகுசு பேருந்து
6. திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரப்படும்.
7. இருவழி விமான நிலையத்துக்கான கட்டணம். (Airport transport up & down)

Lion ப.பார்த்தீபன்
தொ.பே.: 077 1010 104
ik tourism
தரிசனம் : 15 நாள்கள் | புறப்படும் திகதி : 19.10.2014
கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

# மரண அறிவித்தல்



## திருமதி கண்மணி சங்கரப்பிள்ளை

யாழ்ப்பாணம், அனலைதீவைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை கண்மணி (அப்புச்சி) அவர்கள் 06.09.2014 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சரவணமுத்து-பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகேந்திரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர் களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, கணபதிப்பிள்ளை, கந்தையா, சின்னம்மா மற்றும் ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகலிங்கம், காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் பரமலிங்கம், கமலாம்பிகை, ஆனந்தலட்சுமி, கேதீஸ்வரன், தனலட்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் திலகவதி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் வதனி, தவேந்திரன் ஆகி யோரின் அன்பு மாமியாரும், சுரேஸ்குமார்-விஜயகௌரி, ராஜ்குமார் -ராஜேஸ் வரி, ரவீந்திரகுமார்-உஷாதேவி, ரமேஸ்குமார்-ரூபா, சிவகுமார்-ஸ்ரீதர்சினி, பிரியதர்சினி- கணேசலிங்கம், சுபாசினி, சதீஸ்குமார்- மணிமேகலை, அசோக்குமார்-நிஷாந்தினி, ஜெயவதனி-பஞ்சாட்சரம், ஜெயகௌரி-சிவசுந்தரம், விஜயமோகன் - சபாநந்தினி, ஜெயகீதா-ஸ்ரீரங்கன், விஜயகாந்தன், காண்டீபன், விதுஷினி-ரஜீவன், லக்ஷிகா, ரஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், ஆகாஷ், சப்திகா, சரோன், யோசான், யோகான், அஸ்விகன், அஷானி, அதீஸ், அபினாஸ், அப்சரன், அஷிகா, ஜஸ்வின், யனு, கபிஸ்சன், நக்சிக்கா, திசியா, விதுஸ், டிர்றுஸ், ஜஸ்வி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(51817)(4.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பிரதம குருவின் ஆசிச் செய்தி



கலியுகவரதன், கந்தவேள், வேலவன், வேல்முருகன் என பற்பல நாமங்களைக் கொண்ட முருகப்பெருமான் தொண்டைமானாற்றங் கரையில் செல்வச்சந்நிதியில் ஆற்றங்கரையான், அன்னதானக் கந்தன், கல்லோடைக்கந்தன், சந்நிதி முருகன் எனப் பல வடிவமாக வீற்றிருந்து தனது பல கோடி அடியார்கள் வேண்டுவதை ஈய்ந்து பிணியகற்றி பசிதீர்த்து இன்னும் பற்பல குறைகளை நீக்கும் அற்புத தெய்வமாக அருள்புரியும் முருகனின் திவ்யஷேத்திரத்தை ஈழத்துத் திருச்செந்தூர், சின்னக் கதிர்காமம் என்றும் அழைப்பர். கதிர்காமக்கந்தன் மாணிக்ககங்கை யருகில் இருந்து அருள் சுரக்க, செல்வச்சந்நிதி முருகன் தொண்டைமானாற்றங் கரையில் அடியார்கள் இன்னல் தீர்க்க அமர்ந்துள்ளார்.

வருடா வருடம் மஹோற்சவம் சிறப்பாக நடந்தேறி வருகின்றது. அந்த வகையில் இவ்வருட மஹோற்சவத்தின் அதி சிறப்பாக இரதோற்சவம் விளங்குகின்றது. இந்த இரதோற்சவத்தில் கலந்து வடம்பிடிக்கும் அடியார்கள் தமது பிறவிப் பிணியை நீக்கி வாழ்வில் உயர்வு பெறக்கூடிய உன்னதநிலையை அடைவீர்கள். ஆகவே இந்த இரதோற்சவப் பவனியைக் காணவரும் அடியார்களுக்கு எல்லாம் வல்ல சந்நிதிமுருகப் பெருமானின் திருவருட் கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.

ஆலய சிரேஷ்ட பிரதமகுரு,
வி.தெய்வேந்திரஐயர்.

## தேரேறும் ஆற்றங்கரையானின் அருள் வேண்டிப் பிரார்த்திப்போம்



ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல வடபால் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகிறது. அன்னதானக் கந்தனாக தொண்டைமானாறு ஆற்றங் கரையினிலே அருளாட்சி செய்து வருகின்ற சந்நிதிக் கந்தனின் மஹோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று இன்றையதினம் அன்னதானக் கந்தனுக்கு தேர்த்திருவிழாவாகும். வேண்டுவார் வேண்டுவன தருவான் எங்கள் சந்நிதி வேற்பெருமான். அடியவர்களின் அடியவனாய் இருந்து எம்மையெல்லாம் காத்தருளும் சிங்காரவேலன் தேரேறிவரும் அருளொளியின் பிரகாசம் எங்கெங்கும் பரவத் திருவுளங்கொண்டு வேலவனின் அருளொளி எங்கும் பரவட்டும். இவ் இரதோற்சவ நன்னாளில் சந்நிதி வேலவனை வழிபடவரும் அடியவர்களின் குறைதீர்க்க வரும் வேலாக "சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்" என்ற வாக்கிற்கு அமைய ஆற்றங் கரையான் அருள்பாலிக்க எழுந்தருளுகின்றான்.

சந்நிதி முருகன் அன்னதானம் கந்தன் மட்டுமல்ல அருளைப்பொழிகின்ற, அறிவைத் தருகின்ற, தீராத நோய்களை எளிதாய் தீர்த்தருளுகின்ற, அல்லல்களை அறுக்கின்ற அற்புத ஞானம் நிறைந்த வேலவனை வழிபட்டுத் திருவருள் பெற்று நாம் அனைவரும் சாந்தி சமாதானத்துடன் நலமோடு வாழப் பிரார்த்திப்போம்.

எந்நிதியும் தருவான் எங்கள் அன்னக்கந்தன்.

செ.மோகனதாஸ் சுவாமிகள்
சந்நிதியான் ஆச்சிரமம்,செல்வச்சந்நிதி,தொண்டைமானாறு.


மணமகள் அலங்கரிப்பு
ஃபேஷியல், ஐபுறோ திரெட்டிங்
உட்பட அனைத்து சேவைகளும்
மிகக் குறைந்த கட்டணங்களுடன்.....
தூரிகை
பியூட்டி பார்லர்
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி
T.P:0214901358, இயக்குநர்: 0779143171

சந்நிதி மெடிக்கல்ஸ்
சகல விதமான மருந்து வகைகளும்
பால்மா வகைகளும் நியாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
SANNITHY MEDICALS
Main Street, Point Pedro. T.P : 077 248 7230

கிருஸ்ணா வெதுப்பகம்
பாண், பணிஸ், கேக் வகைகள்
பிஸ்கற் வகைகள், பால்மா வகைகள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
புலோலியில் நாடவேண்டிய இடம்.
(7.6.3)
உரிமையாளர் : பா.சண்முகராசன்
சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி. T.P : 077 138 7240

SEYLAN BANK PLC
The bank with a heart
செலான் தங்க நகை அடகுச்சேவை
நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க தங்க கடன் சேவை தற்பொழுது செலான் வங்கியில் பவுணுக்கு 35,000.00 ரூபா வரையிலான அதி கூடிய முற்பண தொகையினை வழங்குவதோடு, மாதாந்தம் 1.5%மாக இருந்தவட்டி வீதம் தற்பொழுது 1.08% த்தில் இருந்து 1.25% வரையிலான அதி குறைந்த வட்டி வீதத்தையும் வழங்குகின்றது.
* உங்களுக்கு வேண்டிய தொகைப்பணத்தை மிக விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
* எந்த வகையான தங்க ஆபரணங்களையும் எம்மிடம் அடகு வைத்து பணத்தைப் பெற முடியும்.
* முன்னர் வழங்கியது போன்று தற்போது மீளவும் தங்க நகைகளுக்கு கூடுதலான பணத்தினை வழங்குகின்றோம்.
* எந்த விதமான தரகுப்பணமோ தண்ட வட்டியோ அறவிடப்படமாட்டாது.
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)
இன்றே வாருங்கள்.. நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க சேவையின் வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளுங்கள்..
முகாமையாளர்,
செலான் வங்கி, நெல்லியடிக் கிளை
T.P:021 226 2953/4

RAINBOW TILES STORES
றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி, சிலையடி, மந்திகை - புலோலி.
பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள்,
எஸ்லோன் பி.வி.சி பைப் வகைகள்,
கட்டடப் பொருள்கள், விவசாய மருந்து வகைகள்,
துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள் மற்றும்
மின்சாரப் பொருள்கள் என்பன
மலிவு விலையில் கொள்வனவு செய்யலாம்.
021 226 2696
077 869 5418

Easy Solutions
EASY SOLUTIONS
www.easysolutions.lk
கணனி விற்பனை திருத்தம்
லப்டொப் விற்பனை திருத்தம்
இணைய தள வடிவமைப்பு
இணைய விளம்பரம்
டொமைன் சேவர் இடவசதி
மென்பொருள் வடிவமைப்பு
நெற்வேர்க்கிங்
அன்ரிவைரஸ் தீர்வுகள்
MMV Road, Nelliady TP : 021 226 1120 , 0774386599

உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்.பிரதான **ஹொண்டா வேர்ல்ட்** காட்சியறை மற்றும் நெல்லியடி **ஹொண்டா வேர்ல்ட்** காட்சியறை இணைந்து நடத்தும்

**அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு -2014**

★ முதல் பரிசு HONDA Activa -i மோட்டார் சைக்கிள்

★ 10 பெறுமதியான ஆறுதல் பரிசுகள்.




ஜப்பான் உயர்தர தொழில் நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை விநியோகிக்கும் Stafford Motor.co (Pvt.)Ltd. இன் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்:

**HONDA WORLD**
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
077 0387444 / 021 226 4416

**HONDA WORLD**
214, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 0387 111 / 021 222 3316

**MAHY** Beauty Parlour



இந்தியாவில் சிறப்புப் பயிற்சி பெற்ற அழகுக்கலை நிபுணர் **மதி** ஆசிரியரால் அழகுக்கலை வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். நவீன கருவிகள் மூலம் பேசியல் சிகிச்சை மற்றும் சிகிச்சையும் செய்யப்படும்.

MAHY Beauty Parlour
1st Mile Post, Point-Pedro
T.P: 077 624 4880

**e Mobile & Lap Mart**

- Unlocking
- Spare Parts
- All kind of Cellular Phones Sales
- Software & Hardware Solutions
- Lap Accessories & Lap Repair

Main Street Nelliady
T.P: 021 226 1414

தரமானதும் சுவையானதுமான உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.


**அருள்நாயகி**

**சைவ உணவகம்**



பிரதான வீதி, நெல்லியடி.

**RK & Sons Electronics**



Dealers in All kind of Electronic & Gift Items Etc...

TV, Deck, DVD, CD Player, Radio, Dish TV, Washing Machine, Fan, Fridge, Grinder, Cassette Recorder, Oven, Rice cooker, Etc...

பரிசுப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் **உத்தரவாதத்துடன்** மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

R.K.& Sons, Electronics, No.120, Mainstreet, Nelliady.

**கலைவாணி** கண்ணாடிக் களஞ்சியம் **ரெக்ஸ்**



பிரதான வீதி, நெல்லியடி.
021 226 3161 / 0777 111 001

**ஜெயாஸ் ரெக்ஸ்**
118, பிரதான வீதி, நெல்லியடி.
077 988 2160

**Jeyas Tex**
118,Main Street,Nelliady.



தரமான 22 கரட் தங்கநகைகளைப் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்

**DORJA NAGAI PPOONKA**

**டுர்ஜா நகைப்பூங்கா**

(ஓடர் நகைகளைக் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளலாம்)



தொ.பே: 077 952 5392
கொடிகாமம் வீதி, நெல்லியடி.

***V. Manoharan***

Bicycle, Petrolmax, Building Materials, PVC Pipes, Paints, Ceramics, Electric goods Merchant


Chavakachcheri Rd, Manthikai Puloly. T.P :021 2264192

சகல விதமான கட்டட உபகரணங்களுக்கும் பெயின்ற் வகை களுக்கும், மின்சார உபகரணங்களுக்கும் நாடவேண்டிய இடம்.

**IEYNGARA KALANCHIYAM**

Main Street, Point Pedro.

**077 190 7478**



**தாஸ்**

**அலுமினியம் பிற்றிங்**



அலுமினியம் கதவுகள், யன்னல்கள், கிச்சின் அலுமாரிகள், பெட்றூம் அலுமாரிகள், ஹோல் சோக்கேஸ், ஜிப்சம் லெவல் சீற் வேலைகள், பாட்டிசன் வேலைகள் அனைத்தும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

**THASH ALUMINIYA FITTING & FRAMING**

PPD ROAD, NELLIYADY. T.P: 077 292 4741



கர்ப்பிணிப் பெண்களுக்கான ஆடை வகைகள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான பொருள்கள், பரிசுப் பொருள்கள், போட்டோ கொப்பி சேவையும் அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

மலிவு விலையில் செய்து கொடுக்கப்படும்.

**சாயிராம் மதர் & பேபி நீட்ஸ்**

(மந்திகை வைத்தியசாலைக்கு அருகில்)

Hospital Road,Manthikai.
T.P.: 021 300 1790

கந்தனை நாடுங்கள் கருணையைப் பெற்றிடுங்கள்

சிறீரங்கம் ரெக்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி.
பெற்றோல் செற் அருகில்
தொ.பே.: 021 226 2977
வதிரி வீதி, உடுப்பிட்டி.
தொ.பே.: 021 373 7455

Sellamuthus Textiles
Main Street, Nelliady, Karaveddy.
Tel: 021 226 3238

MATHU BABY NEEDS & MOBILE SHOP
மது பேபி நீட்ஸ் அன் மொபைல் சொப்
Dealers in Baby Needs & Mobile Phones
பிரதான வீதி, நெல்லியடி.
Email: mathubabynell@gmail.com
T.P: 021 226 2381
Main Steet, Nelliadi.
Mob.: 077 633 3210

பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
கீரன் பான்சி
இல.1-5-6, நவீன சந்தை, வல்வெட்டித்துறை.
தொ.பே : 077 344 1590

துஷானி
கிளாஸ் ஹவுஸ்
சகல விதமான ஹவுஸ் பேனிச்சர்ஸ், பிற்றிங் வேலைகள், கிளாஸ் வகைகள், மெத்தை வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்.
இல.114, பிரதான வீதி, நெல்லியடி
தொ.பே: 021 226 3076

வசந்தம் நெற் & மொபைல் பிளாசா
கணினி பழுதுபார்த்தல், கணினி உதிரிப்பாகங்கள், கையடக்கத் தொலைபேசி பழுது பார்த்தல் ஆகியன சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
வசந்தம் நெற் அன் மொபைல் பிளாசா
உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி. T.P:021 226 3508

சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்
Green Leaf Cream House
N.M.M.V.Road, Nelliady, Karaveday.
T.P: 077 377 3197

SBD செல்லாச்சி புத்தகசாலை
அப்பியாசப் புத்தகங்கள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் பலவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.
(7.6.3)
பிரதான வீதி, பருத்தித்துறை. T.P : 077 312 6894

நேசன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி
பலம், ஸ்திரம், கீர்த்தி, நாமம்
அதிகாரம் பெற்ற பொதுக் கம்பனி 2011 ஆம் ஆண்டு நிதி வணிகச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

விரைவான லீசிங்
* ஒரு மணித்தியாலத்தில் லீசிங் வசதி
* போட்டி போட முடியாத மிகக்குறைந்த ஆரம்பக் கட்டணம்
* வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப மாற்றி அமைக்கும் மாதாந்த தவணைக் கட்டணமுறை.

வாடகைக் கொள்வனவு (Hire Purchase)
- பதிவு செய்யப்பட்ட (2 nd hand) மோட்டார் சைக்கிள்களிற்கான லீசிங் வசதி
- பதிவு செய்யப்பட்ட வாகனங்களிற்கான லீசிங் வசதி
- வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப மாற்றியமைக்கும் மாதாந்த தவணைக்கட்டண முறை.

ரன் லங்கா அடகு சேவை
- அதிகூடிய முற்பணத் தொகை
- முன்னறிவித்தலின்றி நகையினை மீட்டுக்கொள்ளும் வசதி
- பகுதியாக நகைகளை மீட்டுக் கொள்ளும் வசதி.

"உதும்" சிறுவர் சேமிப்பு
- இன்றே உதும் சிறுவர் சேமிப்பு கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.... பெறுமதியான பரிசில்களைப் பெறுங்கள்.

கடன் வசதி
- தனிநபர் கடன் வசதி
- உயர் கல்விக் கடன்
- நுண்நிதிக் கடன் வசதி

நிலையான வைப்பு
- 25 வருட கால நம்பிக்கை
- அதிகூடிய வட்டி வீதம்

தொடர்புகளுக்கு: நேசன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி
இல.181, யாழ் வீதி, நெல்லியடி.
021 492 3508/09
த.மகிந்தன் :077 675 1134
வி.சரத்குமார்:077 198 7736
சி.முகுந்தன் :077 995 2024/077 743 4378

சகல விதமான அச்சு வேலைகளும் சிறந்த முறையில் குறிப்பிட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும்.
தீபன் பதிப்பகம்
உரிமையாளர் சி.தீபானந்
தொ.இல 077 652 0315
வி.எம்.றோட், பருத்தித்துறை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
theepanoffsetprinters@gmail.com

நெல்லியடியில் Pizza
★ திருமணம்,
★ பூப்புனித நீராட்டுவிழா,
★ பிறந்தநாள்,
★ ஒன்று கூடல்
போன்ற மங்கல கரமான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Vinmeen
RESTAURANT & BAKERY
Real Italian Pizza
Delivery Time : 11.00 a.m to 8.30 p.m
No.83, MAIN STREET, NELLIADI, KARAVEDDY
Tel 021 226 1051.

அனைத்து மருந்து வகைகளுக்கும்
பால்மா வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்.





# நெல்லியடி மெடிக்கல்ஸ்

N.M.M.V.Road,
Nelliady.



**021 226 2975**

## சந்நிதியான் திருமண சேவை

இப்பொழுது யாழில், இந்து /RC சகல ஜாதிகளிலும்
Specially குருகுலம் (உள்நாடு, வெளிநாடு) 12 வருடங்கள் அனுபவமிக்க
Best & Fast சேவைக்கு சந்நிதியான் திருமண சேவை.
Photo பூரண விவரங்களுடன் அணுகவும்,
சந்நிதியான் திருமண சேவை,
வேம்படி, வல்வெட்டித்துறை.
(7.6.3)
077 357 3055
Email : sannithiyanms@gmail.com

## தமிழ்ப் பூங்கா பதிப்பகம்
Tamil Poonga

சகலவிதமான அச்சு
வேலைகளும்,
அழைப்பிதழ்களும்
சிறந்த முறையில் செய்து
கொடுக்கப்படும்.

OFFSET PRINTERS (7.6.3)

Main Street, Nelliyady. Tel : 021 226 4014

# SINGER Plus



(C/1026)(10.6.3)

Point-Pedro Road, Nelliady. T.P: 021 226 4937

## ANNAI MUTHUMARI TRAVELSS

Point Pedro-Colombo
Point Pedro-
Jaffna-Colombo
A/C Video Coach




Colombo Seat
Reservation
Tel: 077 772 4053

Jaffna Vadamarachi Seat Reservation
Tel: 021 226 3770, 077 285 0285

(தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின்
அங்கீகாரம் பெற்ற சேவை)

www.pabcbank.com
(011) 4 667 222



# சம்மான

**ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கான கடன் வசதி**

- ரூ. 500,000 வரை கடன் வசதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- 5 வருட மீள் செலுத்தும் காலம்
- 70 வயது வரை கடனை மீளச் செலுத்தக் கூடிய வசதி

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(011) 4 667 222

பான் ஏஷியா வங்கி

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

## New Nelson Learners
## நியூ நெல்சன் லேணர்ஸ்

89, Kandy Road, Chundukuli, Jaffna.
T.P: 021 222 4527, 077 358 1916, 077 790 6064 Fax: 021 222 9109

- சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களிற்கும் அனுபவமிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள்.
- அதி கூடிய பிற்சி நேரங்கள், அதிகூடிய பயிற்சிக் காலங்கள்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.

**நவீன வாகனங்களில் வாகன பயிற்சிகள்**

கிளைகள்:

- இல.127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி கரவெட்டி, 021 492 3115, 077 111 3382
- காளிகோவில் வீதி, சாவகச்சேரி, 021 492 3114, 077 761 1686
- இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி, 021 222 4527, 077 358 1916
- பஸ் நிலையம், சுன்னாகம், 077 715 0097, 021 492 3732
- பிரதான வீதி, வல்வெட்டித்துறை, 077 557 3711, 021 492 3733



## புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து
# கூட்டுறவு

பதிவு இல:
J/1560/29-03-1971

தொலைபேசி இல:
021 226 3275

- கூட்டுறவுநகர் விற்பனை நிலையம்
- வாடகை சேவைகள் (கதிரை, பாப்பாட்டுக்கோப்பை, தண்ணீர்க் குவளைகள்)
- எரிபொருள் விற்பனை நிலையம்
- நுகர்ச்சி சேவை
- விவசாய சேவை
- போட்டோ பிரதி சேவை
- லொறி போக்குவரத்துச் சேவை
- பேக்கறி சேவை
- புடைவை விற்பனை
- கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி
- வாகன சுத்திகரிப்பு
- கிராமிய வங்கிச் சேவை
- இரும்பு விற்பனை

**புலோலி கிழக்கு, பருத்தித்துறை.**